# சுடர்

1978



கடல் கடந்த
தமிழ் மலர்

ரூ. 2



தில்லித் தமிழ்ச் சங்கம்

மலர் 23

## WORK IS WORSHIP

We believe in "Work is Worship"
Meeting the varied demands of
customers...Helping someone
stand on his feet....sending back
someone with a smile on his
face...This is our work.
Work which we worship.

# SYNDICATE BANK

.........Where Service is a way of Life
(Wholly owned by the Govt. of India)
Head Office : MANIPAL - 576 119,
KARNATAKA

*With best compliments from*

# M/s. Anil International

**Manufacturers, Importors, Exportors**

P.O. Box No. 5739

NEW DELHI - 110 055

528507
661799

Telex: 031-2056 ANIL IN
GRAMS: ''BURMAWOOD''
DELHI (India)

# கடல் கடந்த தமிழ்மலர்

*

சுடர் மலர் - 23

1978

*

தில்லித் தமிழ்ச் சங்கம்

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## 1978-ஆம் ஆண்டுச் செயற்குழு

தலைவர்
திரு சி. வி. நரசிம்மன்

துணைத் தலைவர்
திரு ஏ. ஜி. வி. சுப்பிரமணியம்

பொதுச் செயலாளர்
திரு பி. ஆர். வேங்கடகிரி

இணைச் செயலாளர்
திரு பா. இராம்ஜி

பொருளாளர்
திரு எஸ். எஸ். அனந்தகிருஷ்ணன்

இணைப் பொருளாளர்
திரு ஜி. எஸ். ராமசுப்பன்

உறுப்பினர்கள்
திரு எம். பாலசுப்பிரமணியன் திரு எஸ். ரங்கராஜன்
திரு சி. ஆர். வைத்தீஸ்வரன் திரு எஸ். செந்தாமரைக் கண்ணன்
திரு ஆர். பாலசுப்பிரமணியன் திரு கே. எஸ். குமரேசன்

வட்டாரச் செயலாளர்கள்
திரு சி. என். ரங்கநாதன்
திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி
திரு எஸ். வைத்தீஸ்வரன்
திரு எம். எஸ். சுப்பையா
திரு எஸ். சீனிவாசன்

நூலகர்கள்
திரு சி. என். ரங்கநாதன்
திரு என். சுந்தர்

தமிழ் வகுப்பு நடத்துநர்
திரு எச். பாலசுப்பிரமணியம்

தணிக்கையாளர்
திரு எஸ். ராமானந்த அய்யர்

சென்னைப் பிரதிநிதி
திரு அ. வே. கிருஷ்ணமூர்த்தி

சுடர் – மேற்பார்வை
திரு ரா. விசுவநாதன்

President's Secretariat
Rashtrapati Bhavan
NEW DELHI - 110 004
INDIA

Press Secretary to the
**President**

No. F. 2-M/78

January 5, 1979

Dear Shri Narasimhan,

Please refer to your letter of January 1, 1979. The President of India desires me to convey his best wishes for the success of the Literary Number 'Kadal Kadantha Tamil Malar' being brought out by the Delhi Tamil Sangam in January, 1979.

With regards,

Yours sincerely,

*(Sd.) A. M. Abdul Hamid.*

Shri C. V. NARASIMHAN
President,
Delhi Tamil Sangam,
Tamil Sangam Marg,
R. K. Puram,
NEW DELHI - 110 022.

Dr. P. C. CHUNDER
Education Minister
GOVT. OF INDIA
NEW DELHI

22 January, 1979

# MESSAGE

I note with deep interest that following the practice of previous years, the Delhi Tamil Sangam is bringing out its literary number "Chudar". The dominent theme of this issue will revolve round the development of Tamil and Tamil Culture abroad and their interaction with foreign languages. As contributors of mark and distinction are contributing to this issue, I have no doubt that the forthcoming issue, like its predecessors will be most illuminating and enlightening. I hope that this special number will enjoy a wide circulation and reach many readers in many homes in many countries.

I have great pleasure in taking this opportunity to convey my best wishes to the Sangam for every success in its venture.

(Sd.) P. C. Chunder.

Raj Bhavan
MADRAS - 600 022

Dt. 24—1—1979

# MESSAGE

I am glad to know that the Delhi Tamil Sangam is bringing out its annual literary Number ''CHUDAR'' in February 1979. I take this opportunity of paying my tribute of admiration to the Sangam for the dedicated service which it has been rendering to the cause of Tamil. I wish the Sangam every success.

*(Sd.) Prabhudas B. Patwari.*



# தில்லித் தமிழ்ச் சங்கம்

## வரலாற்றுச் சுருக்கம்

தில்லித் தமிழ்ச் சங்கம் 1946இல் நிறுவப்பட்டது. தலை நகரில் தங்கி வாழ்ந்துவந்த அக்காலத் தமிழன்பர்கள் தமிழ் இலக்கியம் பற்றித் தங்களுக்குள் முறையாகக் கூடிப் பேசவும், கேட்கவும், அதை வளர்க்கவும் எண்ணி இந்த அமைப்பைத் தோற்றுவித்தனர். தொடக்க காலத்தில் தில்லியின் மையப்பகுதி யான கனாட்பிளேசில் உள்ள ஒரு தென்னிந்திய உணவு விடுதியில் சங்கப் பணிகள் நடைபெற்று வந்தன. பின்னர், துருக்குமான் சாலையில் வசித்து வந்த ஒரு தமிழன்பர் நூலகத்துக்காகத் தமது இல்லத்தில் ஓர் அறையைக் கொடுத்துதவினர். மேலும் வசதி யான இடத்தைத் தேடி அலைந்த சங்க அன்பர்களுக்கு, கனாட் பிளேஸ் பகுதியிலேயே தில்லி மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு சிறிய கட்டிடம் மலிவு வாடகையில் கிடைத்தது. மூன்று அறை களைக் கொண்டிருந்த அக் கட்டிடத்தில், சங்க அலுவலகம், நூலகம், திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் பெயரில் ஒரு இலவசப் படிப்பகம் ஆகியவை தொடங்கப்பெற்றன.

ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டவுடன், சங்கப் பணிகள் பல துறைகளில் விரிவடைந்து வளர்ச்சி பெறலாயின. இலக்கியச் சொற்பொழிவு, கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மன்றம், கலந்துரையாடல் ஆகிய நிகழ்ச்சிகளோடு தமிழ்ப் பெரியார் களின் நினைவு நாட்கள், தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகியவற்றையொட்டிப் பெருவிழாக்களையும் சங்கம் ஆண்டுதோறும் கொண்டாடியது. அத்துடன் தமிழின் மேன்மையையும், தமிழர்களின் பண்பாட்டையும் பிறமொழி பேசும் மக்கள் உணர்ந்துகொள்வதற்கு ஏதுவாகத் தமிழ்வகுப்புகள் துவங்கப் பெற்றன. தமிழ் இலக்கியம், பண்பாடு பற்றிய புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன. அது போலவே, தமிழர்கள் இந்தி மொழியைக் கற்று அம் மக்களோடு நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்தோடு இந்தி வகுப்புகளும் நடைபெற்றன.

பெருகிவரும் சங்கப் பணிகளுக்கு ஏற்றாற்போல் சொந்தமான கட்டிடம் ஒன்றை எழுப்ப வேண்டும் என்ற சங்க அன்பர்களின் நெடுநாளைய கனவு 1969இல் நனவாகியது. தமிழக அரசு அன்புடன் வழங்கிய ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய், மத்திய அரசு அளித்த ஐம்பத்தையாயிரம் ரூபாய், தனிப்பட்டவர்களின் நன்கொடைகள், சிண்டிகேட் வங்கியின் கடனுதவி ஆகியவற்றைக் கொண்டு தில்லி மாநகரின் தென்பகுதியிலுள்ள இராமகிருஷ்ண புரத்தில் சங்கக் கட்டிடம் உருவாகியது. கட்டிடத்தின் கீழ்ப் பகுதியில் சிண்டிகேட் வங்கியும், முதல் மாடியில் சங்க அலுவலகமும் தமிழ் வகுப்பு, இலக்கியச் சொற்பொழிவுகளுக்கான அறைகளும், இரண்டாவது மாடியில் நூலகம், படிப்பகம், விருந்தினர் அறைகள் ஆகியவையும் அமைந்துள்ளன.

இன்று சங்கம் இராமகிருஷ்ணபுரத்திலுள்ள தலைமை நூலகத்தைத் தவிர கரோல்பாக் பகுதியில் ஒரு கிளை நூலகத்தை நடத்தி வருகிறது. நூலகத்தில் சுமார் பத்தாயிரம் புத்தகங்கள் உள்ளன. தலைமை நூலகம் விடுமுறை ஏதுமின்றித் தினமும் இயங்கிவருகிறது. இராமகிருஷ்ணபுரத்தில் உள்ள இலவச படிப் பகத்தில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் வெளிவரும் நாளிதழ்களும், வார, மாதம் இருமுறை, மாத இதழ்களும் இடம் பெறுகின்றன.

சங்கத்தின் முக்கிய விழாக்களில் ஒன்று பாரதி விழாவாகும். இவ் விழாவையொட்டி நடத்தப்படும் நினைவுத் திறனாய்வு, பேச்சு, கட்டுரை, இசைப் போட்டிகளில் பல நூறு மாணவ மாணவியர் ஆண்டுதோறும் கலந்து கொள்ளுகிறார்கள்.

குடியரசுத் தலைவர் திரு ஃபக்ருதீன் அலி அகமத், பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, டி. சஞ்சீவய்யா, சி. என். அண்ணா துரை, கு. காமராஜ், தமிழக ஆளுநர்கள் சர்தார் உஜ்ஜல் சிங், மோகன்லால் சுகாடியா, பிரபுதாஸ் பட்வாரி, மற்றும் மத்திய அமைச்சர்களான சி. டி. தேஷ்முக், டாக்டர் ப. சுப்பராயன், டாக்டர் கரன் சிங், இந்தர் குமார் குஜ்ரால், பா. ராமச்சந்திரன், லால்கிஷன் அத்வானி மற்றும் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் சங்கத்தின் பல்வேறு விழாக்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள்.

மாணவ, மாணவியரிடையே தமிழ் ஆர்வத்தையும் ஆற்றலை யும் வளர்க்கும் நோக்குடன் தில்லிப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருவேங்கடவன் கல்லூரியில் "சத்தியமூர்த்தி சொற்போட்டிச்

சுழற் கிண்ணம்'' ஒன்றையும், லேடி ஸ்ரீராம் கல்லூரியில் "தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா திருவள்ளுவர் சுழற் கோப்பை'' ஒன்றையும் சங்கம் வழங்கியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவருக்கு நூறு ரூபாய் பரிசளிக்கிறது. தமிழில் ஊக்கமுள்ள மாணவர் களுக்கு ஆண்டுதோறும் பரிசுத் தொகையும் அளிக்கின்றது. தலை நகரிலே உள்ள பிற மொழியாளர்களுக்காக இலவசத் தமிழ் வகுப்புக்களை நடத்தி வருகிறது.

சங்கம் அவ்வப்போது நூல்கள் சிலவற்றையும் வெளியிட் டுள்ளது. திரு வ. வே. சு. ஐயர் அவர்களின் "Kamba ramayanam, A Study", "Maxims of Tiruvalluvar", திரு ஜி. வன்மீகநாதன் அவர்களின் "Kamban's Sita", "Pathway to God Through Tamil Literature"—Thiruvachakam" ஆகியவை சங்கத்தின் சிறப்பு வெளியீடுகளாகும்.

பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்ப் பெரியோர்களுக்கும் விழாவெடுத்த தில்லித் தமிழ்ச் சங்கம், 1971ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14, 15, 16ஆம் தேதிகளில் தனது வெள்ளி விழாவினை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடியது. விழாவில் கலந்து கொண்ட தில்லி மாநகராட்சி மன்றத்தின் அந் நாள் தலைவர், உயர்திரு. விஜயகுமார் மல்ஹோத்ரா அவர்கள், சங்கக் கட்டிடம் அமைந்துள்ள நெடுஞ்சாலைக்குத் 'தமிழ்ச் சங்கம் மார்க்' எனப் பெயரிட்டார்.

தமிழகத்தில், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவ நாதம் அவர்களின் தலைமையில் இயங்கிவரும் தமிழகப் புலவர் குழு 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22, 23ஆம் தேதிகளில் தனது 32ஆவது கூட்டத்தைச் சங்கத்தின் அழைப்பை ஏற்றுத் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் நடத்தியது. தமிழகப் புலவர் குழு தமிழகத்துக்கு வெளியே நடத்திய முதற் கூட்டம் இதுவேயாகும். புலவர் குழுவின் வருகையையொட்டிச் சங்கம் இரண்டு நாள் தமிழ் விழாவைக் கொண்டாடியது. இவ் விழாவில் புலவர் குழுவைச் சேர்ந்த நாற்பது புலவர் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப் பித்தனர்.

சுடர் சங்கத்தின் ஆண்டு மலராகும். ஆரம்ப காலத்தில், மலர் கையெழுத்து ஏடாக இருந்து வந்தது. 1952லிருந்து அது அச்சிட்டு வெளியிடப் பெறுகின்றது. தொடக்க காலத்தில் விஜய மலர், ஜய மலர் என்று அந்தந்த ஆண்டின் பெயரே மலரின் பெய

ராகவும் அமைந்தது. உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களின் மணி விழாவையொட்டி 1958 ஆம் ஆண்டின் 'சுடர்' அன்னாரின் பெயரில் வெளி வந்தது. அடுத்து வந்த ஆண்டுகளில் இராஜாஜி, பாரதி, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், திரு வி. க., சத்தியமூர்த்தி, வ. உ. சி., கவிமணி, பாரதி தாசன், கல்கி, திருவள்ளுவர், காந்தியடிகள், அறிஞர் அண்ணா ஆகிய பெரியோர்களின் பெயரில் சங்கம் சிறப்பு மலர்களை வெளி யிட்டுள்ளது. 1971, 1972, 1974 ஆம் ஆண்டுகளில் வெள்ளி விழா மலராகவும், இந்திய இலக்கிய மலராகவும், வளர் தமிழ் மலராகவும் ஒளிவிட்டு மலர்ந்த சுடர் இவ் வாண்டு ''கடல் கடந்த தமிழ் மலரா''கத் திகழ்கின்றது.

தற்பொழுது, முத்தமிழ் விழாக்களை நடத்தக் கலையரங்கம் ஒன்றை அமைத்தல், சங்க நூலகம், பதிப்பகம், வேற்று மொழி யினருக்குத் தமிழ் வகுப்பு நடத்துதல் ஆகியவற்றை விரிவு படுத்துதல், தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் சிறந்த இலக்கிய நூல்களை வெளியிடுதல் போன்ற பணிகளைச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இந் நற்பணிகள் அனைத்தும் நன்கு நிறை வேறத் தமிழ்மக்கள் அனைவரது ஒத்துழைப்பையும், நல்லாதரவை யும் வேண்டி நிற்கிறது 'தில்லித் தமிழ்ச் சங்கம்'.

———



1977 ஆம் ஆண்டின் சுதந்திர தின விழாவில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் திரு. பா. இராமச்சந்திரன் அவர்கள் சொற்பொழிவாற்றுகிறார்கள்



1977 ஆம் ஆண்டின் பாரதி விழாவிற்குத் தலைமைதாங்கிய தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி, திரு. ஆர். வேங்கடராமன் (நாடாளுமன்ற உறுப்பினர்) சங்கத் தலைவர், சங்கச் செயலாளர் ஆகியோரையும், பாரதி நினைவுச் சுழற்கோப்பை பெறும் தமிழ்ப் பள்ளி மாணவர்களையும் காணலாம்.




“ குருதிப் புனல் ” புத்தகத்திற்கு சாகித்ய அகாதமிப் பரிசு
பெற்ற திரு இந்திரா பார்த்தசாரதி அவர்களுக்குச் சங்கத்
தலைவர் திரு. சி வி. நரசிம்மன் மாலை அணிவிக்கிறார்.




திரு. இந்திராபார்த்தசாரதி அவர்கள்
சொற்பொழிவாற்றுகிறார்கள்.




திரு. கிரிதாரி பிரசாத் அவர்கள் கூட்டத்திற்கு,
திருமதி சௌந்திரா கைலாசம் அவர்கள்
தலைமை உரை ஆற்றுவதைக் காணலாம்.




மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல்.கே. அத்வானி
அவர்கள், சங்கத்தின் 78 அம் ஆண்டின் பாரதி விழாவில்
சிறப்புரை ஆற்றுகிறார்.




"குருதிப் புனல்" புத்தகத்திற்கு சாகித்ய அகாதமிப் பரிசு
பெற்ற திரு இந்திரா பார்த்தசாரதி அவர்களுக்குச் சங்கத்
தலைவர் திரு. சி வி. நரசிம்மன் மாலை அணிவிக்கிறார்.




திரு. இந்திராபார்த்தசாரதி அவர்கள்
சொற்பொழிவாற்றுகிறார்கள்.



திரு. கிரிதாரி பிரசாத் அவர்கள் கூட்டத்திற்கு,
திருமதி செளந்திரா கைலாசம் அவர்கள்
தலைமை உரை ஆற்றுவதைக் காணலாம்.



மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அத்வானி
அவர்கள், சங்கத்தின் 78 அம் ஆண்டின் பாரதி விழாவில்
சிறப்புரை ஆற்றுகிறார்.



சங்கத்தின் 1978 ஆம் ஆண்டின் திருப்புகழ் விழாவில்
திரு. ஏ. எஸ். ராகவன் (குருஜி) வரவேற்புரை ஆற்றுகிறார்
அமர்ந்திருப்போர் திரு. எம். கே. தீனதயாளன்,
திரு. ஏ. ஜி. வி. சுப்பிரமணியம் (சங்கத்தின் துணைத்தலைவர்)




1978 ஆம் ஆண்டின் திருப்புகழ் விழாவில் திரு. எம். சங்கர
நாராயணன் குழுவினரின் தமிழிசை நிகழ்ச்சி
நடைபெறுவதைக் காணலாம்.

# நன்றி

தில்லித் தமிழ்ச் சங்கம் தனது இருபத்து மூன்ருவது "சுடர்" மலரைக் "கடல் கடந்த தமிழ் மலராக" வெளியிடுவதில் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறது. 1971-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "வெள்ளிவிழா மலர்" மதுரை - காமராஜ் பல்கலைக்கழக முதுகலைத் தேர்விற்கு ஒரு துணைப்பாட நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதே அந்த மலரின் தகுதிக்கும், பெருமைக்கும் தக்க சான்ருகும். 1972-இல் வெளிவந்த "வளர் தமிழ் மலர்" 1947 முதல் 1972 வரை - 25 ஆண்டுகளில் தமிழ் இலக்கியத்தில் உரைநடை, மொழி பெயர்ப்புகள், கவிதைகள், நாவல்கள், நாடகங்கள், சிறுகதை, இசை ஆகிய துறைகள் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதைக் காட்டுகிறது. 1974-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அஹமது அவர்களால் வெளியிடப்பட்ட "இந்திய இலக்கிய மலர்" இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பெரியதும், சிறியதுமான பல மொழிகளின் இலக்கிய வரலாற்றையும், வளர்ச்சியையும் காட்டியுள்ளது.

இன்று 'கடல் கடந்த தமிழ் மலர்' உங்கள் முன் மலர்ந்து இருக்கிறது. பல நூற்றுண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் கடல் கடந்து சென்றுள்ளனர். "முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை" என்ற தொல்காப்பிய சூத்திரம் தமிழர்கள் கடல் கடந்து சென்றதற்கு அத்தாட்சி. 'கடாரம் வென்ற சோழன்' என்ற இராசராச சோழனின் குறிப்பிலிருந்து இது தெளிவு. சீனவிற்கும் தமிழகத் திற்கும் தொடர்பு இருந்து வந்துள்ளது என்பதை அண்மையில் சீனவில் கண்டு எடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு கூறுகிறது. வெளிநாட்டு நல்லறிஞர்களும், பல தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்துள்ளார்கள்.

இன்று தமிழன் வாழாத நாடே இல்லை என்று சொல்லலாம். தமிழர்கள் வெவ்வேறு நாடுகளில் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாட்டறிஞர்கள் பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர்களாகப் பணி புரிகிருர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிறப்புப்பட்டம் பெற்றவர்கள். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தமிழ் மொழி, தமிழர்பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கைத்தரம் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதை இச் சிறு மலரில் எடுத்துக்காட்டுவது இயலாத காரியம். ஒரு குறிப்பிட்ட நாட்டின் தமிழ் மலராகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட கண்டத்தின் தமிழ் மலராகவோ வெளிவரும் எண்ணத்தை இது தமிழர்களிடையே எழுப்புமாஞல், அதுவே இம் மலரின் வெற்றியெனச் சங்கம் கருதும்.

மலருக்குக் கருத்தோவியம் தந்து உதவிய தமிழக முதல்வர் மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர் களுக்குச் சங்கம் பணிவோடு தனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறது. மற்றும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள் நல்கிய பேரறிஞர்களுக்கும் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது இவர்களுடைய கட்டுரைகள் வருங் காலச் சந்ததிகளுக்கு ஒரு கருவூலமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி ஊக்குவித்த குடியரசுத் தலைவர் திரு. ந. சஞ்சீவரெட்டி அவர்களுக்கும், தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கும், மத்திய கல்வி அமைச்சர் முனைவர் பிரதாப் சந்த்ர சந்தர் அவர்களுக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

மலரைச் சிறந்த முறையில் கொணர உதவிய அன்பர் களுக்கும், விளம்பரங்கள் கொடுத்து உதவிய தொழில் நிறுவனங்களுக்கும், அட்டைப்படம் வரைந்து உதவிய தலைநகர் கலைஞர் ரங்கசாமி சாரங்கன் அவர்களுக்கும், மலரைக் குறித்த காலத்தில் அச்சிட்டுத்தந்து உதவிய சென்னை, அப்பர் அச்சகத்தாருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

மலருக்கான கவிதை, கட்டுரைகளை அறிஞர்களிட மிருந்து பெற்றுத் தந்து, அதன் பொருட்டு அயராது பணி புரிந்த திரு. ரா. விசுவநாதன் அவர்களுக்குச் சங்கம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

விளம்பரங்கள் பெற்றுத்தந்து உதவிய திருவாளர்கள் சி. ஆர். வைத்தீஸ்வரன், எம். பாலசுப்பிரமணியம், எஸ் கிருஷ்ணமூர்த்தி, ஆர். பாலசுப்பிரமணியன், பி ஆர். வேங்கடகிரி (செயலாளர்) ஆகியோருக்கும், சங்கத்தின் சென்னைப் பிரதிநிதியாக இருந்து பணியாற்றி ஒத்துழைப்பு நல்கிவரும் திரு. அ. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக் கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**சி. வி. நரசிம்மன்,**
தலைவர்,
தில்லித் தமிழ்ச் சங்கம்.

# உள்ளுறை


பக்கம்

அலை கடலுக்கு அப்பால்
—தமிழக முதல்வர் மாண்புமிகு
திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 1

கடல் கடந்த தமிழ்
— கி. வா. ஜகந்நாதன் 7

அயல் நாடுகளில் தமிழ் வளர்ச்சி
—ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 19

தலைமேல் வைப்பாம்
—டாக்டர், க. ஆறுமுகன்
பேராசிரியர், தில்லிப் பல்கலைக் கழகம் 27

கவிச் சுடர்
—கவியரசு சோமசன்மா, மலேசியா 33

ஆங்கிலம் கடன் வாங்கியுள்ள தமிழ்ச் சொற்கள்
—பர். ஆர். இ. ஆஷர் 39

சோவியத் தமிழர்கள்
—பூர்ணம் சோமசுந்தரம்—சோவியத்நாடு 51

மலேசியத் தமிழ் இலக்கியம்
—டாக்டர் இரா. தண்டாயுதம்,
மலாயாப் பல்கலைக் கழகம் 61

முனியம்மா
—இலக்கியக் குரிசில் மா. இராமையா, மலேசியா 79

ஏ! —திரு. வெ. ஆறுமுகம், மலேசியா 89

ஈழத்தில் இலக்கியத் திறனாய்வு
—பேராசிரியர் க. கைலாசபதி,
இலங்கைப் பல்கலைக்கழகம் 93

இல்லையான காவியம்
—நாவற் குழியூர் நடராசன், இலங்கை 105

வாழ்வின் தரிசனங்கள்
—டொமினிக் ஜீவா, இலங்கை 109

அருணகிரியாரின் பாடல்களில் சக்தி வழிபாடு
—K. V. ஜ்வலபில், யூட்ரெக்ட் 119

சாதனை புரியும் சமுதாயம்
—டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி, அமெரிக்கா 135

'தன்னிலை கடத்தல்'
—இந்திரா பார்த்தசாரதி 141

Index To Advertisers 147

# அலை கடலுக்கு அப்பால்

[தமிழக முதல்வர்
மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்]

இந்திய நாட்டின் தலைநகராக இலங்கும் தில்லி மாநகரில் தமிழ்த் தொண்டும் கலைப் பணியும் ஆற்றிவரும் நம் தில்லித் தமிழ்ச் சங்கம் ''சுடர்'' என்ற பெயரில் ஆண்டு மலரைச் சிறப்பாக வெளியிட்டு வருவது பயன்நிறைந்த இலக்கியப் பணியாகத் திகழ் கிறது. தமிழர்கள் எங்கே சென்றாலும், அங்கெல்லாம் ஒன்றாக இணைந்து தங்கள் மொழியையும், பண்பாட்டையும், கலை இலக் கிய உணர்வையும் போற்றி வளர்த்து வருகின்றனர். அது தமிழர் களின் தனிச் சிறப்பாகும். நான் அயல்நாடுகள் சென்றபோ தெல்லாம் நம் தமிழ்மக்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும், உற்சாகத்தையும், உணர்வையும் ஆங்காங்கே கண்டு நெகிழ்ந் திருக்கிறேன்.

அவர்களுக்கு வாழ்வளிக்கிற நாட்டிற்கு நன்றிகாட்டுகிற அதே நேரத்தில், தங்கள் தாய்மொழிப் பற்றினையும், அறிவாற்றலையும் வெளிப்படுத்தும் முறையிலும், பண்பு நலன்களைப் பாதுகாக்கும் வகையிலும் அலைகடலுக்கு அப்பால் - பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்கேயே தங்கி வாழ்ந்து வரும் தமிழ்ப் பெருமக்களுக்காக இந்த ஆண்டு மலரைத் தமிழ்ச் சங்கம் உருவாக்கியிருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. ''அலைகடலுக்கு அப்பால் வாழ்வார் என் அகத்தினில் வாழ்வார்'' என்ற பாவேந் தரின் பாட்டு வரிகளே என் நினைவில் இப்போது நிற்கின்றன.

நம் தமிழகத்தின் தென்பகுதி குமரிக் கண்டம் என்ற பெயரில் ஒரு காலத்தே நீண்டு விரிந்து பரந்திருந்தது. இந்துமாக்கடல் முழுவதுமே அப்போது நிலமாக இருந்து, பின்னர் நேர்ந்த ஒரு கடற்கோளால் விழுங்கப்பட்டது என்று நிலநூல் அறிஞர்கள் கருதுகின்றனர். அந்தப் பகுதியிலேதான் ஆதிமனிதன் தோன் றினான் என்றும், அம் மாபெரும் நிலந்தான் மனித நாகரிகம் மலர்ந்த தொட்டில் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரக் காப்பியத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், மறைந்துபோன குமரிக் கண்டத்தில் இருந்ததாக 49 நாடு களையும், குமரிமலைத் தொடர், பன்மலைத் தொடர், குமரியாறு, பஃறுளியாறு, தென்பாலிமுகம், கொல்லம் ஆகியனவற்றைப் பற்றி யும் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஏறத்தாழ ஏழு ஆயிரம் கிலோ மீட்டர் வரை குமரிக் கண்டம் அந் நாளில் விரிந்து பரந் திருந்தது என்பர். முப்புறமும் கடல் சூழ்ந்த நிலத்தில் நெடுங் காலமாக வாழ்வதன் விளைவாகத் தமிழ்மக்கள், கலம் செலுத்திக் கடல் கடந்து செல்வதில் – திரைகடல் ஓடித் திரவியம் தேடுவதில்- இயல்பான ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தனர். கடலோடும் கலையில் தமிழர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரிதி, வாரணம், பவ்வம், பரவை, புணரி, கடல் என்று கடலைக் குறிப்பதற்குப் பல சொற்களும், கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசல், புணை, தோணி, திமில், அம்பி, வங்கம், மிதவை என்று நீரில் செல்லும் ஊர்திகளைப் பற்றிய பல சொற்களும் தமிழில் உள்ளன என்பதை அறியலாம். கடற்பயணத்தை அடிக்கடி மேற்கொண்டதால்தான், திசைகளை அறிந்துகொள்வதற்காக, வானநூல் விண்மீன் குறிப்புக்களை யும் தமிழர்களால் அப்போதே அறிய முடிந்தது என்றும் உலகம் உருண்டை என்பதைப் பழங்காலத்திலேயே அதனால் உணர முடிந்தது என்றும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இன்றோ, விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட வசதிகள் காரண மாக நாட்டின் எல்லைகள் நெருங்கிவிட்டன. பழந்தமிழகத்தின் முந்தைய சூழ்நிலைகள் பெரிதும் வேறுபட்டு விட்டன. காலப் போக்கில் வாழ்க்கை முறைகளும் மாறி விட்டன; கல்வியின் போக் கும் புதுமையாகி விட்டது. அறிவியல் வளர்ச்சி உலகத்தை ஒரு மையமாக உருவாக்க முற்பட்டு வருகிறது. தொழில் நுட்பங் களும் கலைக் கூறுகளும் வகைவகையாக வளர்ந்துள்ளன. இந்த நிலையில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சங்கப் புலவரின் கருத்துக்கேற்பவும், ''யாதானும் நாடாமால் ஊராமால்'' என்று திருவள்ளுவர் உணர்த்திய கல்வியின் பொதுநோக்கத்திற் காகவும், தமிழ்மக்கள் உலக நாடுகள் எங்கும் உலாவி வருகின் றனர். அறிவாராய்ச்சி, அலுவல், உழைப்பு, ஊழியம், வணிகம், கலைவளம் முதலிய பல நிலைகளில் பல சூழல்களில் தமிழர்கள் ஆங்காங்கே ஓடியாடி உழைத்து வருகின்றனர்.

ஆறு கண்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கும் இந்த மண்மண் டலம், 140 நாடுகளுக்குமேல் உள்ளடங்கியுள்ளது. அவற்றுள்

முப்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் குடியேறி அந்தந்த நாட்டு மக்களாக ஆகியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் தமிழ்மக்கள் தங்கள் பண்புச் செல்வங்களையும் பாது காத்து வந்திருக்கிறார்கள். ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமான இந்தியர்கள், பெரும்பாலோர் தமிழர்கள் - உலகில் பல்வேறு நாடுகளில் தங்கி வாழ்வதாகப் புள்ளி விவரம் சொல்லுகிறது.

தென் கிழக்காசிய நாடுகளில் ஏராளமாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இலங்கையில் வளத்திற்காகவும் நலத்திற்காகவும் தமிழ் மக்கள் சிந்திய வியர்வையையும், உழைப்பின் ஆற்றலையும், திறமையையும் எளிதில் எவரும் மறந்துவிட முடியாது. சிங்களவ ரோடு தமிழ்மக்களும் தொன்மை வாய்ந்த குடியினராக அங்கே வாழ் கின்றனர். மலேசியா, சிங்கப்பூர், பிஜி, மொரிசியஸ், பர்மா, இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, வியட்நாம் ஆகிய பல் வேறு நாடுகளில் ஒரு நூறாண்டுக்கு முன்பிருந்தே தமிழ்நாட்டு நகரத்தார்களும், இசுலாமியப் பெருமக்களும், பாட்டாளித் தோழர் களும் வணிகத்துறையிலும், உடல் உழைப்பிலும் ஈடுபட்டு வரு கின்றனர். இரப்பர்க் காடுகளிலும் தேயிலைத் தோட்டங்களிலும், கரும்புக் கழனிகளிலும், வயற்பண்ணைகளிலும் அரும்பாடு பட்டு அந்தந்ந நாடுகளைச் செல்வம் கொழிக்கச் செய்து வருகின் றனர்.

தமிழ்நாட்டு மக்களைப்பற்றி, நாணயமானவர்கள், நம்பிக்கை யாளர்கள், உழைப்பதற்குத் தயங்காதவர்கள், கலையுள்ளம் வாய்ந்தவர்கள், கனிவுமனம் கொண்டவர்கள் என்ற நற்பெயரே நானிலமெங்கும் இருப்பதை நான் நேரிடையாக அறிந்ததை மகிழ்ச்சியோடு இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். அறிவாற்ற லும் கல்வி நலமும், தொழில் நுட்ப உத்திகளும் நாளுக்குநாள் வேளைக்கு வேளை விரைவாக வளர்ச்சி பெற்றுவரும் இந்த விஞ்ஞான யுகத்தில், விஞ்ஞான மேதைகளும், மருத்துவ வல்லு நர்களும், பொறியாளர்களும், கட்டிடக் கலைஞர்களும், பேராசிரி யர்களும் நமது நாடுகளில் அவர்களுக்கு ஏற்ற போதிய வாய்ப் பின்மை காரணமாக அயல்நாடுகளிலேயே இருந்து பணியாற்று கின்றனர். அவர்களுடைய தேர்ச்சித் திறமைகள், தகுதிகள் நம் தாயகத்திற்குப் பயன்படவில்லையே என்ற ஏக்கம் நம்மைப் போலவே அவர்களுக்கும் இருப்பதை என்னால் அண்மையில் உணர முடிந்தது.

அயல்நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் சிறந்த அன்போடும் பற்றோடும் எல்லாத் துறைகளிலும் அந்தந்த நாட்டினரோடு

ஆர்வத்தோடு இணைந்து ஒத்துழைக்கின்றார்கள். நகரத்தார் களுக்காகவே அந்த நாளில் பர்மாவில் ஆட்சி அவையில் ஓர் இடம் ஒதுக்கியிருந்தனர். இந்தோனேசிய மொழியில் ''வணிகர்'' என்ப தற்குச் ''செட்டி'' என்ற சொல்தான் வழக்கத்தில் இருந்து வருகிறது.

மக்கட் பெருக்கத்தினுலும், வேலை வாய்ப்புகள் குறை வாக இருப்பதனாலும், வேறு சில சூழ்நிலைகளாலும் நம் நாட்டு மக்களில் பலர் அரபு நாடுகளுக்குச் சென்று உழைக்க விரும்பு கிறார்கள். தமிழரோடு அராபியர்கள் ஒரு காலத்தில் உடன் இணைந்து கப்பலோட்டிய தோழர்களாவர். நமது தமிழ் அகராதியில் 800க்கு மேற்பட்ட அரபுச் சொற்களும், 50க்கு மேற் பட்ட பாரசீகச் சொற்களும், ஆயிரக்கணக்கான உருதுச் சொற் களும் இடம் பெற்றுள்ளன. எனவே, அறிவுப் பரிமாற்றத்தின் அடிப்படையிலும், உழைப்பின் தேவை கருதியும், ஒரு நாட்டவர் இன்னொரு நாடு சென்று பணியாற்றுவது ஓரளவு இயல்பாகவே இருந்து வந்திருக்கிறது.

இந்திய மருத்துவர்கள் எல்லா வகையிலும் நுட்பம் வாய்ந்த உன்னத மருத்துவர்களாகவும், பொறியாளர்கள் சிறந்த பொறி இயல் நிபுணராகவும் உலகமெங்கும் மதிக்கப்படுகின்றனர். அதிக ஊதியமும் பெறுகின்றனர். அதனால் தாங்கள் உயர் கல்வி பெற்ற அந்த நாடுகளிலேயே பலர் தங்கி விடுகின்றனர். இது பற்றியும் நாம் கருதிப் பார்க்க வேண்டும்.

தாய்லாந்து நாட்டுத் தேசியத் திருவிழாவில், திருப்பாவை திருவெம்பாவை இன்றும் பாடப்பட்டு வருவது பழைய மரபை நினைவூட்டி நமக்கு வியப்பூட்டுகின்றது. தென்னாப்பிரிக்கத் தமிழர்கள், அண்ணல் காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத் திற்கு உறுதுணையாக இருந்ததையும், தில்லையாடி வள்ளியம்மை போன்ற மங்கையர் திலகங்கள் அங்கே இந்தியருக்காக உரிமைக் குரல் எழுப்பியதையும் நாம் எண்ணி எண்ணி இன்றும் இறும்பூது எய்துகின்றோம்.

வீரர் நேதாஜி அவர்கள் நடத்திய விடுதலைப்போரிலே கூட, சிங்கப்பூர், மலேசியா நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்கள்தாம் பேருதவி புரிந்தனர் - பெரும் பங்கு பெற்றனர் என்ற சிறப்பு மிக்க வீர வரலாறும், கடல் கடந்த தமிழர்கட்குப் பெருமை சேர்த்துள்ளது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ், அரசு மொழியாக இடம் பெற்றிருப்பதோடு, அந் நாட்டுத் தமிழ்ப் புலவர்

பெருமக்களும் எழுத்தாளர்களும் தமிழ் இலக்கியத்தை வளர்க்கும் படைப்பாளர்களாகவும் சிறந்து விளங்குகின்றார்கள். அதே நேரத்தில், மொரிசியஸ், பிஜி, தென்னாப்பிரிக்கா முதலிய பகுதி களில் தமிழினக் குழந்தைகள் தமிழ்க் கல்வி பயில வாய்ப்பு இல்லாமல் வருந்துவதாக என்னிடம் முறையிட்டிருக்கிறார்கள். அத்தகைய வாய்ப்புகள் கிட்ட வழி செய்யவும் நாம் முயல வேண்டும்.

தமிழகத்திலிருந்து தமிழ்த் திரைப்படங்களும், தமிழ் இலக் கியங்களும் அவ்வப்போது அந் நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வகையில் மேலும் பல பணிகள் செய்யப்பட வேண்டும். தமிழ்க் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் உலகில் பல நாடுகளில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழோடும், தமிழகத்தோடும், திராவிடத்தோடும் தொடர்புடைய பண்பாட்டுக் கூறுகளையும் இலக்கிய இயல்புகளையும் ஆராய்வதற்கான ஆர்வமும் உலக மெங்கும் இப்போது பெருகி வருகிறது. இந்த வகையில் அண்மையில் மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடும், பலவகையான பண்பாட்டு உறவு நிலைமைகளை உருவாக்கி உதவி செய்யுமென நம்புகிறேன்.

''அயல் நாடுகளில் வாழும் நமதருமைத் தமிழர்கள், தாங்கள் வாழும் நாடுகளைத் தங்களுக்கு வாழ்வளிக்கின்ற புகுந்த வீடா கவும், தமிழகத்தைத் தாய் மண்ணாகவும் கருதுவது இயல்புதான்; புகுந்த வீட்டுப் புகழையும் பிறந்த மண்ணின் பெருமையையும் மறக்க முடியாதுதான் என்றாலும், அயலகத் தமிழர்கள், தங்களை வாழ்வித்து வளர்க்கும் தாயகமான நாட்டிற்கு நன்றி பாராட்டு வதைத்தான் நான் என்றும் விரும்புவேன்'' என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டதை அயல் நாட்டில் வாழ்பவர்கள் எப்போதும் நினைவில் கொண்டுள்ளனர். தாங்கள் சென்று வாழ்கின்ற நாடு களைத் தங்களின் தாயகமாகவே கருதி, தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் மறவாத தமிழர்களாக அவர்கள் வாழ்வதோடு அந்தந்த நாட்டின் மக்களோடு ஒன்றி ஒத்துழைக்கும் மக்களாகவே தமிழர்கள் உறவு பூண்டு உயர்வதைத்தான் பேரறிஞர் அண்ணாவும் பிற தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், சமீபத்தில், நான் அமெரிக்க நாட்டிற்குச் சென்ற சமயம், அங்குள்ள அறிஞர்களிடத்தில் நான் விடுத்த வேண்டு கோளை ஏற்று, அவர்களுடைய திறமையும், அறிவாற்றலும், நான் பிறந்த நாட்டிற்குப் பயன்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். அந்த உணர்வை அங்குள்ள பலர் ஏற்றுக் கொண்

டார்கள். அப்படிப்பட்ட திறமையாளர்களுக்கு இந்த இதழின் மூலம் அந்தக் கருத்தை அவர்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மக்களின் ரத்தத்தின் ரத்தமாக, உலகத்தின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு, தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அயலகத் தமிழர்கள் தங்கள் மொழியால் சிறந்தவர்கள், கடைப்பிடிக்கின்ற வழியால் மேலும் உயர்ந்தவர்கள் என்ற பொன்மொழியைப் புவியெங்கும் நிலை நாட்டிச் சிறப்படைவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

---

## 'மோரிசு'

"இங்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் குடியேறிய தமிழ்மக்கள் புதுவையிலிருந்தும் தஞ்சாவூரி லிருந்தும் குடியேறியவர்கள். பிரஞ்சு மக்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் வணிகராகவும், தச்சர் கொத்தராகவும், கைத்திறம் படைத்த வேலையாட்களாகவும் மொரீசியஸ் தீவிற்குச் சென்றார்கள். பலர் செல்வம் படைத்த வணிக ராகவும் கரும்புத் தோட்டங்களுக்கு உரிமையாளராகவும், தலைவர்களாகவும் இருந்தார்கள். தஞ்சாவூர் வீதி, திருச்சிருப் பள்ளி வீதி என்று போர்ட் லூயிஸில் இருக்கும் வீதிகளில் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்தனர். ஆனால் இன்று தமிழர் பலர் அந்த இடங்களை இழந்துவிட்டனர். 1810-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் மொரீசியஸ் தீவைக் கைப்பற்றியதும் மொரீசியஸ் குடிமக்கள் கையொப்பமிட்ட விசுவாசப் பத்திரம் சவரிமுத்து, சின்னத்தம்பி, துரைசாமி என்று பலர் தமிழிலேயே கையொப்பமிட்டிருப்பதைக் கண்டேன்."

'ஒன்றே உலகம்—தனிநாயக அடிகளார்.'

# கடல் கடந்த தமிழ்

[கி. வா. ஜகந்நாதன்]

''தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''

என்று பாரதியார் பாடினர். அவருடைய கனவு இப்போது நன வாகி வருகிறது. முன்பெல்லாம் ஆராய்ச்சியாளர் இந்தியாவில் உள்ள மொழிகளில் சம்ஸ்கிருதம் ஒன்றையே பயின்று அந்த மொழியில் உள்ள நூல்களை ஆராய்ச்சி செய்வதும், அவற்றை மொழி பெயர்ப்பதும், ஆராய்ச்சி உரை எழுதுவதுமாக இருந்தார்கள். இப்போதோ பாரத நாட்டு மொழிகள் பலவற்றையும் ஆராய்ந்து, பல அரிய கருத்துக்களை வெளிப்படுத்தும் பேரறிஞர்கள் உலகம் எங்கணும் விரவியிருக்கிருர்கள். அவற்றில் தமிழ்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தொண்டாற்றும் புலவர்கள் மேல்நாடுகளில் பலர் இருக்கிருர்கள். 18ஆம் நூற்ருண்டுகளுக்கு முன்பிருந்தே உலகத்தில் தமிழ்க் காதலர்கள் தோன்றிவிட்டார்கள்.

பெஷிப் பாதிரியார், கிரியர்ஸன், ஜி. யூ. போப் முதலிய பேரறிஞர்கள் தமிழ் பயின்று அதன் வளப்பத்தை அறிந்து நூலியற்றல், ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு என்னும் துறைகளில் ஈடுபட்ட முன்னேடிகள் ஆவார்கள். இன்று இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி, ருஷ்யா முதலிய நாடுகளில் உள்ள பல பல்கலைக் கழகங்களில் தமிழுக்கெனப் பேராசிரியர்களும் இந்த மொழியைப் பயில்பவர்களும் இருக்கிருர்கள். அந்த நாடுகளில் பிறந்து வாழ்பவர்களும் நம் நாட்டிலிருந்து அந்த நாடுகளில் சென்று வாழ்பவர்களும் அங்கங்கே தமிழ் மொழியாராய்ச்சியைத் தக்க முறையில் செய்து வருகிருர்கள். அவர்களைப் பற்றியும் அவர்களுடைய முயற்சிகளைப்பற்றியும், அவர்கள் செய்துள்ள சாதனைகளைப் பற்றியும் ஒரு தனி நூலே எழுதிவிடலாம். ஒரு கட்டுரையளவிற்குள் அந்தச் செய்திகளை அடக்கி எழுதிவிட முடியாது. என்ருலும் ஓரளவுக்குத் தமிழ்மகளின் திருவுலா எவ்வாறு தமிழ் நாட்டையும் பாரத தேசத்தையும் கடந்து, மலைகடந்து, கடல் கடந்து நிலவி வருகின்ற தென்பதைப் பார்ப்போம்.

மொழி நூல்களை எழுதிய மேல் நாட்டு வல்லுநர்கள் பலர். அவர்களுள் கிரியர்ஸன் என்பவர் இந்திய மொழிகளையும் திராவிட மொழிகளையும் ஆராய்ந்து அவற்றைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி நூலை எழுதியிருக்கிறார். தமிழ்மொழியின் பாங்கைப்பற்றி, மொழி நூல் இலக்கண முறையில் அவருடைய ஆராய்ச்சி மிளிர்கிறது. மொழி வரலாற்றைப் பயில்கிறவர்களுக்கு அவர் இயற்றிய நூல் பாலபாடம் போல உதவுகிறது.

கால்டுவெல் என்னும் பாதிரியார் திருநெல்வேலி மாவட்டத்தில் குடியேறித் தமிழையும் பிற திராவிட மொழிகளையும் கற்றார். அதன் பயனாகத் திராவிட மொழிகளின் ஒப்பியலிலக்கணத்தை அவர் எழுதினார். திராவிட மொழிகள் ஒரு தனி இனத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றில் தமிழ் மொழி மிகப் பழமையானதென்றும் எடுத்துக்காட்டியுள்ளார். திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் அவருடைய நூலே முன்னோடியாகவும் பின் அந்தத்துறையில் பலவாக எழுந்த நூல்களுக்கெல்லாம் அடிநிலையாகவும் இருக்கிறது.

17 ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டிலிருந்து இங்கே வந்த பெஷிப் பாதிரியார் இந்தியத் துறவிபோலக் கோலம் பூண்டு தமிழ் பயின்றார். இந்த நாட்டுத் துறவி போலக் காவி உடை அணிந்து வீரமா முனிவர் என்ற பெயரைத் தாங்கி வாழ்ந்தார். அக்காலத்தில் பெரும் புலவராக விளங்கிய சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ்ப்பாடம் கேட்டார். சிந்தாமணியை ஆழமாகக் கற்றார். அதன் பயனாகத் தாமே இனிய காவியங்களை இயற்றும் ஆற்றலைப் பெற்றார். ஏசு பெருமானுடைய வரலாற்றைப் பாடித் 'தேம்பாவணி' என்ற பெயரால் உலவ விட்டார். 'காவலூர்க் கலம்பகம்' பாடினார். 'தொன்னூல் விளக்கம்' என்ற இலக்கண நூலை இயற்றினார். அன்றியும் பல உரைநடை நூல்களை இயற்றினார். அவிவேக பூரணகுரு கதை என்ற நகைச்சுவை ததும்பும் கதையை எழுதினார். கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை விளக்கும் வேதியர் ஒழுக்கம் முதலிய நூல்களை இயற்றினார். தம்முடைய நாடான இத்தாலிக்குச் சென்ற பொழுதெல்லாம் தமிழ்மொழியின் அருமை பெருமைகளைப் பலருக்கு எடுத்துரைத்தார். அவரால் தமிழ் மொழியின் மணம் கடல் கடந்து பரவிப் பெருகியது. லத்தீன் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தார். அதனால் அந்த நூல் மேல் நாட்டுப் பேரறிஞர்களின் உள்ளத்தை ஈர்த்தது.

கடல் கடந்து சென்ற திருக்குறள் பலமொழிகளில் வடிவெடுத்துத் தன்னைப் பெற்ற தமிழன்னையின் பெருமையை வெளிப்படுத்தியது. அந்த நூலின் நுட்பத்தையும் திட்பத்தையும் உணர்ந்து

மேல்நாட்டு அறிஞர்கள் அதன் வாயிலாகத் தமிழ்மொழியின் வளப்பத்தையும் தமிழர்களின் பண்பாட்டையும் அறிந்து தமிழின் மேல் காதல் கொள்ளலாயினர்.

ஜி. யூ. போப் திருக்குறளை மொழிபெயர்த்ததோடு நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆக்ஸ்போர்டில் அச்சிட்டார். அங்கே உள்ள பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர் அவர். சங்க நூல்களையும் பயின்றார். புறநானூற்றில் உள்ள பல பாடல்களை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். பிற்கால நூல்களையும் அவர் பயின்றார். தேவார திருவாசகங்களைப் படித்தார். திருவாசகம் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அதை ஆழமாகப் படித்து உருகினார். 'இப்படி ஒரு நூல் ஆங்கிலத்தில் இல்லையே; ஆங்கு இலமே' என்று எண்ணி அதை மொழி பெயர்த்தார். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழிக்குச் சான்றாகத் தமிழ் நாட்டில் உள்ளவர்கள் இருந்தார்கள். அவர்கள் அநுபவமே அந்தப் பழமொழி உண்டாகக் காரணமாயிற்று. இந்த உருக்கம் தமிழ் நாட்டில் உள்ளவர்களின் இதயங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று எல்லை கோலாமல், கடல் கடந்து வாழும் அறிஞர்களுக்கும் பொருந்தும் என்பதைப் போப்பையரால் உணர்ந்துகொண்டோம். அவர் சிவபெருமானை வழிபடவில்லை, சைவராகவில்லை, கிறிஸ்தவராகவே இருந்தார். ஆனால், திருவாசகத்தைப் படித்து உருகினார். ஆங்கிலம் பேசும் மக்களும் அதைப் படித்து உருக வேண்டும் என்று எண்ணி அதை ஆங்கில வடிவில் பரப்பினார்.

தமிழ்நாட்டில் இருந்த பெரியவர்களுக்கு அவர் கடிதம் எழுதித் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயருக்கு எழுதிய கடிதங்களில் ஒவ்வொரு திருவாசகப் பாடலின் மொழிபெயர்ப்பை எழுதினார். அதை எழுதும்போது அவர் உள்ளம் உருகியது; கண்களில் நீர்த்துளி அரும்பியது; அது அந்தக் கடிதத்திலும் விழுந்தது. அந்த இடத்தைச் சுற்றிக் கோடிட்டுவிட்டு, 'என் கண்ணீரின் அடையாளம் இது' என்று சுட்டியும் எழுதினாராம். அவர் இலக்கண நூல் ஒன்றையும் உரைநடையில் எழுதினார். என்னுடைய ஆசிரியப்பிரானாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களுக்குப் பல கடிதங்களை அவர் எழுதியிருக்கிறார். தளர்ந்த முதுமையிலும் அவருக்குத் தமிழில் உள்ள காதல் தளர்ச்சியடையாமல் வளர்ந்து வந்ததென்பதை அக்கடிதங்களால் உணர்ந்துகொள்ளலாம். ஐயரவர்களுடைய தமிழ்த் தொண்டைப் பலபடியாகப் பாராட்டி எழுதியிருக்கிறார். ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலும் வாழ்த்துக் கடிதம் வரும்; அதனோடு

புறநானூற்றுப் பாடல் ஒன்றின் மொழி பெயர்ப்பையும் இணைத்திருப்பார். அவர் படித்துக் கைப்பட எழுதிய குறிப்புக்களுடன் இருந்த மணிமேகலைப் புத்தகத்தை அவருடைய திருமகனார் ஐயரவர்களுக்கு அனுப்பி வைத்தார். அதையும் மொழி பெயர்க்க வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு இருந்தது.

பாரிஸ் மாநகரத்துப் பல்கலைக் கழகத்தில் ஜுலியன் வின்ஸன் என்பவர் தமிழ் ஆசிரியராக இருந்தார். என்னுடைய ஆசிரியப் பெருமானிடம் அன்பு பூண்டு கடிதம் எழுதி உறவு கொண்ட மேல் நாட்டு அறிஞர்களில் அவர் ஒருவர். அவர் பிரெஞ்சு மொழியில் காமத்துப்பாலை மொழிபெயர்த்திருக்கிறார். பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் இருந்தபொழுது இந்த நாட்டிலுள்ள தமிழ்ச் சுவடிகள் பலவற்றைப் பாரிஸுக்கு எடுத்துச் சென்றார்கள். அந்த மாநகரில் பிப்லியோதெக், நாகியனேல் என்ற பெரிய நூல் நிலையம் இருக்கிறது. அந்தச் சுவடிகளை அங்கே சேமித்து வைத்திருக்கிறார்கள். ஐயரவர்களுக்கு அந்த நூல் நிலையத்தில் இன்ன இன்ன தமிழ்நூல்கள் இருக்கின்றன என்று வின்ஸன் எழுதுவார். வில்லிப் புராணம் என்னும் நூலை அப் பெருமகனார் தம் கையாலேயே படிஎடுத்து எழுதி ஐயரவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். அதில் முதலில் சிவலிங்க வடிவத்தை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார். ஐயரவர்கள் பிற்காலத்தில் வில்லிப் புராணத்தைப் பதிப்பித்திருக்கிறார்கள். அதன் முகவுரையில் ஜுலியன் வின்ஸன் செய்த இந்த உதவியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒருமுறை ஐயரவர்கள் தாம் பதிப்பித்த இரண்டு நூல்களை அவருக்கு அனுப்பினார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்ட ஜுலியன் வின்ஸன் நன்றியறிவுடன் தமிழில் ஒரு கடிதம் எழுதினார். அவருக்குப் பழகு தமிழ் தெரியாது; படித்த தமிழ் தெரியும். ஆதலால் அந்தக் கடித வாசகம் விநோதமாக இருந்தது. 'மகா பண்டிதனே, நீர் நம்மகிட்ட அனுப்பிய இரண்டு புத்தகங்களும் வந்து சேர்ந்தன. அவற்றைப் பார்க்கிறபோது நீர் பெரிய வேலைக்காரர் என்று அறிந்துகொண்டேன்' என்று எழுதியுள்ளார். பிறரால் செய்தற்கரிய பெருஞ்செயலைச் செய்தவர் என்று உணர்ந்து அப்படி எழுதியிருக்கிறார். ஆனால் பழகு தமிழில் 'பெரிய வேலைக்காரர்' என்பது மாறுபட்ட பொருளில் வழங்கும் என்பது அவருக்குத் தெரியாது. அவர் விருப்பப்படி பொண்டெனூ என்ற அறிஞர் ஐயரவர்களைக் கும்பகோணத்துக்கே வந்து பார்த்துப் பேசிவிட்டுச் சென்றார்.

பாரிஸ் மாநகரில் உள்ள தேசீய நூல் நிலையமாகிய பிப்லியோதெக் நாசியனேல் என்பது உலகத்திலுள்ள பெரிய நூல் நிலையங்

களில் ஒன்று. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அந்த நகரில் 1970 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது, அதற்கு நானும் போயிருந்தேன். அப்போது அந்த மாபெரும் நூல் நிலையத்தைப் பார்க்கும் பேறு கிடைத்தது. அங்கே லட்சக்கணக்கில் புத்தகங்களைச் சேமித்து வைத்திருக்கிறார்கள். கையெழுத்துப் பிரதிகளும் ஓலைச் சுவடிகளும் உள்ள பகுதி தனியே இருக்கிறது.

தமிழ் ஏட்டுச் சுவடிகளும், பழைய காலத்தில் அச்சேறிய தமிழ்நூல்களும், பிரெஞ்சில் மொழிபெயர்த்த தமிழ் நூல்களும் அங்கே பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ளன. அவை கடல் கடந்து சென்ற தமிழ்க் கருவூலங்களாக அங்கே காட்சியளிக்கின்றன.

பைபிளில் ஒரு பாகம் கட்டை அச்சில் 1772ஆம் ஆண்டு வெளியாயிற்று. ‘வேத பொஷ்தகத்தின் மூணும் வகுப்பு’ என்ற பெயரோடு அதை அச்சிட்டிருக்கிறார்கள். லத்தீன் மொழியில் பெயர்த்துவடித்த தமிழ் நூல்களின் பட்டியல் ஒன்றை அங்கே கண்டேன். 1727ஆம் ஆண்டில் வெளியான அந்தப் பட்டியலில் 290க்கு மேற்பட்ட புத்தகங்களின் விவரம் இருந்தது. பாகவதத்தின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு 1788இல் அச்சாகியிருக்கிறது. லத்தீனில் உள்ள தமிழ் இலக்கணம் (Grammatica Damulica) அங்கே இருக்கிறது. அதை 1716ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார்கள். 1845இல் வெளியான தமிழ் - லத்தீன் அகராதியும் இருக்கிறது.

சென்னையில் கல்விச் சங்கம் என்ற ஒரு நிறுவனம் 18 ஆம் நூற்றாண்டில் இருந்தது. அதில் பல பெரும் புலவர்கள் இருந்து பல தமிழ்நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகங்கள் இந்த நாட்டில் இருக்கின்றனவோ, இல்லையோ தெரியாது. ஆனால், அவை கடல் கடந்து சென்று பாரிஸிலும், லண்டனிலும் இருக்கின்றன. 1815 ஆம் ஆண்டில் அச்சான இராமாயணம் - உத்தர காண்டம் அங்கே இருந்தது, அதைப் பார்த்தேன். அதன் முகப்புப் பக்கமே நூலின் சிறிய முகவுரைபோல இருக்கிறது.

*மல்வளம் பொருந்திய மாநில முழுவதும்*
*சொல்வள மிகுதியில் துதிக்கும் கீர்த்தி*
*எல்லியாட் டரசன் இசைமனு நெறியே*
*செங்கோல் செலுத்தும் காலத்து*
*இங்கிலீசுவருடம் 1815 சாலிவாகனசக வருடம் 1737*
*இதினிகழா நின்ற பவவருடத்தில்*

அரும்பல கலைக
ளாய்ந்தறி செல்வம்
தரும்புகழ்ச் சங்கத்
தாரவர் தம்மால்

தமிழ்ச் சங்கத்திற் றமிழ் கற்கப்புகுமவர்கள் சொல்லும் பொருளும் எளிதினுணர்தற் பொருட்டுத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலமைத் திருச்சிற்றம்பல தேசிகன் கொடுந்தமிழ் நடையொடும் செந்தமிழ் நடைவிராவி யேனைய காண்டப் பொருளுந் தொகையுறச் செய்த விராமாயணத்துத்தரகாண்டக் கதை தொண்ட மண்டலத்தின்கண் விளங்கிய சென்ன பட்டணத்துக் கல்விச் சங்கத் தச்செழுத்திற் பதிப்பிக்கப் பட்டது.

இது அந்தப் புத்தகத்தின் முகப்புப் பக்கம். கையால் பண்ணிய காகிதத்தில் அச்சிட்ட புத்தகம் இது; இதைப் படிக்கலாம்; ஆனால் கிழிக்க முடியாது. அவ்வளவு உறுதியாக இருக்கிறது.

லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் ஒரு பெரிய நூல் நிலையம் உண்டு. இங்கே கிட்டத்தட்ட நூறு ஓலைச்சுவடிகளும் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் புத்தகங்களும் இருக்கின்றன.

இப்போது உலகம் முழுவதும் தமிழை ஆராய்ந்து நூலெழுதும் பேரறிஞர்கள் இருக்கிறார்கள். பாரிஸ் மாநகரத்தில் ‘காலேஜ்’ த பிரான்ஸ் என்ற கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் ஜான்பிலியோஸா என்பவர் தமிழிலும், வடமொழியிலும் ஆழ்ந்த பயிற்சி உள்ளவர். புதுச்சேரியில் இந்திய மொழி ஆராய்ச்சிக் கழகம் ஒன்று இருக்கிறது. அதன் தலைவர் அவர். தமிழைப் பற்றிய நூல்களும், கட்டுரைகளும், அவர் தாமே எழுதியும், பிறர் எழுத அவற்றை வெளியிட்டும் தமிழ் பரவ வழிவகுத்திருக்கிறார்.

டென்மார்க்கில் கோபன் ஹேகனில், ஸ்காண்டிநேவியன் ஆசிய ஆராய்ச்சிச்சாலை (Scandinavian Institute of Asian Studies) என்ற நிறுவனம் இருக்கிறது. அங்கே தமிழைப் பற்றிய ஆராய்ச்சியும் நடைபெறுகிறது. டாக்டர் அஸ்கோ பார்ப்போலா (Dr. Asko Parpola) என்பவர் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

கோபன்ஹேகனில் ராயல் லைப்ரரி என்ற பெயரில் ஒரு பெரிய நூல் நிலையம் இருக்கிறது. அங்கே கீழ்நாட்டு மொழிகளில் உள்ள நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் 2,75,000 உள்ளன. அவற்றில் தமிழ் நூல்களும் இருக்கின்றன.

ஜப்பானில் டோக்கியோ நகரில் கிழக்காசியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிலையம் (Centre of East Asian cultural Studies) என்ற கழகம் இருக்கிறது. அங்கே திராவிட மொழிகளையும் தமிழ் மொழியையும் பற்றி ஆராயும் அறிஞர்கள் இருக்கிறார்கள்.

அமெரிக்காவிலும் பிற மேல்நாடுகளிலும் தமிழை ஆராயும் அறிஞர்கள் வரவரப் பெருகி வருகிறார்கள்.

இந்தியாவுக்குக் கிழக்கே கடல் கடந்த நாடுகளில் தமிழ் பலபல நூற்றாண்டுகளுக்கு முன்பே பரவி ஊன்றியிருக்கிறது. தாய் லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவைகளை மன்னர் முடிசூட்டு விழாவில் ஓதுகிறார்கள். கீழை நாடுகளில் தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இலங்கைக்கும் தமிழுக்கும் உள்ள உறவு நெடுங் காலமாக உள்ளது. அங்கே தமிழரசர்களே தம் ஆட்சியை நடத்தி யிருக்கிறார்கள். தமிழ் நாகரிகத்தை அங்கேயும் காணலாம்.

இந்தியாவும், இலங்கையும் அரசியல் முறையில் வேறுவேறு நாடுகளாக இருந்தாலும் அங்கே உள்ள தமிழர்கள் தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும், தம் நாட்டைச் சேய்நாடாகவும் எண்ணிப் போற்றி வருகிறார்கள். தமிழ் அங்கே வளம் பெற்று வளர்ந்தது; வளர்கிறது; வளர்ந்துகொண்டே இருக்கும். தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இலக்கியப் பாலம் போட்டவர் ஆறுமுக நாவலர். அவர் இலங்கையிலும் வாழ்ந்தார்; தமிழ்நாட்டிலும் வாழ்ந்தார். இலங்கையைத் தனி நாடு என்று சொல்வதைவிடப் பண்பாட்டினால் இந்தியாவின் இணைநாடு என்று சொல்லிவிடலாம். அங்கே உள்ள சிங்களவர்களும், தமிழர்களும் இந்திய முன்னோர்களின் வழி வந்தவர்கள். சிங்களவர்கள் அதை மறக்க முயன்றாலும் தமிழர்கள் மறக்க மாட்டார்கள். அவர்களுக்குத் தமிழ் உயிர்; சைவம் இதயத் துடிப்பு.

இவ்வாறு மேல் திசையிலும், கீழ்த் திசையிலும் கடல் கடந்து விரிந்து பரந்த தமிழ் இன்னும் உலகம் முழுதும் பரந்து தன் பெருமையைப் பரப்பும் என்பதில் ஐயம் இல்லை.

———

With best compliments from :

Navin Fluorine Industries

Chemicals Division

The Mafatlal Fine Spg. & Mfg. Co. Ltd.,

Mafatlal Centre, Nariman Point,

BOMBAY-400 021.

Phone : 229453 Cable : KONGAB

*With best compliments from:*

# SHREE YANTRA PRIVATE LIMITED

**28, Sham Nath Marg**

**DELHI - 110 054**

**Exporters of**
**Readymade Garments,**
**Handicrafts etc.**

Columbia's Prestigious Release

# Kamba Ramayanam Discourse

By

## Thirumuruga Kripananda Variar

From Sri Rama Jananam To
Sri Rama Pattabisheham
in ten L.P. Records-S/33 ESX. 6071 to 6080.

Available in an Attractive Set Box
At All our H. M. V. Dealers.

**SARASWATHI STORES**
**MADRAS-600002.**

Columbia ★ EMI

Phone: Factory: 327 & 287
Office: 536

Grams: INDOSWISS

# The Indo-Swiss Synthetic Gem Manufacturing Company Ltd.,

13/239, Main Road, Mettupalayam 641 301,
Coimbatore District. Tamilnadu.

Manufacturers of:

## ROUGH SYNTHETIC GEM STONES

(Spinal and Corundum) in various colours and finished roundels in different sizes. (Used in Jewellery and for the manufacture of Jewels, Cup Jewels etc.)

Sole Distributors for Indian Union:

## G. S. & Company

No. 6, Jaffersha Street,
TIRUCHIRAPALLI 620 008.
Phone: 24006
Grams: 'MANEK'

Rastha Gopalji,
JAIPUR 302 001.
Phone: 72814
Grams: 'INDOSWISS'

## தமிழகத்தால் பாதிக்கப்பட்ட உரோமப் பொருளாதாரம்

உலோலா என்ற உரோம நாட்டு அரசி 300,000 தங்க நாணயத்திற்கு ஈடான (பாண்டியநாட்டின்) முத்துக் களை அணிந்திருந்தாள். உரோமநாட்டு மக்களின் இத் தகைய ஆடம்பர வேட்கையால் அந் நாட்டுப் பொருளா தார நிலைமை மிகவும் பாதிக்கப் பெற்றதாகப் பெரிப்பிலீஸ் (Periplus) குறிப்பிடுகின்றது. ஆண்டொன்றுக்கு உரோம நாடு, தான் இந்தியாவிலிருந்து பெறும் ஆடம்பரப் பொருள்களுக்காக மிலியன் பவுனுக்கு ஈடான பொன்னை வாரி வழங்கி வறுமையுற்று விடுகிறதே என உரோம நாட்டு வரலாற்றுசிரியர் 'பிளினி' வருந்திக் கூறுவா ராயினர்.

தமிழ் இலக்கிய வரலாறு
**சி. பாலசுப்பிரமணியன்**

# அயல்நாடுகளில் தமிழ் வளர்ச்சி

[சு. வே. சுப்பிரமணியன்
*இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*]

ஒருநாள் ஆங்கிலேயர் ஒருவர் எங்கள் நிறுவனத்திற்குள் நுழைந்து, "நான் லண்டனிலிருந்து வருகின்றேன். பேராசிரியர் டாக்டர் ஜான்மார் அவர்களிடம் தமிழ்த் தலபுராணங்கள் பற்றி ஆராய்ச்சி செய்கின்றேன். அதற்குப் பயன்படக்கூடிய நூல்கள் உண்டா? நீங்கள் உதவி செய்தல் வேண்டும்'' என்று கேட்டார். நான் வியந்தேன்.

தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழ் படித்து வாழ்கின்ற எத்தனை பேருக்குத் தலபுராணம் பற்றித் தெரியும் என்று சிந்தித்துப் பார்த்தேன். தமிழில் தலபுராண நூல்கள் பல உள. ஆயின் அதனைப் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றே யொன்றுதான் தமிழில் வெளிவந்திருந்தது. தமிழகத்திலேயே இந் நிலை என்றால் லண்டனில் அவருக்கு எவ்வாறு நூல்கள் கிடைக்க முடியும்? ஆயின், அருமை உடைத்தென்று அசாவாமல், முயற்சி திருவினை ஆக்கும் என்ற நம்பிக்கையுடன், தமிழ்மொழிமீதும் தமிழ் இலக்கியத்தின்மீதும் கொண்ட பற்றுக் காரணமாகவே ஆராய்ச்சிக்கு இப் பொருளை எடுத்துக்கொண்டுள்ளார். இதனால் தமிழ்மொழி லண்டனில் எவ்வாறு வளர்ந்துள்ளது என அறியமுடிகின்றது.

ஸ்காட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து ஆகிய நான்கும் அடங்கிய நாட்டை யுனைட்டட் கிங்டம் அல்லது கிரேட் பிரிட்டன் என்று கூறுகின்றோம். இந் நாட்டின் தலைநகரம் லண்டன். அங்குள்ள பி.பி.சி. என்ற வானொலி நிலையம் வழி, மிகச் சிறப்பாக வாரத்தின் மூன்று நாள்கள் தமிழ் ஒலிபரப்புச் செய்கின்றார்கள். பிரிட்டிஷ் நூலகத்தில் ஏறத்தாழ இருபதினாயிரம் தமிழ்நூல்களும், முந்நூறுக்கும் மிகுதியான தமிழ்க் கையெழுத்துப் படிகளும் உள்ளன. இங்குப் பல பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பயிற்சி பெற்ற அறிஞர்கள் இருக்கின்றனர். இவர்களுள், சங்க

இலக்கியத்தில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர் ஜான் மார் என்பவர். டாக்டர் ஆஷர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சிறுகதை பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றியவர். லண்டன் தமிழ்ச்சங்கமும் தமிழ் வளர்ச்சிக்குப் பல நிலைகளில் துணைபுரிகின்றது. திருக்குறளையும் திருவாசகத்தையும் உலகத்தில் பரப்பிய ஜி. யு. போப் தமிழ் கற்பித்த இடமல்லவா லண்டன் நகரம்! பின் ஏன் அங்குத் தமிழ் வளராது ?

லண்டனைப் போன்றே, பல பல்கலைக் கழகங்களைக் கொண்ட ஐக்கிய அமெரிக்க நாடுகளும் தமிழை வளர்த்தன. ஏறத்தாழ 1955க்குப் பின் இந் நாட்டின் சில பல்கலைக் கழகங்களில் தமிழும் திராவிட மொழிகளும் கற்கின்றனர். நூற்றுக்கணக்கான தமிழ் நூல்கள் இக் கழக நூலகங்களில் உள்ளன. சிகாகோ பல்கலைக் கழகத்திலும், அதாகா மாநிலத்தின் கர்னல் கலைக்கழகத்திலும், பிலடெல்பியாவிலுள்ள பென்சில்வேனியா, பெர்க்கிலியிலுள்ள கலி போர்னியா, சியாட்டில் நகரத்து வாஷிங்டன், ஹானலூலுவின் ஹவாய், ஆஸ்டின் நகரத்தின் டெக்ஸாஸ்—ஆகிய பல்கலைக் கழகங்களிலும் பல்வேறு நோக்கில் தமிழ்க் கல்விக்கும் தமிழ் ஆய்வுக்கும் பெருவாய்ப்பு அளித்துள்ளார்கள்.

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில், தமிழ் தொடர்பாகப் பல அறிஞர்கள் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மிகச் சமீப காலத்தில் தமிழில் பிறவினை பற்றி மட்டும் ஒருவர் ஆய்ந்து சிகாகோ பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

டாக்டர் எமனோவ், டாக்டர் எ. கே. ராமானுஜம், டாக்டர் ஷிப்மன், டாக்டர் வின்ட்ஹோம், டாக்டர் ஜியார்ஜ் ஹார்ட் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க தமிழ் அறிஞர்கள். இவர்களுள் சிலர் பலமொழி யறிவுடையவர்கள். சிலர் தமிழ் தவிர, வடமொழியும் ஆழமாகக் கற்றவர்கள். ஜியார்ஜ் ஹார்ட் தமிழ் வடமொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

தனித்தனியாக லண்டனும் அமெரிக்காவும் தமிழை வளர்த்திருக்க, இரு நாட்டறிஞரும் கைகோத்துத் தமிழிற்குச் செய்த தொண்டு குறிப்பிடத் தக்கது. லண்டனில் வாழும் டாக்டர் பரோ என்ற வடமொழிப் பேராசிரியரும், அமெரிக்காவிலுள்ள வடமொழி அறிஞரான டாக்டர் எமனோவும் இணைந்து திராவிட மொழிக்கு ஒரு சொற்பிறப்பியல் அகராதி செய்துள்ளனர். அது தமிழின் பெருமையை அயல்நாட்டிலும் நிலைநாட்டப் பேருதவி செய்கின்றது.

அமெரிக்க மாணவர் நிக்கொலஸ் டர்க்ஸ் என்பவர், 18 ஆம் நூற்றுண்டில் தமிழகத்தை ஆண்ட சமீந்தார்கள் பற்றிய ஒரு பெரிய ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அவர் தமிழகத்திற்கு வந்து இரண்டாண்டுகள் வாழ்ந்து, நேரடியாக எல்லா இடங்கட்கும் சென்று, தமிழர்களே இன்று படிக்க முடியாத கூட்டெழுத்து வடிவிலமைந்த பத்திரங்களையும் தொடர்புடைய சாசனங்களையும் படித்து ஆய்வு செய்தார் என்ருல், அயல்நாட்டில் தமிழ் வளர்ச்சி எந்த அளவு அமைந்துள்ளது என்பது நாம் எண்ணி இன்புறத் தக்கது.

சோவியத் ஒன்றியமாகிய ரஷ்ய நாடு, பலமொழிகளின் கலைக் கூடமாக அமைகின்றது. இங்குப் பல கலைக்கழகங்களிலும் நிறுவனங்களிலும் தமிழ் கற்பிக்கின்றனர். சுமார் இருபது ஆண்டுகளாக மாஸ்கோவிலுள்ள கீழைக்கலையியல் நிறுவனத்திலும், ஆசிய ஆப்பிரிக்கக் கலையியல் அமைப்பகத்திலும், லெனின்கிராட் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க்கல்விக்கு நல்ல வரவேற்பு உள்ளது. டாக்டர் ஆன்ட்ரனேவ் என்ற பேராசிரியர் தமிழுக்காகப் பல ஆய்வுகள் செய்து ஆய்வு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

பல தமிழ் இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்படுவதும், அவை குறித்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதும் சோவியத் நாட்டில் தமிழின் விரைந்த வளர்ச்சிக்குச் சிறந்த சான்றுகளாம். ஏ. இப்ராகிமோவ், திருவள்ளுவரின் திருக்குறளை, ஈரடிச் செய்யுளிலேயே மொழிபெயர்த்துள்ளமை சிறப்பான ஒரு செய்தி. திருக்குறளுக்கு இரு மொழிபெயர்ப்பும், பாரதி பாடலுக்குப் பல மொழிபெயர்ப்பும் வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. 1963 ஆம் ஆண்டு சிமிர்னேவா என்பவர் பாரதி கவிதைகளின் மொழிபெயர்ப்பொன்றனை வெளியிட்டார். 1970 க்குப் பின் பூர்ணம் சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் துடிப்புள்ள சில ரஷ்ய மாணவர்கள் சங்கப் பாடல்களையும் அப்பர் - சம்பந்தர் - சுந்தரர் - வாதவூரர் ஆகியோரின் படைப்புக்களையும் ஆழக்கற்றுப் பெருமுயற்சியுடன் சில மொழிபெயர்ப்புகளைக் கொணர்ந்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், திருவாசகம் ஆகியவற்றின் பெயர்ப்பும், பழந்தமிழ்க் கதைகள் பலவற்றின் தொகுப்பும் குறிப்பிடற்குரியன. சங்க முல்லைப் பாடல்களைக் கற்று 1974 ஆம் ஆண்டு ஏ. எம். துப்பான்ஸ்கி தயாரித்த பொருட் கட்டுரை, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, கார் நாற்பது ஆகியனவற்றை ரஷ்யருக்கு அறிமுகப்படுத்துகின்றது.

பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமின்றித் தற்காலப் புதினங்களும் சிறுகதைகளும் கூட ரஷ்யாவின் ஆய்வுக்கும் மொழி பெயர்ப்

புக்கும் வாய்ப்பாகக் கொள்ளப்பட்டுள்ளன. புதுமைப் பித்தன் கதைகள், ஜெயகாந்தனின் வாழ்க்கை அழைக்கிறது, லக்ஷ்மியின் 'பெண் மனம்', கல்கியின் 'அலேஓசை', அகிலன்-ஜானகிராமன்-கு. அழகிரிசாமி, கி. வா. ஜ இன்ன பிறர் கதைகள் அடங்கிய இந்தியச் சிறுகதைத் தொகுதி ஆகியவை குறிப்பிடத்தக்கன.

முதல் மூன்று தமிழ் நாவலாசிரியர் பற்றிய ஆய்வுக் கட்டுரையை வி. ஏ. மகரென்கோ என்பவர் தந்துள்ளார். எல். ரோஷன்ஸ்கி கல்வியின் 'பார்த்திபன் கன'வை ஆய்ந்துள்ளார். மணிக்கொடி, சிறுகதை வளர்ச்சியில் பெற்ற பங்கு பற்றியும் புதுமைப்பித்தன் சிறுகதை பற்றியும் எல். பிசிகிஞ ஆராய்ந்துள் ளார். தற்போது விபஃர்னிகா என்பவர் ஜெயகாந்தன் பற்றிய ஆய்வு நடத்துகின்றூர்.

மாஸ்கோவிலுள்ள முன்னேற்றப் பதிப்பகம், பல ருஷ்ய நூல்களைத் தமிழில் பெயர்த்து அச்சிட்டும், நியூசெஞ்சுரி புத்தக நிலையம் வழியாகவும் இருமொழி இணைவுக்கான தொண்டுகள் புரி கின்றது.

1971 ஆம் ஆண்டில் நடந்த மூன்ருவது உலகத் தமிழ் மாநாடு, பிரான்ஸ் நாட்டின் தமிழ்வளர்ச்சியை உலகுக்கு எடுத்து மொழிந்தது. பிரான்ஸ்நாட்டின் தலைநகரான பாரீசில் தமிழகத்தைச் சேர்ந்த திரு. காசி அவர்கள் தமிழ் கற்பிக்கின்ருர்கள். பிரெஞ்சு நாட்டில் 1968 ஆம் ஆண்டு தமிழ்க்கல்வி தொடங்கிற்று. ஜுலியன் வின்சன், சிந்தாமணி, சிலம்பு, மேகலை, ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு போன்றவற்றைப் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்துத் தமிழர் பண்பாட்டையும் பழமையையும் அந் நாட்டினர்க்கு உணர்த்தினர். ஜுல்ஸ் ப்ளாக் என்பவர் திராவிட மொழிகளின் அமைப்பைப் பற்றிய ஆய்வினைச் செய்து தமிழுக்கு மிகச்சிறந்த தொண்டு ஆற்றியுள்ளார். மேற்கூறிய நூல்கள் தவிர, திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், பரிபாடல், காரைக்காலம்மையார் பாடல்கள் போன்றவை பிரஞ்சு மொழியில் வெளிவந்துள்ளன.

இந்திய இயல் பற்றிய கல்விக்காகவும் ஆய்வுக்காகவும், தமிழ் நாட்டிலுள்ள பாண்டிச்சேரியில் பிரஞ்சு அரசு ஒரு தனி நிறுவனம் அமைத்துள்ளது. இங்குத் தமிழ் பற்றிய ஆய்வு மிகுதியாக நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது. சங்க இலக்கியம், பதினெண்கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்களிலுள்ள சொற்களைத் தொகுத்து, அகரவரிசைப்படுத்தி, 'பழந்தமிழ்நூற்

சொல்லடைவு' என்ற அகராதியைப் பேரளவில் வெளியிட்டமை இந் நிறுவனத்தின் போற்றற்குரிய பணிகளில் ஒன்ருகும்.

ஜெர்மனியும் தமிழை வளர்ப்பதில் தனித்த ஆர்வம் காட்டியுள்ளது. கொலோன் பல்கலைக் கழகத்திலும் ஹைடல்பர்கிலுள்ள தெற்காசியப் பல்கலைக் கழகத்திலும், ஹம்பர்க் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பயிற்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. நம் நாட்டைச் சார்ந்த டாக்டர் தாமோதரன் ஹைடல்பர்கில் தமிழ் மொழி கற்பிக்கின்ருர்.

இந்த நாட்டில் 18 ஆம் நூற்ருண்டிலேயே தமிழ் இலக்கண நூலொன்று லத்தீன் மொழியில் அச்சேறியதாகத் தெரிகின்றது. தமிழகத்திற்குச் சமயம் பரப்பும் நோக்குடன் வந்த சீகன் பால்கு ஐயரே இதன் ஆசிரியர் என்பர். நீதிவெண்பா, கொன்றை வேந்தன், உலகநீதி என்பனவற்றை இவரே ஜெர்மானிய மொழியில் பெயர்த்தார். தமிழிலிருந்து ஐரோப்பிய மொழிக்குச் சென்ற முதல் நூல்களாக இவை கருதப்படுகின்றன. கார்ல் க்ரால், ஆங்கிலம், லத்தீன், ஜெர்மன் மொழிகளில் பல தமிழ் நூற்களைத் தந்த சிலரில் முன்ஞேடியான ஜெர்மானியர் ஆவர். அவரது 'பிப்லியோதெக் துமுலிகா' முதல்-இரண்டாம் பகுதிகளில் கைவல்ய நவநீதம், ஆத்மபோத பிரகாசிகை, பஞ்சாதச பிரகரணம் ஆகியவற்றையும், மூன்ரும் பகுதியில் வள்ளுவரின் குறளையும் செர்மன் மொழியில் தருகின்றது. நம்பியகப்பொருளையும், சிவஞான சித்தியாரையும் கூட இவர் செர்மன் மொழியில் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

போலந்து நாட்டில், வார்சா பல்கலைக் கழகம் இந்திய இயல் ஆய்வுக்கென ஒரு தனித் துறையைக் கொண்டுள்ளது. இதில் தமிழ்மொழிக்கென ஒரு பிரிவு அமைத்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் இராம. சுந்தரம் அவர்கள் இங்குத் தமிழ் கற்பிக்கின்ருர். 1972 முதல் இங்குத் தமிழ்க் கல்வி தொடங்கப்பெற்றுத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பல்கலைக் கழகத்தில், மூன்ருண்டுத் திட்டங்களாகத் தமிழ்க் கல்வி அளித்து வருகின்றனர். நூற்றுக்கணக்கான தமிழ்நூல்களும், ஆய்வு இதழ்களும், மாத வார இதழ்களும் இங்குள்ள நூலகத்தில் கிடைக்கின்றன. திராவிடப் பண்பாட்டையும் தமிழ்ப் பண்பாட்டையும் அறிவதற்கு இங்குள்ளோர் மிகுதியான ஆர்வம் செலுத்துகின்ற காரணத்தால் தமிழ்க் கல்விக்கும் வளர்ச்சிக்கும் சிறந்த எதிர் காலம் இருப்பது புலப்படுகின்றது. தற்போது திருக்குறள் போலிஷ் மொழியில் இங்கு வெளி வந்துள்ளது.

நெதர்லாந்து நாட்டில், லெய்டன் பல்கலைக் கழகத்திலுள்ள கெர்ன் நிறுவனத்தில், கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வி கற்ற டாக்டர் கோவிந்தன் குட்டி தமிழும் மலையாளமும் கற்பித்து மொழியாய்வினை வளர்த்து வருகிறார். அந் நாட்டிலுள்ள யூட்ரெக்ட் பல்கலைக் கழகத்தில் தமிழை முதன்மைப் பாடமாகவும் விருப்பப் பாடமாகவும் திராவிட மொழியியல் பாடங்களுடன் சேர்த்துப் படிக்கின்றனர். தற்போது டாக்டர் கமில் ஸ்வெலபில் இங்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ் கற்பித்து வருகின்றார். பல நிலையில் இங்குத் தமிழ் வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்கது.

பிற நாட்டுத் தமிழறிஞர்களுள் தமிழைத் தெளிவாகப் பேசித் தமிழில் மிகுதியான ஆராய்ச்சிகளைச் செய்தவர் டாக்டர் கமில் ஸ்வெலபில். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றவர். இவர் செக்கோஸ்லேவேக்கியாவின் தலைநகராகிய பிராகில், கீழை மொழிகள் நிறுவனத்தில் திராவிட மொழிக் கல்விப் பகுதிக்குச் சிறப்புத் தலைவராக இருந்தவர். இங்குத் தமிழ்க் கல்விக்கு உயர்ந்த வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் ஸ்வெலபில் அங்குப் பணிபுரிந்த போது, பல தமிழ் நூல்களைச் செக் மொழியில் வழங்கியுள்ளார்.

தற்போது, செக்கோஸ்லேவாக்கியாவின் சார்லஸ் பல்கலைக் கழகத்திலுள்ள பேராசிரியர் டாக்டர் வாசக் தமிழ்மொழியில் நல்ல திறனுடையவராகக் காணப்படுகின்றார்; தனித் தமிழில் பேசுகின்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இப் பேராசிரியரும் இணைந்து, உலகத் தமிழ் மாணவர்க்குத் தமிழின் சிறந்த இலக்கியங்களை ஆங்கில மொழியில் கொடுப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்பட்டு வருகின்றார்கள். இதனால் தமிழ் வளர்ச்சி உலகளாவும் என்பதில் ஐயமில்லை.

போர்ட் லூயி என்ற நகரைத் தலைநகரமாகக் கொண்ட மொரிஷியஸ் நாட்டின் ஒன்பது லட்சம் மக்களில் ஒரு லட்சம் பேர் தமிழர்கள். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலிருந்து வேலை நிமித்தமாகவும் வாணிகம் காரணமாகவும் அங்குக் குடியேறியவர்களே இப்போது பல்கிப் பெருகி அங்கு வாழ்கின்றார்கள். அங்குத் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன; தமிழ் வளர்ச்சிக்கு மக்கள் முயன்றுகொண்டிருக்கின்றனர் எனலாம்.

இந்தியர்களும் ஃபிஜி மக்களும் வாழ்கின்ற ஃபிஜித் தீவுகளில் ஏறத்தாழ 500 மாணவர்களுக்கு மேல் ஆறு பள்ளிக் கூடங்களில் தமிழ் கற்கின்றனர். இங்குள்ள இராமகிருஷ்ண மடத்தில்

தமிழுக்கு ஒரு நூல் நிலையம் அமைந்துள்ளது. தமிழ்க் கலைகள், இசை, நடனம் போன்றவற்றை இம் மக்கள் பெரிதும் விரும்பு கின்றனர். தைப்பூசம், பங்குனி உத்திரம், புத்தாண்டுப் பிறப்பு, கார்த்திகை தீபம் போன்ற தமிழ் விழாக்கள் சிறப்பாகக் கொண் டாடப்படுகின்றன. திருப்பாவை பாராயணம் நடைபெறுவதாகக் கூறுகின்றனர். ஏறத்தாழ நாற்பது கோயில்களில் தீ மிதிப்பு விழா நடைபெறுகின்றது. இது, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையின் எச்சம் என்று கூறலாம்.

செனகல் நாட்டின் தலைநகரான டாக்கரில் திராவிட இயல் கல்விக்கு இந்தியாவிலிருந்து ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டுள் ளார். தமிழரின் பண்பாட்டிற்கும், ஆப்பிரிக்க மக்களின் பண் பாட்டிற்கும், மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனை, அந் நாட்டு அதிபர் செங்கோர் நினைப்பதோடு அதனை ஆய்வு செய்வ தற்குத் துணைபுரிந்து வருகின்றார். உலகத் தமிழ் மாநாடு ஒரு முறை செனகலில் நடத்தல் வேண்டும் என்று மிகுதியான ஆர்வம் கொண்டு, அத் தலைவர் அழைப்பும் விடுத்துள்ளார்.

முதலாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த மலேசியாவில் இந்தியரும், மிகுதியாகத் தமிழர்களும் வாழ்கின்றனர். தலைநகரான கோலாலம்பூரிலுள்ள மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய இயல் கல்வித்துறை அமைந்துள்ளது. இத் துறையில், தமிழ்க் கல்விக்குத் தனித்த இடம் உண்டு. தமிழகத்திலுள்ள பேராசிரியர்களே அங்குச் சென்று தமிழ் கற்பிக்கின்றார்கள். தமிழில் பட்டப் படிப்பும், உயர்நிலை ஆய்வுகளாகிய எம்.ஏ., பிஎச்.டி. போன்றனவும் பெற அங்கு வாய்ப்பு உண்டு. அங்கு 618 தமிழ்ப் பள்ளிகளில் ஏறத் தாழ எண்பது ஆயிரம் மாணவர்கள் தமிழ் கற்கின்றனர்; இரண்டா யிரத்து இருநூறு ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கின்றனர். பல்கலைக் கழக நூலகங்களில் ஏராளமான தமிழ் நூல்கள் உள்ளன.

மலேசியாவில், பொதுமக்களிடையே தமிழ்த் தொடர்ச்சிக் கண்ணியாகத் தமிழ்த் தினசரி ஒன்று பணிபுரிகின்றது. பல தமிழ் மன்றங்கள் தமிழையும் சமயத்தையும் வளர்க்கின்றன. பொங்கல் விழாவை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இவ்வாறு தமிழ்வளர்ச்சிக்கு அந் நாடு செய்த—செய்கின்ற தொண்டு பெரிது.

மலேசியாவுக்கு அண்மை நாடான சிங்கப்பூரும் தமிழை வளர்த்தது. சிங்கப்பூர் கடைவீதியில் தமிழ்மொழியில் எழுதப் பட்டுள்ள பல பெயர்ப்பலகைகளைக் காணமுடியும். தமிழர் பலர் வாணிபம் செய்கின்றனர். சிங்கப்பூரிலுள்ள பள்ளிகளில் இரண் டாவது மொழியாகத் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. தமிழ்

வளர்ச்சிக்கு மலேசியா சிங்கப்பூர் மக்கள் பெரிதும் ஆதரவு தருகின்றனர்.

அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்துப் பல ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்ற ஒரே நாடு இலங்கை. இலங்கை வாழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழர். இலங்கையிலுள்ள கொழும்பு, பரதேனியா, பேராதனை, கெலானியா, நுகேதா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழக இருப்புகளில் தமிழில் பி.ஏ., எம். ஏ., வகுப்புகளும், பிஎச்.டி, பட்டம் பெறுவதற்குரிய வாய்ப்புகளும் உள்ளன.

உலகத்திற்குத் தமிழ்ப் படைப்பிலக்கியத்தைத் தருவதில் தமிழகம் மட்டுமன்றி, இலங்கைத் தமிழர்களும் பெரும்பங்கு கொண்டுள்ளனர். இலங்கையிலிருந்து நீண்டபயணம் போன்ற பல சிறந்த நாவல்கள் வெளிவருகின்றன. நான்காவது உலகத் தமிழ் மாநாடு இங்கு நடைபெற்றதும் நினைத்தற்குரியது.

சப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவிலுள்ள ஆசிய ஆப்பிரிக்க மொழிப் பண்பாட்டுக்கல்வி நிறுவனத்தில், தமிழ்க் கல்விக்கு மிகுந்த வாய்ப்பு உண்டு. இப் பல்கலைக் கழகத்தில் பணி புரிகின்ற பேராசிரியர் நொபுருகரஷிமா சோழர் வரலாற்றை ஆய்ந்து, பல கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்க் கல்வியை ஏற்கனவே ஓரளவு கற்றுத்தேறிய இரு சப்பானிய மாணவர்கள் தற்போது தமிழகத்திற்கு வந்துள்ளனர். மணிமேகலை போன்ற பௌத்த தமிழ் இலக்கியங்களைக் கற்று, பௌத்தக் கொள்கைகளைத் தெரிந்து கொள்ளுவதற்காக இவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்விப்பயிற்சி பெறுகின்றனர். தமிழ்மொழி சப்பானில் கொண்ட வளர்ச்சியின் காரணமாகத்தான் இவ் ஆய்வாளர் இங்கே வந்து கற்கின்றனர் என்பதில் ஐயமில்லை.

மேற்கண்ட நாடுகளைப் போன்றே இன்னும் பல நாடுகளும் அங்குள்ள தமிழறிஞரும் தமிழை வளர்க்கின்றனர். எதிர்காலத்தில் தோன்றப்போகும் தமிழ்மொழியின் பெருவளர்ச்சியை நாம் இவற்றிலிருந்து ஊகிக்க முடிகின்றது. நாட்டுக்கும் தமிழுக்கும் ஒருங்கே தொண்டாற்றிய புரட்சிக் கவிஞர் பாரதி உலகெங்கும் தமிழ் பரவவேண்டும் என்று கனவு கண்டார் :

> "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
> பரவும் வகை செய்தல் வேண்டும்"

அவர் கனவு இன்று நனவாகிக்கொண்டு வருவதை நாம் நடப்பில் பார்க்கின்றோம்.

———

# தலைமேல் வைப்பாம்

[டாக்டர். க. ஆறுமுகன்

*பேராசிரியர், தில்லிப் பல்கலைக் கழகம்]*

## 1

வள்ளுவர்தம் குறள்மலரின் மணந்தன் னோடு
மணிவாச கம்மலரின் தேனைக் கூட்டி
அள்ளியுண்டு தேக்கெறிந்திங் கதனை யென்றும்
அறியாத தமிழர்க்கும் பிறர்க்கும் ஊட்டித்
தெள்ளுதிரைக் கடல்கடந்த சீமை யெல்லாம்
சென்றூட்டித் தமிழ்ப்புகழைப் பரப்பி என்றும்
தள்ளவிலாப் பேர்கொண்ட ஜீயூப் போப்பின்
தாளின்போ தெப்போதும் தலைமேல் வைப்பாம்.

## 2

அமிழ்துநிகர் தமிழ்மொழியை இன்னும் இங்கே
அளவில்பல் மொழிகளுடன் ஆய்ந்து நீரின்
குமிழிபோல் சிலமொழிகள் உடைந்த போதும்
குவலயத்தின் தாய்மொழிபோல் நிலைத்த மேன்மை
இமிழ்திரைசூழ் கடல்கடந்தும் எடுத்துச் சொன்னான்,
இதையிகழ்ந்து மிலேச்சமொழி என்று சொன்ன
தமிழ்ப்பகைவர் வாதமெலாம் சாடி வெற்றி
தருகால்டு வேலின்தாள் தலைமேல் வைப்பாம்.

## 3

அரியதமிழ் மொழிகண்ட நிகண்டு தன்னை
அழகுசதுர் அகராதிக் கலையாய் மாற்றி
உரியபல காப்பியப்பண் பனைத்தை யுந்தன்
உயர்தேம்பா வணியாக்கித் தமிழெ ழுத்தின்

வரிவடிவம் பலவற்றைச் சீர்திருத்தி
வயிறுவலிக் கச்சிரிக்கும் கதைக ளாக்கித்
தரணிபுகழ் தமிழ்மேன்மை கடல்க டந்தும்
தருவீர மாமுனிதாள் தலைமேல் வைப்பாம்.

4

தென்னாடு கண்டதமிழ் மொழியி னோடு
சீர்சைவ சமயத்தை உலகில் உள்ள
பன்னாடும் பரவிடுநற் பான்மை கண்டு
பண்போடிங் கவைதம்மைப் பயின்று சென்று
நன்னாடு பலவறியும் சைவ நூல்கள்
நற்றமிழ்நூல் பலவாக்கிக் கடல்க டந்து
தன்னாடாம் இலங்கையிலும் வாழ வைத்த
தமிழறிஞன் நாவலர்தாள் தலைமேல் வைப்பாம்.

5

சீர்மிகுதொல் காப்பியமும் பிறவும் உள்ள
செந்தமிழ்நூல் செல்லரித்துச் சிதைவு றாமல்
பார்மிகுநல் புகழ்படைத்துப் பரவும் வண்ணம்
பலரிடத்தும் பெறுமோலைச் சுவடிக் கெல்லாம்
ஏர்மிகுநூல் வடிவளித்தும் கடல்க டந்தும்
இலங்கையரும் பயிலவகை இயற்றி யிங்ஙன்
தார்மிகுநல் மார்தட்டித் தமிழைக் காத்த
தாமோத ரன்றாள்நம் தலைமேல் வைப்பாம்.

———



# ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்

## 11/231-பி, டாக்டர் நஞ்சப்பா ரோடு,

## கோயமுத்தூர் - 641 018.

★ பாரதம் முழுவதும் பரவியுள்ள 850 க்கு மேற்பட்ட நிலையங்களை இணைத்துச் சரக்குகளைப் போக்குவரத்து செய்து வருகிறோம்.

★ ஏ பி. டி. பார்சல் சர்வீஸின் கட்டணம் ஒரு குவிண்டாலுக்கு (100 கிலோகிராமுக்கு) ஒரு கிலோ மீட்டருக்கு 3.8 பைசா மட்டுமே. அதாவது 4 பைசாவுக்கும் குறைவு.

★ மக்கள் விரும்பி அணியும் கைத்தறி மற்றும் கதர் ஜவுளிகளுக்கு 30% கட்டணச் சலுகை வழங்குகிறோம். இவைகள் 600 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் உள்ள நிலையங்களுக்கு அனுப்பப்பட்டால் 30% க்கு மேலும் சலுகை உண்டு.

★ கதர், கைத்தறி ஜவுளிகளுக்கு மட்டும் குறைந்தபட்ச கட்டணம் ரூ. 4-50 ஆக 1—8—77 முதல் குறைக்கப் பட்டுள்ளது.

★ எல்லா ஊர்களுக்கும் 'டு பே' (To Pay) புக்கிங் வசதி உண்டு.

★ குறைவான கட்டணம்! விரைவான டெலிவரி! திருப்தியான சேவை! இவையே ஏ. பி. டி. பார்சல் சர்வீஸின் நோக்கங்கள்.

—★—★—

# THE KARUR VYSYA BANK LIMITED,

**Registered and Central Office**

**JAWAHAR BAZAAR KARUR–639 001 (Tamilnadu)**

## The Safe and Secured place to save:

**Thirumagal Thirumana Thittam:**

**A unique scheme for:**

i) Gala celebration of marriages
ii) Imparting higher education to your sons/daughters
iii) Carefree and happy retired life

**Jumbo Deposit Scheme:**

Special scheme for your children to save through the attractive elephant doll supplied by us.

**Honybee Deposit Scheme:**

Specially suitably for traders, wage earners facilitates saving rupee 1/- and its multiples

**Savings and Recurring Deposit Scheme:**

Suitable for every man

and many more attractive and profitable schemes to suit your purse and satisfy your needs.

*K. V. Raghavachari*
Chairman

A BRANCH OF THE BANK WILL BE OPENED AT DELHI SHORTLY

*With best compliments from:*



**T. V.**

**SUNDARAM IYENGAR & SONS**

**LIMITED**

303. SURYA KIRAN

19, Kasturba Gandhi Marg

**NEW DELHI - 110 001.**

With Best Wishes

From



MADRAS REFINERIES LIMITED

MANALI

MADRAS - 600 068

# கவிச் சுடர்

[கவியரசு சோமசன்மா, மலேசியா]

1

கதிரவன் சுடரைக் கண்டால்
காசினி களிப்பைச் சிந்தும்
மதிதரும் சுடரி லிந்த
மா நிலம் மகிழ்ச்சி கொஞ்சும்
புதியநற் கவியால் மக்கள்
புகழுடன் சிறப்பு பொங்கும்
புதுமையில் மாற்றம் ஊட்டும்
புதுக்கவிச் சுடரைக் காண்போம்.

2

அன்னை நம் தமிழைத் தூய
அணிபூட்டி யழகு பார்த்த
முன்னையக் கவிக்கோ வெல்லாம்
முனைந்துநூல் செய்த காலை
கன்னியாம் தமிழ்த்தாய் மெச்ச
கவிதையால் அணிகள் செய்தார்
திண்மையாய் நமது நாட்டில்
திருக்கவிச் சுடரைக் காண்போம்.

3

வளர்பிறை மலேசி யத்தில்
வளர்மதி கவிஞர் பல்லோர்
விளை நில மக்கள் நெஞ்சில்
விதைக்கின்ற கவிதை யாலே
தளர்விலாத் தமிழ ரிங்குத்
தலையெடுத் தொருமை காண
அளப்பரும் பொருள்பொ திந்த
அருட்கவிச் சுடரைக் காண்போம்.

4

தரங்கெட்ட மனத்தி லெல்லாம்
தறிகெட்ட இதய மெல்லாம்
உரங்கெட்ட உளத்தி லெல்லாம்
உயர்வற்ற நினைப்பி லெல்லாம்
கரவற்ற வலிமை யோடு
களிப்புற்றுப் புதுமை காண
இறப்பில்லாக் கவிதை யாத்து
எழிற்கவிச் சுடரைக் காண்போம்.

5

தாய்நாடு எழுச்சி காண
தமிழ்வழி புகழ்ச்சி பேண
சேய்கள்தாம் செழிப்பில் வாழ
திருசேரத் தமிழர் சூழ
தாய்மைக்குத் தலைவ ணங்கித்
தளர்விலாக் கருத்தைக் கொட்டித்
தூய்மைசேர் கவிக்கு லத்தோர்
தொல்கவிச் சுடரைக் காண்போம்.

6

கதிரொளி இல்லை யென்றால்
காரிருள் உலகை மூடும்
மதிதனில் மடமை யென்றால்
மனத்தினில் இருளும் சூழும்
பதிந்திடும் இருளை ஓட்டப்
பாரினில் ஒளியே வேண்டும்
புதியதோர் உலகம் காணப்
புதுக்கவிச் சுடரைக் காண்போம்.

**With compliments from:**

# TATA
# ENTERPRISES

*With best compliments*
*from*

SRI SAKTHI
TEXTILES LIMITED

POST BOX NO. 36
POLLACHI - 642 001

With compliments from

# NIRLON SYNTHETIC FIBRES & CHEMICALS LIMITED

NIRLON HOUSE

254-B, Dr. Annie Besant Road, Worli

BOMBAY-400 025

Tele No. 457211
Telex: 011-2825
Gram: 'NIRNIRLON'

# Chowgules Were The First In Goa

- ★ To Export iron ore to Japan and Western Europe.
- ★ To Mechanise Mining operations by modern machinery and techniques.
- ★ To Construct barges of 1000 D. W. capacity, drugs, dredgers and deep sea fishing trawlers.
- ★ To set up a mechanical ore handling plant at Mormugao port, the first of its kind In India in 1959.
- ★ To set up an iron ore pelletisation plant a decade ago the first in Asia, to earn added vaiue.
- ★ To use up-topping vessel for mid-stream loading.
- ★ Again the first to set up yet ona more large pelletisation plant in the joint sector at Shiroda in Goa which will go on stream soon.

## CHOWGULE AND COMPANY PRIVATE LIMITED

CHOWGULE HOUSE
MORMUGAO HARBOUR
**GOA-403 803**

ALLAHABAD BANK BUILDING
17, PARLIAMENT STREET,
**NEW DELHI-110 001.**

# ஆங்கிலம்
# கடன் வாங்கியுள்ள
# தமிழ்ச் சொற்கள்

[பர். ஆர். இ. ஆஷர்]

தமிழையும் பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்ட சொற்களையும் பற்றிய பேச்சு எழும்பொழுதெல்லாம், பெரும்பாலும் தமிழ் பிறமொழிகளிலிருந்து கடன் வாங்கியதாகக் கருதப்படும் சொற்களைப் பற்றித்தான் பேசப்படுகிறது. தமிழ் அகராதியில் எந்த அளவுக்குச் சொற்கள் சுத்த திராவிட இனமல்லாதவை என்று கேட்கப்படலாம். இதற்குச் சரியான கணிப்பைத் தருவதில் இடர்ப்பாடு இருந்தாலும், அகராதிகள் போன்ற பலதரப்பட்ட சான்றுகளிலிருந்து இதற்கு விடை காணலாம். இவ்விதமே, வின்ஸ்லோவின் அகராதி (1862)யில் தரப்பட்டுள்ள 22,000 மூலச் சொற்களில் 8,000 வடமொழிச் சொற்கள் என்றும், தரங்கம்பாடி தமிழ்—ஆங்கில அகராதி (1933)யில் 48 விழுக்காடு சொற்கள் தமிழ் அல்லாத மூலத்திலிருந்து பிறந்தவை என்றும் காட்டலாம். ஆனால், இம் மாதிரியான செய்திகள் பல காரணங்களால் முற்றிலும் தவறான கணிப்பைத் தருபவை. முதலாவதாக, வடமொழியிலிருந்து பிறந்தவை என்று காட்டப்படும் சொற்களிலேயே பல பிழைகள் உள்ளன. காரணம்: அண்மைக் காலத்தில், பேராசிரியர் பர்ரோவுடையவும், முக்கியமாகப் பேராசிரியர் எமனேவுடையவும் ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வருவதைப்போல, கடன் வாங்குவது என்று வரும்போது வடமொழியிலிருந்து தமிழ்தான் பல சொற்களைக் கடன்வாங்கியிருக்கிறது என்று ஊகித்துக் கொள்வதுதான் சரி எனத் தோன்றலாம். மேலும் அகராதியிலுள்ள சொற்களை மட்டும் எடுத்துக்கொண்டு இவ்வாறு கணக்குப் பார்க்கும்போது சம்பந்தப்பட்ட திசைச் சொற்கள், ஏதோ ஒன்றிரண்டு அரிய நூல்களில் பயன்படுத்தப்பட்டவையேயொழிய பொதுவாக, நாள்தோறும் வழக்கில் இருக்கும் சொற்கள் அல்ல என்பதைக் கவனிப்பதில்லை. மேலும் தமிழ் நூல்களில் பயன்படுத்தப்பட்டிருந்

தாலும் இப்போது வழக்கொழிந்துவிட்ட திசைச் சொற்களையோ, திசைச் சொற்களுக்கு ஒப்பான பொருள் உடையவையும், வழக்கில் உள்ளவையும், தொன்று தொட்டு இருந்து வருபவையுமான தூய தமிழ்ச் சொற்களை அம் மாதிரியான கணிப்புகள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. தமிழைப் பொறுத்தவரை, பிஷப் கால்டுவெல் அவர்கள் ஒரு நூற்றுண்டுக்கு முன்னமேயே குறிப் பிட்டதைப்போல [1]"அது தன்னிடமுள்ள வடமொழிச் சொற்கள் பெரும்பாலானவை இன்றியே தனித்து இயங்க முடியும்". சான்றுக, தற்கால விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, ஐரோப்பிய மொழிகளிலிருந்து சொற்களை ஏற்றுக்கொள்ளத் தமிழ்மொழி தயாராக இருக்கவேண்டும் என்பது உண்மைதான். இருந்தாலும் பிற நாகரிகங்களுடன் பல நூற்றுண்டுகளாகத் தொடர்ந்த தொடர்பு கொண்டுள்ள பல மொழிகளைவிட, தமிழ் மொழி யானது, அம் மொழியில் மையமாய் அமைந்துள்ள சொற்கள் பிற மொழியிலிருந்து கடன் வாங்கியவை அல்ல என்று சொல்லும் படியாகப் பாதுகாத்து வந்திருக்கிறது. இப்படிப்பட்ட கூற்றை ஆங்கிலத்தைப் பொறுத்தவரை நாம் சொல்ல இயலவில்லை. ஆங்கிலமொழி, அதன் வரலாற்றுக் காலம் பூராவிலுமே, அது தொடர்பு கொண்ட எந்த மொழியிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கத் தயங்கியதே இல்லை.[2]

இதன் விளைவு என்னவென்றால், மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, தமிழில் திராவிடச் சொற்கள் எந்த அளவுக்கு இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு ஆங்கிலத்திலும் ஆங்கிலோ-சாக்சன் சொற்கள் இருக்கின்றன என்று தோன்றினாலும் உண்மை அதற்கு முற்றும் புறம்பானது.[3] ஆங்கில அகராதி அடிக்கடி கடன் வாங்கிய வேற்றுமொழிச் சொற்களின் பிறப்பிடங்களில் இந்தியத் துணைக்கண்டமும் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.[4]

---

1. R. Caldwell, A Comparative Grammar of the Dravidian Languages, 3rd edn., Madras 1956-p. 47.
2. On this see Mary S. Serjeantson, 'A History of Foreign Words in English' London, 1935. Cf. also' 'The Stanford Dictionary of Anglicised Words and Phrases'-edited by C.A.M. Fennell, Cambridge, 1892.
3. See Caldwell, cit. p. 46.
4. See Ernest Weekley's interesting essay 'The Anglo-Indians', in 'Something About Words', London, 1935, pages 177-190.

இதன் தொடர்பான (இந்திய) மொழிகளில் திராவிட இன மொழிகளுக்குக் கணிசமான பங்கு உண்டு. தமிழைப் பற்றிக் கூறியதைப் போலவே, ஆங்கிலத்திலும், அந்த மண்ணுக்குப் புறம்பான சொற்கள் எந்த விழுக்காட்டில் இருக்கின்றன என்று அறுதியிட்டுக்கூற இயலாது. ஒரு சமயம் அல்லது இன்னொரு சமயம் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்கள், பதிவு ஏடுகள் ஆகியவற்றில் தலைகாட்டி உள்ள சொற்களை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால், ஆங்கில மொழியில் உள்ள திராவிட மொழிகளைச் சேர்ந்த சொற்கள் மிக அதிகமாகத்தான் இருக்கும். இவ்விதம்தான் [5]வில்சன் அகராதியில் 4,000 திராவிடச் சொற்கள் உள்ளன. அவற்றுள் ஆயிரம், தமிழ்ச்சொற்கள். இவற்றுள்ளும் பெரும்பாலானவை தனிப்பட்ட தேவைகளுக்காக உண்டானவை. ஆங்கிலச் சொற்களிடையே நிரந்தரமான இடம் பிடித்தவை அல்ல. அவை வில்சன் அகராதியைவிட, சொற்களைத் தேர்ந்தெடுத்து, வடிகட்டிப் போடப்பட்டது விட்வொர்த் அகராதி.[6] அதிலும் 400 (நானூறு)க்கும் மேற்பட்டவை திராவிடச் சொற்கள்; அவற்றிலும் மூன்றில் ஒரு பங்கு தமிழ்ச் சொற்கள். இவைகளிலும் எத்தனையோ சொற்களை வழக்கொழிந்தவையாகத்தான் கருதவேண்டும். பெரிய Oxford English அகராதி, தமிழ் மூலத்திலிருந்து வந்தவை என்று அறுதியிட்டுச் சொல்லக்கூடிய சுமார் அறுபது வார்த்தைகளைத் தான் சேர்த்திருக்கிறது. இந்த எண்ணிக்கை அப்படி ஒன்றும் புறக்கணிக்கக் கூடியவை அல்ல.

தற்கால ஆங்கிலத்தில் காணப்படும் இந்தியச் சொற்களில் பெரும்பாலானவை கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்ட பிறகு அதில் குடிபுகுந்தவைதான். ஆனால், சில தமிழ்ச் சொற்கள் ஐரோப்பாவின் பண்டைய மொழிகள் வழியாக ஆங்கிலத்துக்கு வந்தவை. அந்தச் சொற்கள் தமிழிலிருந்து நேரடியாகவே கிரீக் அல்லது லத்தீன் மொழிகளில் குடிபுகுந்தனவா என்று இப்போது

---

5. H. H. Wilson, 'A Glossary of Indicial and Revenue Terms and of useful words occurring in official documents relating to the administration of the Government of British India'-enlarged edition by A. C. Ganguli and N. D. Basu, Calcutta, 1940.

6. A. C. Whitworth, 'An Anglo-Indian Dictionary-A Glossary of Indian Terms used in English, London. 1885.

சொல்வது இயலாது. என்ருலும், Rice (அரிசி) Ginger (இஞ்சி)[7] போன்ற சொற்களைப் பற்றிய நிலை கவனிக்கத் தக்கது.

பிந்தைய சொல்லின் (ginger) மூலம், மலையாளம் என்று சொல்லப்படுகிறது; ஆனல் 2,000 ஆண்டுகளுக்குமுன் குடி பெயர்ந்த சொற்களின் தாயகம் தமிழா, மலையாளமா என்று இப் போது சொல்ல இயலுமா என்பது சந்தேகமே. சென்ற இரண்டு அல்லது மூன்று நூற்ருண்டு காலத்தில் இவ்வாறு குடிபெயர்ந்த சொற்களைப்பற்றிக் கூட, இவை குறிப்பிட்ட திராவிட மொழியி லிருந்துதான் ஆங்கிலத்தில் குடிபுகுந்தவை என்று எப்போதுமே திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது. இப்படித்தான், 'Fanam' (பணம்)[8], 'olla' (ஓலை), 'chuckler' (சக்கிலி), 'poonga' (புன்கம்), Teak (தேக்கு) ஆகியவை தமிழிலிருந்தும் வந்திருக்கலாம்; மலை யாளத்திலிருந்தும் வந்திருக்கலாம். இதேபோல 'tope' (தோப்பு), 'chatty' (சட்டி) pollam, poligar (பாளையம், பாளையக்காரன்) ஆகியவை தெலுங்கிலிருந்து வந்தவை என்றுகூட சொல்லலாம்.

இதே போன்ற சிக்கல்கள் வடநாட்டுத் தொடர்புடைய சில சொற்களின் வடிவத்திலும் எழுகின்றன. 'cot' (கட்டில்) போன்ற இம்மாதிரியான சொற்கள் இந்தியிலிருந்து வந்தவை என்று சொல்வது கூடப் பொருத்தமாகத்தான் இருக்கும்; coolie (கூலிக்காரன் அல்லது கூலியாளின் சுருக்கம்) தமிழல்லாத வேறு பல மொழிகளிலிருந்து பிறந்தது என்று ஒரு வாதத்தை, அது வலிவற்றதாக இருந்தாலும், எழுப்பலாம்.

சில சொற்கள் நேரிடையாகத் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குக் குடிபெயர்ந்தனவா, அல்லது சுற்று வழியாகப் போர்த்துகீசிய மொழி மூலமா என்ற பிரச்சினை எழுகிறது. இம்மாதிரிச் சுற்று வழியில் குடிபுகுந்தவை என்று 'Mango' (மாங்காய்), 'Betel' (வெற்றிலை), Teak (தேக்கு), ஆகியவை பற்றி ஓரளவுக்கு உறுதி

---

7. Mentioned in Pliny's 'Natural History', XII, 7 as 'zingiberi' (இஞ்சிவேர்) on this, see Henry Yule and A. C. Burnell, Holson-Sobson, 'A glossary of colloquial Anglo-Indian words and phrases'-2nd edition by W. Cooks, oLndon, 1903.

8. The poet that one may trace this both ultimately to a sanskrit root does not invalidate that it was from a Dravidian tongue that the word passed into European languages.

யாகச் சொல்லலாம். அதேபோல cheroot (சுருட்டு) பிரெஞ்சு மொழி வழியாக ஆங்கிலத்தை அடைந்தது.

மூலத்தைப் பற்றி ஐயம் எழும் சில சொற்கள் எந்த மொழியி லிருந்து வந்தவை என்று உறுதியாகச் சொல்லமுடியாத நிலையில் தமிழிலிருந்து வந்தவை என்று சற்று தயக்கத்துடனேயே சொல்லப் படுகிறது. இம்மாதிரிச் சொற்களில் நன்ருகத் தெரிந்தது. Anaconda, என்றசொல் முன்காலத்தில் ஸ்ரீலங்காவில் காணப்பட்ட ஒரு பெரிய, அஞ்சத்தக்க பாம்பு எனப் பொருள் தந்தது. இப்போது தென் அமெரிக்காவில் காணப்படும் ஒரு பாம்புக்கு, அல்லது தன் இரையை நசுக்கிக் கொல்லும் எந்த ஒரு பாம்புக்கும்கூட, அது சொல்லப்படுகிறது. ஒரு யானையைக்கூட நசுக்கிக் கொல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய பாம்பைப் பற்றி, பத்தொன்பதாம் நூற்றூண்டில் வழங்கிவந்த ஒரு கதையிலிருந்து, 'ஆனை கொன்ற'[9] என்ற சொற்களிலிருந்து இந்த அனகொண்டா என்ற பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கதை உண்மையோ இல்லையோ கற்பனை நன்ருயிருக்கிறது.

இதற்கு நேர் மாருக, எத்தனையோ சொற்கள் ஐயமின்றித் தமிழிலிருந்து நேராக ஆங்கிலத்துக்கு வந்தவை. இவற்றுள் முதலாவதாகத் 'தமிழ்' என்ற சொல்லையே எடுத்துக் கொள்வது பொருத்தமே. 'Dravidian' என்ற சொல் வடமொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்திருக்கலாம். எது எப்படி இருந்தாலும் 'திர விடம்' என்ற சொல் தன் தற்கால வடிவத்தில் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தது என்றே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆயினும் ஆரம்பத்தில் ஒருவேளை அது 'தமிழ்' என்ற சொல்லின் வடமொழி ஆக்கமாக இருக்கலாம்.[10]

பொருட்படுத்த முடியாத வேறு சில பெயர்ச் சொற்கள், தென்னிந்திய ஊர்கள் சிலவற்றின் பெயர்களாகும். இவை ஆங்கிலத்தில் குடிபெயர்வதற்கு முன்னல் அந்த மொழியின் ஒலி வடிவத் தேவைகளுக்கேற்பத் தங்கள் உருவை மாற்றிக்கொண் டவை. இப்படித்தான் ooty யிலிருந்து ஊட்டிக்கும், Pondy யிலிருந்து பாண்டிக்கும் (புதுச்சேரியிலிருந்து எவ்வளவு மாற்றம்!)

---

9. See 'Hobson-Gobson'.

10. See Caldwell cit. pages 9-10, and S. K. Chaterji, "Old Tamil, Ancient Tamil and Primitive Dravidian", Tamil culture, Vol. V No. 2 p. 161.

செல்கிறோம். ஒரு குறிப்பிட்ட ஊரில் செய்யப்பட்ட ஒரு பொருளுக்கே ஆங்கிலத்தில் அந்த ஊரின் பெயர் நிலைத்துவிட்டது. இப்படித்தான் திருச்சிராப்பள்ளியின் சுருக்கமான 'Trichi', அந்த ஊரில் தயாராகும் ஒரு சுருட்டுக்கு ஆங்கிலத்தில் பெயர் ஆயிற்று. சில பூகோளப் பெயர்களின் மூலத்தைப் பற்றிய ஐயம் இருக்கிறது. ஆனால் 'coromandel coast' ஐப் பொறுத்தவரை அது தமிழ் 'சோழமண்டல'த்திலிருந்து வந்தது என்று சொல்லப்படும் விளக்கம்தான் கிடைத்தவற்றுள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்த அஃறிணைப் பெயர்ச் சொற்களிலே உணவு பற்றியவைதான் அதிகம். 'Curry' (கறி) என்னும் சொல் மேற்கு ஐரோப்பா முழுவதுமே மிக நன்றாக வழங்குகிறது. 'ரச'த்தின் ஆங்கில ஆக்கம், Mulligatanny' soup (மிளகு தண்ணீர்), இன்றும் பலருக்குத் தெரிந்த சொல். அப்படியேதான் 'அப்பள'த்துடன் தொடர்பு இருக்கக்கூடிய 'Popadam'மும்.[11] அப்படியே அதிகமாகப் பலருக்குத் தெரியாத 'hopper' என்ற சொல், தமிழ் 'அப்பம்' என்ற சொல்லில் இருந்து வந்திருக்கலாம். 'conjee' (கஞ்சி) என்ற சொல் முன்பிருந்த அவ்வளவு பரவலாக இப்போது இல்லை. ஆனால் 'கஞ்சித் தண்ணி இட்டு முறைப்பாக்குதல்' என்று பொருள் தரும் வினைச் சொல்லாகக்கூட அது பயன்படுத்தப்படுகிறது என்ற கோணத்திலிருந்து பார்த்தால் அது முக்கியத்துவம் வாய்ந்தது.[12] இந்தியச் சூழ்நிலையைப் பற்றி அறிந்திராத மக்களுக்கு 'Tyre' (தயிர்) புதிதாக இருக்கலாம். மாடுகளுக்குத் தீனி வகைகளில் ஒன்றான, Poonac (புண்ணாக்கு)[13] ஆங்கிலத்தில் குடியேறி உள்ளது. ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சில செடி கொடிகளின் பெயர்கள் தமிழிலிருந்து வந்தவை. 'Patchouli' (பச்சிலை) 'yercum' (எருக்கு), chay (சாயம்) ஆகியவை அவற்றில் சில.[14]

---

11. For a further discussion of this, see Hobson-Gobson under 'Popper-Cake'.

12. Cf. also the verb, 'to curry', and the compound noun 'curry-powder' as further examples of the extension of the use of Tamil words in English.

13. இதன் மூலம் வடமொழி என்று முடிவு கட்டினால்கூட, அது ஆங்கிலத்துக்கு வந்ததென்னவோ தமிழில் இருந்துதான்.

14. Cf. Note 13.

இந்தியாவில் வாழ்ந்த ஆங்கிலேயர் இந்நாட்டு நாணயங்கள், அளவைகளுக்கான இந்நாட்டுப் பெயர்களை உபயோப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாதது. அம்மாதிரியான பல தமிழ்ப் பெயர்கள் ஆங்கிலேயர்களின் எழுத்துப் படைப்புகளில் காணப்படுகின்றன. அதிகமாகப் பலருக்கும் தெரிந்த நாணயங்கள் 'fanam' (பணம்), cash (காசு) என்பனவும் நிறுத்தல் அளவையில் viss (வீசை), candy (கண்டி)[15] முதலியனவும சேர்க்கலாம். அதே குழுவைச் சேர்ந்த பெயர்களில் தானிய அளவைக்குரிய ('Mercal') மரக்காலும், நில அளவையான 'conney' (காணி)யும் சேர்க்கத்தக்கன.

ஒரு புதிய நாகரிகத்துடன் தொடர்பு என்றால், புதிய சமுதாயப் பிரிவுகள், தொழில்கள் ஆகியவையோடும் தொடர்பு என்று தானே பொருள். ஆகையால் அவைகளை வர்ணிக்க அவைகளின் பெயர்களும் பயன்படுத்தப்பட்டன. 'Poligar' 'Chuckler', 'Coolie' ஆகியவை பற்றி மேலே குறிப்பிடப்பட்டது. சமூக அல்லது மதப் பிரிவுகளிலிருந்து 'Modeliar' (முதலியார்), Pandaram (பண்டாரம்) ஆகியவை வந்தன. தொழில்களிலிருந்து 'conicopoly' (கணக்குப் பிள்ளை), toty (தோட்டி) ஆகியவை வந்தன. ஆங்கிலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இந்தச் சொற்களின் பொருள் அவற்றின் தமிழ்மூலச் சொற்களுடைய பொருளுக்குச் சில சமயம் ஒத்தவையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவை பெரும்பாலும் இந்தியத் தொடர்பான சந்தர்ப்பங்களில்தான் பயன்படுத்தப்பட்டன. இவற்றிற்கு விதிவிலக்கான சொல் Pariah (பறையர்); இதற்குச் 'சமுதாயத்துக்குப் புறம்பானவன்' என்ற விரிந்த பொருள் ஏற்பட்டதோடு, விலங்குகளைப் பற்றிச் சொல்லும்போது கூடப் பயன்படுத்தப்படுகிறது. (Pariah Dog: 'ஊரில் திரியும், கீழ்ஜாதி நாய்' என்ற சொற்றொடரை ஒப்பிட்டுப் பார்க்கவும்.)

ஆங்கிலம் கடன் வாங்கியுள்ள மற்றச் சொற்களை அவ்வளவு எளிதாக எந்த ஒரு பாகுபாட்டுக்குள்ளும் அடக்கிவிடமுடியாது. 'Tope' என்ற சொல்லோடு வேண்டுமானால் 'shola' (சோலை)ஐச் சேர்த்துவிடலாம்; 'Anicut' (அணைக்கட்டு), 'Chunnam' (சுண்ணம்)—இவை இரண்டும் அதிகமாகத் தெரிந்தவை அல்ல. ஆனால் பிந்தியது, பெயர்ச் சொல்லாக மட்டுமல்ல, வினைச் சொல்லாகவும் ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படுகிற சொற்களுக்கு இன்னு

---

15. Traceable back to Marathi. See P. C. Ganeshsundaram and V. I. Subramaniam, 'Marathi loans in Tamil', Indian Linguistics XIV (1954), p. 119.

மொரு சான்று என்பது சுவையான செய்தி. 'To Chunnam', என்ருல் 'காரை அல்லது சுண்ணும்பு இட்டுப் பூசல்'. Pandal (பந்தல்) ஆங்கிலத்திலும் தமிழில் உள்ள பொருளேதான். ஆனுல் 'Catamaran' (கட்டுமரம்) நெடுந் தொலேவு பயணம் செய்து விட்டது. ஆதியிலே coromandel (தமிழகக்) கடற்கரைப் பகுதியில் பயன்படுத்தப்பட்ட கட்டுமரங்களேக் குறித்த அந்தச் சொல் (catamaran) பிற்பாடு கானடா நாட்டின் செயின்ட் லாரன்ஸ் நதியில் இரண்டு படகுகளே ஒன்றுடன் ஒன்று பிணைத்துக் கட்டுமரம் போல உபயோகித்ததற்கும் பயன்படுத்தப்பட்டது. இப்போது அந்தச் சொல்லும், அதன் குறுக்கப்பட்ட 'Cat' என்ற சொல்லும் ஒரு புது வாழ்வு பெற்று, பிரிட்டனில் மக்களிடையே நாளுக்கு நாள் பரவிவரும் ஒருவிதப் பாய்மரப் படகைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.[16] இந்தச் சொல் (Cat) முற்றிலும் வேறுபட்ட ஒரு பொருளில் 'வேண்டுமென்றே சண்டை பிடிக்கும், முசுடு குணம் கொண்ட' பெண்ணைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

மேலே குறித்துள்ளபடி இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களின் பட்டியலில் எல்லாச் சொற்களும் அடங்கிவிட்டன என்று சொல்வதற்கில்லே. ஆனுல் ஆங்கிலத்துக்கு எந்தெந்த மொழிகள் சொற்களேத் தந்திருக்கின்றனவோ, அவற்றுள் தமிழ் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்று காட்ட அது போதும். தமிழ்ப் பேச்சாளர்கள் வேண்டுமென்றே தங்கள் பேச்சில் நிறைய ஆங்கில வார்த்தைகளே உபயோகிக்கிருர்கள் என்பது உண்மை தான். அதற்குக் கைமாருக, ஆங்கிலேயர்கள் சிறிதளவாவது தமிழ்ச் சொற்களேப் பயன்படுத்துகிருர்கள்—ஆனுல் பெரும்பாலும் அவர்களேயும் அறியாமல். ஏனெனில், மேற்கோள் காட்டப்பட்ட

---

16. தற்சமயம் வெளிவராமல் நின்றுவிட்ட ஒரு பெயர் பெறற் தினசரிப் பத்திரிகையிலிருந்து எடுத்த கீழ்க் கண்ட துணுக்கை ஒத்திட்டுப் பார்க்கவும்.

"Racing sails of the...Enterprise dinghy are to be used in a test of three types of catamarans-the fast, twin-hulled boats...at Eastbourne this month. The test has been arranged following a request...to discover how the nations 'CATS' react in the same wind strength and with exactly the same sail area" (News chronicle, 18th February, 1956). More recently the word 'Catamaran' has led to the coining of 'trimaran' to mean a three-hulled boat.

சொற்களில் பெரும்பாலானவை இந்தியச் சூழ்நிலைக்குத்தான் பொருந்தும் என்றாலும் அவற்றில் சில சொற்களாவது தமிழ் நாட்டைப் பற்றி எதுவும் அறியாத ஆங்கிலேயர்களால்கூட உபயோகப்படுத்தப்படுகின்றன. இதிலிருந்து ஒரு முக்கியமான உண்மை மட்டும் புலனாகிறது. மொழிக்கு மொழி, சொற்கள் கடன் வாங்குவது ஒரு இருவழிப் பயணம். தன் களஞ்சியத்தி லிருந்து இன்னொரு மொழிக்குச் சொற்களைக் கடன் கொடுக்கும் எந்த மொழியும், அந்த வேற்று மொழியிலிருந்தும் பதிலுக்குச் சில சொற்களைப் பெற்றுக்கொள்ளும்.

இதன் தொடர்பாக, இதுவரை குறிப்பிடாத இன்னொரு செய்தி என்னவென்றால், மேலே தந்துள்ள சொற்களில் பாதிக்கு மேல் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 17ஆம் நூற் றாண்டில் ஆங்கிலத்துக்குக் குடிபுகுந்தவை. 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் சொற்கள் இவ்வாறு ஆங்கிலத்துக்குக் குடி புகுவது அவ்வளவாக இல்லை என்றே தோன்றுகிறது. ஒருவேளை 20ஆம் நூற்றாண்டில் திரும்பவும் சொற்கள் ஆங்கிலத்துக்குப் போவது அதிகரிக்கலாம். ஏனெனில் மேனாட்டினராகிய நாங்கள் பண்பாட்டின் சிறப்பை உணர ஆரம்பித்திருக்கிறோம். கீழை நாட்டினரின் நாகரிகம், கருத்துக்கள், சாதனைகள்—ஆகியவற்றில் நாங்கள் ஆர்வம் காட்டினால், நாங்கள் திரும்பவும் சொற்களைக் கடன் வாங்கித்தான் ஆகவேண்டும். அப்போது வரலாற்றுக் காலம் முழுவதுமே நடந்துள்ளது போல், தமிழ் எங்களுக்கு நிறையச் சொற்களை வழங்கும் என்று கொள்ளலாம்.

(தமிழாக்கம் : ஜே. மோகன்)

---

WITH BEST COMPLIMENTS
FROM

A WELL WISHER

WITH BEST COMPLIMENTS

FROM

# RURAL ELECTRIFICATION CORPORATION LIMITED

(A Government of India Undertaking)

DDA BUILDING, NEHRU PLACE

**NEW DELHI**-110019

Happy Child Nation's Pride

*With the best compliments of*

# The Fertilizer Corporation of India LImited

## Factories at :

1. Gorakhpur (U.P.)
2. Sindri Bihar)
3. Korba (M.P.)
4. Talcher (Orissa)
5. Ramagundam (A.P.)

FCI Marketing Division are poised for progress and future expansion in the economic zones of their above five factories. In line with their tradition of service to the farmer, the Marketing set up of FCI in U.P. are dedicated in their task of reaching fertilizers to the farmers in the interiors of the State.

FCI has also built up an infra-structure of dealers in U.P. who are supported by Sales Officers and Agronomists to assist the farmer in getting optimum results from fertilizer usage. FCI's Marketing Division is dedicated to serve the farmer at his door step.

## Marketing Division

MADHUBAN

55, NEHRU PLACE

NEW DELHI

# சோவியத் தமிழர்கள்

[பூர்ணம் சோம சுந்தரம்—சோவியத் நாடு]

மாஸ்கோ அயல் மொழிப் பதிப்பகத்தில் (இப்போது இது "முன்னேற்றப் பதிப்பகம்" என்று அழைக்கப்படுகிறது) பணி ஆற்றுவதற்காக நான் சோவியத் நாடு சென்ற புதிதில், அதாவது 1957 ம் ஆண்டின் தொடக்கத்தில், மீஷா அந்திரோனவ் என்ற இளைஞர் என்னிடம் தமிழ் கற்றுக் கொள்ள வந்தார். நான் மாஸ்கோவில் சந்தித்த முதல் "சோவியத் தமிழர்" இவரே.

என்னிடம் கற்க வந்த போதே மீஷா தமிழ் மொழியை ஓரளவு அறிந்திருந்தார். பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு புரிந்து கொண்டு பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் வகுப்பது அவரது நோக்கமாய் இருந்தது. இலக்கண இயலில் இயற்கைத் திறமை பெற்றிருந்த மீஷா அந்திரோனவ் முதலில் கற்றது வங்க மொழி. "வங்காளியில் உள்ள திராவிட மொழிக் கூறுகள்" என்ற பொருள் பற்றிய அவரது ஆய்வுரை அப்போதே புகழுக்குரியதாய் இருந்தது.

மீஷா அந்திரோனவ் "இலக்கணப் புலி" என்பதை நான் ஆரம்பத்தில் கண்டு கொள்ளவில்லை. பேச்சுத் தமிழில் அவர் ஆர்வம் காட்டியபடியால் புதுமைப்பித்தன், தி. ஜானகிராமன் போன்ற ஆசிரியர்களின் படைப்புகளை அவருக்கு அறிமுகப்படுத்தினேன். மீஷா அவற்றை விருப்புடன் பயின்றார். ஆனால் அவற்றின் இலக்கியச் சிறப்பில் அவருடைய கவனம் செல்லவே இல்லை. சொற்கள் பேச்சில் எப்படி உருமாறுகின்றன என்பதை ஆராய்ந்து வந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு முறை நான் மீஷாவைச் சந்தித்தபோது, தாம் திருவாசகத்தைப் படித்து வருவதாகவும், அது தம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டதாகவும் கூறினார். நான் மகிழ்ச்சி அடைந்து திருவாசகத்தின் அருமை பெருமைகளைப் பேரார்வத்துடன் விவரிக்கத் தொடங்கினேன். "ஆம், எத்தனை வகையான வினை முடிபுகள்!" என்றார் மீஷா.

இப்போது மொழி இயல் டாக்டர் பட்டம் பெற்று விட்ட மீஷா அந்திரோனவ் ருஷ்ய மொழியில் சிறந்த தமிழ் இலக்கண நூல் இயற்றியுள்ளார், ''ருஷ்ய—தமிழ் அகராதி''யின் ஒரு பகுதி இவர் தொகுத்தது.

மீஷா அந்திரோனவ் வாயிலாக எனக்கு அறிமுகம் ஆனவர் ''கண்ணன்'' என்று தம் பெயரைத் தமிழ் ஆக்கிக் கொண்ட யூரி கிளாஸவ் (கிளாஸ் என்ற ருஷ்யச் சொல்லுக்குக் கண் என்று பொருள். எனவே ''கிளாஸ்'' என்ற தம் குலப் பெயரைக் ''கண்ணன்'' என்று மொழி பெயர்த்திருந்தார் யூரி) பல ஐரோப்பிய மொழிகளையும் துருக்கியக் குடும்பத்தைச் சேர்ந்த உய்குர் மொழியையும் அவர் நன்கு அறிந்திருந்தார். தமிழிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தார் ருஷ்ய இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை வாய்ந் திருந்த யூரி கிளாஸவ் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். திருக்குறள் அவரை மிகுதியாகக் கவர்ந்தது. கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்து, பின்னர் மாஸ்கோவில் பணி ஆற்றிய திரு. அ. கிருஷ்ணமூர்த்தி அவர்க ளுடன் சேர்ந்து திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் ருஷ்ய மொழியில் ஆக்கியுள்ளார் யூரி கிளாஸவ். பண்டைத் தமிழ் இலக் கியம் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அவர் எழுதி இருக் கிறார்.

இதே சமயத்தில் எனக்கு அறிமுகமான சோவியத் தமிழ்ப் பெண்மணி ஸ்மிர்னோவா என்பவர். பாரதியாரின் பாடல்களைத் திருமதி ஸ்மிர்னோவா ருஷ்ய மொழியில் ஆக்கியுள்ளார்.

''என் பெயர் ஐங்குன்றன்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட அலெக்சாந்தர் பியாத்தி கோர்ஸ்கியுடன் தொடர்பு ஏற்பட்டது எனது மாஸ்கோ வாழ்வுக்கு நிறைவு அளித்த நிகழ்ச்சி ஆகும். பியாத்தி கோர்ஸ்கி தத்துவ இயல் அறிஞர், பல மொழி களைக் கற்றுத் தேர்ந்தவர். தமிழின் தனித் தன்மையால் ஈர்க்கப் பட்டு அதன் தொண்டில் ஈடுபட்டிருந்தார். சோவியத் நாட்டில் தமிழ்க் கற்பகக் கன்றை ஊன்றித் தழைக்கச் செய்த பெருமகனார் டாக்டர் மேர்வத்தின் சீடர் அலெக்சாந்தர் பியாத்திகோர்ஸ்கி. ஸ்லாவிய மொழிகளில் முதன் முதலாக வெளியான தமிழ்—ருஷ்ய அகராதியின் பெரும் பகுதியைத் தொகுத்தவர் அவரே. அவருடைய நினைவாற்றல் வியப்பூட்டுவது. அகராதியில் உள்ள ஒவ்வொரு சொல்லின் பொருளையும் எப்போது கேட்டாலும் சொல்வார். தத்துவ இயல் அறிஞர் ஆதலால் தமிழ்த் தத்துவ நூல்களில் தனிப்பட்ட ஆர்வம் காட்டினார். தமிழ் நூல்களை அவருடன்

சேர்ந்து பயின்றபோது பல புதிய கருத்துக்களை நான் தெரிந்து கொண்டேன்.

தமிழ்—ருஷ்ய அகராதியைத் தொகுத்ததுடன் நில்லாமல் அலெக்சாந்தர் பியாத்திகோர்ஸ்கி பல நூல்கள் இயற்றியுள்ளார். "தமிழ் இலக்கியத்தில் காணும் தத்துவக் கூறுகள்" என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல் மிகச் சிறந்தது. சைவ சித்தாந்தத்தை விரிவாக விளக்கி, சங்க காலம் முதல் வள்ளலார் காலம் வரை தமிழ் இலக்கியத்தில் வழங்கி வந்துள்ள தத்துவ மரபுகளை மேற்கோள்களுடன் இதில் விவரித்திருக்கிறார்.

பியாத்திகோர்ஸ்கி வறண்ட ஆராய்ச்சியாளர் அல்லர். கவிதைகளின் சொல்லழகிலும் பொருளழகிலும் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவார். சிவபுராணத்தில் வரும் "வேதங்கள், ஐயா வென ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்ற சொற்களைத் திரும்பத் திரும்பப் படித்தும் கேட்டும் தன்னை மறந்தின்புறுவார். நம்மாழ்வாரின் "உயர்வற உயர் நலம் உடையவன்" என்ற சொற்றொடரையும் இவர் மீண்டும் மீண்டும் வியந்து பாராட்டுவார். திருவிளையாடல் புராணத்தில் உள்ள நரியைப் பரியாக்கிய கதையைச் சிறுவர் சிறுமியருக்காக அழகிய, எளிய நடையில் எழுதியுள்ளார் அலெக்சாந்தர் பியாத்திகோர்ஸ்கி.

சோவியத் நாட்டில் செமியோன் ருதின் என்னும் தமிழ் அறிஞர் இருப்பதாகப் பெரு மதிப்புக்குரிய டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் தில்லியிலேயே என்னிடம் சொல்லி இருந்தார்கள். நான் மாஸ்கோவில் இருந்தேன், ருதின் லெனின் கிராதில் பணியாற்றி வந்தார். எனவே, அவருடன் நெருங்கிப் பழக எனக்கு வாய்ப்பில்லை. முதன் முறை நான் அவரைச் சந்தித்தது ராதேசியாம் துபே என்ற நண்பர் வீட்டில். அப்போது ருதின் பேசிய இந்தியைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். பின்பு அவருடைய தமிழைக் கேட்டு மெய்சிலிர்த்தேன். மொழி ஒலிப்புக் கலையில் ருதின் ஒப்பற்ற திறமை பெற்றிருந்தார். ஆனால் இது அவரது பல்துறை மேதையின் ஒரு கூறு மட்டுமே. பியாத்திகோர்ஸ்கி போலவே ருதிலும் டாக்டர் மேர்வத்தின் சீடர். பல ஐரோப்பிய இந்திய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். தாம்தமிழுக்குத் தொண்டு செய்ததுடன் பல தமிழ்த் தொண்டர்களை சோவியத் நாட்டில் பயிற்றி உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். மாஸ்கோ வானொலியிலும் முன்னேற்றப் பதிப்பகத்திலும் பணி புரியும் பல "சோவியத் தமிழர்கள்" ருதினுடைய சீடர்கள். தற்காலத் தமிழ் இலக்கியத்தை ஆராய்ச்சிக்கு உரிய பொருளாக எடுத்துக் கொள்

னும்படி மாணவர்களைத் தூண்டி வந்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியதுடன் பல சிறு கதைகளையும் மொழி பெயர்த்துள்ளார். நான் மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்—ருஷ்ய அகராதியின் ஒரு பகுதியைத் தொகுத்தவர் செமியோன் ரூதின்.

''செம்பியன்'' என்ற தமிழ்ப் புனை பெயரைப் பெருமையுடன் சூட்டிக் கொண்டிருந்த செமியோன் ரூதின் படகு விபத்தில் உயிர் துறந்தது சோவியத் நாட்டில் தமிழ்க் கல்விக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

முன்னேற்றப் பதிப்பகத்தின் தமிழ்ப் பிரிவில் பணியாற்ற வந்த போதே அலீப் இப்ரகீமவ் துருக்கிய மொழிக் கவிதைகளை ருஷ்ய மொழியில் ஆக்கியிருந்தார். ஆங்கிலம், ஜெர்மன் முதலிய ஐரோப்பிய மொழிகளை அறிந்திருந்தார். மொழிகளைக் கற்பதில் இவருக்கு இருந்த இயற்கைத் திறமையைக் கண்டு அப்போதே நான் வியந்தேன். திரு. சுப்பிரமணியம், திரு. சொக்கலிங்கம் ஆகியோரிடமும் என்னிடமும் இவர் தமிழ் பயின்றார். தமிழ் நூல்களை ஆர்வத்துடன் படித்தார். இயற்கைத் திறமையும் முறையான கடும் உழைப்பும் காரணமாகத் தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றார் இப்ரகீமவ். தற்கால எழுத்தாளர்களின் படைப்புக்களை மொழி பெயர்த்தார். புதுமைப்பித்தன் கதைகள், கல்கியின் ''அலை ஓசை'' முதலியவற்றை ருஷ்ய மொழியில் ஆக்கினார். இவருடைய மொழி பெயர்ப்பு நூல்களைப் பல ருஷ்யர்கள் பாராட்டக் கேட்டிருக்கிறேன். இப்ரகீமவுக்கு எதுவும் விலக்கு அல்ல. லக்ஷ்மி (டாக்டர். திரிபுர சுந்தரி)யின் ''பெண் மனம்'' என்ற புதினம் இவரது மொழி பெயர்ப்புத் திறனால் இளம் ருஷ்ய வாசகர்களிடையே புகழ்பெற லாயிற்று. கல்கியின் ''அலை ஓசை'' (ஐம்பதாயிரம் பிரதிகள்) நான்கே நாள்களில் விற்றுப்போயின. தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, சிதம்பர ரகுநாதன், ஜெயகாந்தன் போன்ற எத்தனையோ எழுத்தாளர்களின் படைப்புக்களை ருஷ்ய வாசகர் களுக்கு வழங்கி இருக்கிறார்—வழங்கி வருகிறார் இப்ரகீமவ். ஆனால், இவருடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தவை பண்டைத் தமிழ் நூல்களே. திருக்குறளைப் பல ஆண்டுகளாக முயன்று, படித்துப் பல ஐரோப்பிய மொழிபெயர்ப்புக்களின் துணையால் தெளி வாகப் புரிந்துகொண்டு, குறள்வெண்பாக்களிலேயே ருஷ்யச் செய்யுள்கள் ஆக்கி இருக்கிறார் இப்ரகீமவ். திருக்குறளின் இந்தச் செய்யுள் மொழிபெயர்ப்பைச் சரிபார்க்கும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. இதை நான் பெரும் பேருகக் கருதுகிறேன்.

உலகப் பேரிலக்கிய நூல்கள் என்ற வரிசையில் ஆசிய மொழிக் கவிதைகளின் தொகுப்பில் பல தமிழ்க் கவிதைகள் சேர்க்கப் பட்டுள்ளன. அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பத்துப் பாட்டு, நற்றிணை முதலிய சங்க நூல்களிலிருந்தும், தேவார, திருவாசக திவ்வியப் பிரபந்தங்களிலிருந்தும், வள்ளலார் காலம் வரையுள்ள பிற இலக்கிய நூல்களிலிருந்தும் பொறுக்கிய இந்தச் செய்யுள்களை ருஷ்ய மொழியில் ஆக்கி இருப்பவர் இப்ரகீமவ். தற்போது படைப்பிலக்கியப் பதிப்பகத்தில் பணியாற்றி வரும் அலீப் இப்ரகீமவ் தற்கால, முற்காலத் தமிழ் இலக்கியப் படைப்புக் களை ருஷ்ய வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் இடை யருது உழைத்து வருகிருர்.

செமியோன் ரூதினின் பல சீடர்கள் பல்வேறு துறைகளில் தமிழ்த்தொண்டு புரிந்து வருகிருர்கள். தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களை, சிறப் பாகப் பத்துப்பாட்டைப், பயின்று வரும் அறிஞர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கி இவர்களில் ஒருவர். இவரும் பல மொழிகள் அறிந் தவர், மொழி இயல் விற்பன்னர். "முல்லைப் பாட்டு" பற்றிய இவரது ஆய்வுரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மாஸ்கோ பல்கலைக் கழகத் தமிழ்ப் பிரிவின் ஆசிரியரான அலெக்சாந்தர் துபி யான்ஸ்கி பல "சோவியத் தமிழர்களைத்" தாமே உருவாக்கி இருக்கிருர்.

ஸ்வெத்லானு த்ரூப்கினு, ஆருலா ரோதவ்த்ஸவா ஆகியோரும் தமிழ் மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வருகிருர்கள். புதுமைப் பித்தனது படைப்புக்கள் பற்றி ஆய்வுரை எழுதிப் பட்டம் பெற் றுள்ள லியூபாபிகீனுவும் "சோவியத் தமிழர்"களில் குறிப்பிடத் தக்கவர். தமிழ் ருஷ்ய அகராதியில் உடனுழைத்த வலோத்யா மகாரேன்னே இப்போது பிலிப்பைன் மொழியில் முதன்மையாகக் கவனம் செலுத்தி வருகிருர்.

மேலும் பல சோவியத் இளைஞர்களும் மகளிரும் தமிழ் பயின்றும் தமிழ்ப் பணி புரிந்தும் வருகிருர்கள். இவர்களில் சிறப் பாகக் குறிப்பிடத் தக்கவர் வித்தாலி பூர்னிக்கா. ரூதினின் சீடரான இவர் தமிழ் நாட்டில் சிறிது காலம் தங்கி, தமிழர் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் தெரிந்து கொண்டவர். சோவியத் பத்திரி கைகளின் வாயிலாகத் தமிழ்த் திருநாள்களையும் பண்டிகைகளையும் சோவியத் வாசகர்களுக்கு விவரிப்பதுடன் தற்காலத் தமிழ் எழுத் தாளர்களையும் அவர்களது படைப்புகளையும் அறிமுகப்படுத்தி வருகிருர் பூர்னிக்கா. இவர் மொழிபெயர்த்த ஜெயகாந்தன் கதை

களின் தொகுப்பு ஒன்று அண்மையில் வெளியாகி இருக்கிறது. ஜெயகாந்தனைப் பற்றி விரிவான ஆய்வுரை ஒன்றும் இவர் தயாரித்து வருகிறார்.

இலக்கணம், பண்டை இலக்கியம், தற்கால இலக்கியம் என்னும் மூன்று துறைகளில் தமிழ் ஆராய்ச்சிப் பணி சோவியத் நாட்டில் தொடர்ந்து நடந்து வருகிறது.

---

## சீனாவும் தமிழும்

சீனாவில் உள்ள செளன் செள என்னும் துறைமுகப் பட்டினத்தில் அண்மையில் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மிகப் பழங் காலத்தில் இங்கு ஒரு தமிழர் குடியிருப்பே இருந்திருக்க வேண்டுமென நம்பப்படுகிறது. தென்னிந்திய துறைமுகப் பட்டினத்திற்கும் செளன் செள துறைமுகத்திற்கும் கடல் வழியாக வியாபாரக் கப்பல்கள் அடிக்கடி சென்றுவந்தனஎன்றும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மார்கோபோலோ இந்திய—சீனாவின் கடல்வழி கண்டு பிடிப்பதற்கு முன்பே தமிழக மாலுமிகள் இந்தக் கடல் வழியைக் கண்டுபிடித்திருக்கக்கூடும்என்றும் நம்பப்படுகிறது.

(South Indian Studies, Society for
Archaeological, Historical
and Epigraphic, Research,
Madras.)

With compliments from :

★ INDIAN EXPLOSIVES ★

LIMITED

**With Best Compliments**
**From**

# A WELL WISHER

*With best compliments from:*

**SUHRID GEIGY LIMITED**

**BARODA**

WITH BEST COMPLIMENTS FROM:

# Racold Appliances Private Limited

Manufacturers of
Electric Appliances

11 th Floor
Vandana
11, Tolstoy Marg
NEW DELHI - 110 001.

# மலேசியத் தமிழ் இலக்கியம்

[டாக்டர் இரா. தண்டாயுதம், மலாயாப் பல்கலைக் கழகம்]

இலங்கையை அடுத்துத் தமிழர்கள் அதிகமாக வாழும் நாடு மலேசியா. இந் நாட்டிற்கும் தமிழகத்திற்கும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு காலத் தொடர்பிருப்பதாக வரலாற்றாசிரியர்கள் கணிக்கின்றனர். 1840 ஆம் ஆண்டில் கெடா, வெல்லெஸ்லி ஆகிய மாநிலங்களில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட ஜேம்ஸ் லோ (James Low), பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இப் பகுதியில் இந்தியர் குடியேறி வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கண்டறிந்துள்ளார். டாக்டர் குவாட்ச் வேல்ஸ் (Dr. Quaritch Wales) 1937 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளும் இதனை உறுதி செய்கின்றன. காழகம், கடாரம் என்று தமிழ் இலக்கியங்களிலும் வரலாற்றிலும் குறிக்கப்படும் கடாரத்தோடு சோழ மன்னர்களுக்கு இருந்த தொடர்பைக் 'கடாரம் கொண்டான்' என்ற இராஜேந்திர சோழனின் பட்டப் பெயரே உறுதிப்படுத்தும். ஆயினும் இத் தொடர்புகள் அனைத்தும் வளமிக்க நாகரிகத்தின் ஓர் உயர்ந்த நிலையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். பண்பாட்டுத் தூதுவர்களாலும் சிறந்த வணிகர்களாலும் ஏற்படுத்தப்பட்ட இந்தத் தொடர்புகள் காலமெனும் பெருநதியினால் அடித்துச் செல்லப்பட்டு, இன்று அதன் சுவடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. வணிகத்திற்காகத் தமிழகத்திலிருந்து இங்கு வந்து, இங்கேயே மலாய்ப்பெண்களை மணந்து நிரந்தரமாகத் தங்கிவிட்ட 'மலாக்கா செட்டிகள்' இன்றும் இத் தொடர்பை நினைவுபடுத்திக் கொண்டுள்ளனர். இவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்கள். இந்திய இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் தமிழர்கள் மூலமாக இங்குப் பரவிப் பெரும் செல்வாக்கை அடைந்துள்ளன. 'வாயாங் கூலிட்' எனப்படும் தோற்பாவைக் கூத்தில் இன்றும் இராமாயணக் கதையைக் காணலாம். 'தூளி யாங் மகா மூல்ய ஸ்ரீபாடுகா பாகிண்டயாங்டி பெர்த்துவா ஆகோங்' என்பது

இந் நாட்டுப் பேரரசரை மரியாதையோடு அழைக்கும் முறை. இத் தொடரில் உள்ள தூளி என்பது துளிதான்; ஸ்ரீ பாடுகா பாதுகைதான். 'பேரரசரின் பாதுகையிலுள்ள தூசி........' என்று தொடரும் இத் தொடரிலேயே இராமாயணத்தின் செல்வாக்கைக் காணலாம். ஒவ்வொரு மாநிலத்தின் பட்டத்தில் உள்ள சுல்தானின் இளவல் துங்கு லக்ஷமணு என்றே குறிக்கப்படுகிருர். அன்றியும் வாணிகம், சமயம், வாழ்க்கை முதலியவற்ருேடு தொடர் புடைய பல நூற்றுக்கணக்கான தமிழ், வடமொழிச் சொற்கள் இன்றும் மலாய் மொழியில் வழங்கி வருகின்றன. பிரதம மந்திரி, பிரதான மந்திரி என வழங்கி வருகிறது. தமிழில் உள்ள கடை, மலாயில் கெடை யாகிறது; கப்பல், கோயில், குளம், முதல், கூட்டு முதலிய பல சொற்கள் மலாயில் வழங்கி வருகின்றன. இவை யனைத்தும் தமிழகத்திற்கும் அன்றைய மலாயாவிற்கும் இருந்த தொடர்புகளை இன்றும் நினைவிற்குக் கொண்டு வருகின்றன. எனினும் இன்று இங்கு வாழும் தமிழர்கள், வரலாற்றில் காணப்படும் தொடர்பின் வழி வந்தவர்கள் அல்லர். இவர்களுடைய குடியேற்றத்தை இரண்டாம் காலகட்டம் எனலாம்.

இக் கால கட்டம் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தொடங்குகின்றது. 1786 ஆம் ஆண்டில் பினுங்கு ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டபோது தொடங்கிய இத் தொடர்பு இந்த நூற்ருண்டின் முற்பகுதி வரை தொடர்ந்து வந்தது எனலாம். இக் கால கட்டத்தில் தமிழகத்திலிருந்து இங்கு வந்து உழைக்க முற்பட்டவர்களில் தோட்டத் தொழிலாளர்களும் வணிகர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் தொண்ணூறு விழுக் காட்டிற்கும் மேற்பட்டோர் தோட்டத் தொழிலாளர்களே ஆவர். தொடக்கத்தில் காப்பி, கரும்பு, தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் பணியாற்றவே இவர்கள் வந்தனர். ஆனல், நாளடைவில் ரப்பர் ஏற்றுமதி அதிகரிக்க அதிகரிக்க, தமிழகத்திலிருந்து வரும் தொழிலாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. மலேசியாவின் பொருளாதார வளத்திற்கு முதுகெலும்பாக விளங்கும் ரப்பர் இந்த நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்தே முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. 1900 ஆண்டில் 50,000 ஏக்கர்களாக இருந்த ரப்பர்த் தோட்டங்கள், 1911 ஆம் ஆண்டில் 5,43,000 ஏக்கர்களாகவும், 1938 இல் 32,72,000 ஏக்கர்களாகவும் பெருகி, மலேசியாவை இயற்கை ரப்பர் உற்பத்தி செய்யும் நாடு களில் முதன்மையாக்கின. மலேசியாவின் ஏற்றுமதி வருமானத்தில் நாற்பது விழுக்காட்டைச் சில ஆண்டுகளுக்கு முன் வரை ரப்பர் தந்தது. இன்றும் ஏற்றுமதி வருமானத்தில்

இருபது விழுக்காட்டிற்கும் மேற்பட்ட வருமானத்தை ரப்பரே ஈட்டித் தருகின்றது.

மலேசியப் பொருளாதார வளர்ச்சியோடு இந்த அளவிற்குப் பின்னிப் பிணைந்து நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ரப்பர், அதே அளவிற்கு இந் நாட்டுத் தமிழர் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்துள்ளது. சென்ற நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டின் முற்பகுதியிலும் இங்குக் குடியேறிய இந்தியர்களின் எண்ணிக்கை ரப்பர்த் தோட்டங்களின் பெருக்கத்தை ஒட்டியே அமைந்துள்ளது. இந்தியர்கள் என்று கூறும்போது, அதில் பெரும்பான்மையோர் தமிழர்களே. 1891 இல் 75,000 ஆக இருந்த இந்தியர் எண்ணிக்கை 1901 இல் 1,20,000 க்கு உயர்ந்தது. 1911 இல் இத் தொகை 270,000 ஆகவும், 1921 இல் 470,000 ஆகவும், 1931 இல் 6,25,000, ஆகவும் மேலும் உயர்ந்து, 1970 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிவரக் கணக்கின்படி இந்த நாட்டில் உள்ள இந்தியர்களின் எண்ணிக்கை 932,629 ஆகும். இது, மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழப் பத்து விழுக்காடு ஆகும். இந்தியர்களில் தமிழர்களின் எண்ணிக்கை 754,256. இது 80·9 விழுக்காடாகின்றது. தோட்டப் புறங்களில் 65·3 விழுக்காடு இந்தியர்கள் வாழ்கின்றனர். இவர்களில் ஏறத்தாழ அறுபது விழுக்காட்டினர் தமிழர்கள். தமிழர்களுக்கும் ரப்பர்த் தோட்டங்களுக்கும் இடையில் உள்ள நெருங்கிய பிணைப்பை இந்தப் புள்ளி விவரங்களால் அறியலாம்.

இன்று மலேசியாவில் வாழும் இனங்களில் மலாய், சீன, இந்திய இனங்கள் முக்கியமானவை. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை மலாய் மொழியே பயிற்றுமொழி என்பது தேசியக் கல்விக் கொள்கை எனினும், தமிழ்ப் பள்ளிகளும், சீனப் பள்ளிகளும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. மலாய்ப் பள்ளிகள் தேசியப்பள்ளிகள் என்றும், தமிழ், சீனப் பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஏறத்தாழ 650 க்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் இன்று இங்கு இயங்கி வருகின்றன. தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை இன்று இந்த அளவு பெருகியிருந்தாலும், தமிழர்கள் குடியேறிய தொடக்க காலத்தில் தமிழ்ப்பள்ளியும் தமிழ்க்கல்வியும் அரிதாகவே இருந்தன. முதல் தமிழ்ப் பள்ளி பினங்கில் 1816 இல் தொடங்கப் பட்டாலும், தமிழ்ப்பள்ளிகள் தோற்றுவிக்கப்படுவதில் பெரும் இடர்ப்பாடுகள் இருக்கவே செய்தன. சென்ற நூற்றுண்டில் கிறித்துவ சமய நிறுவனங்கள் சில, தமிழ்க் கல்விக்கெனத் தமிழ்ப் பள்ளிகளைத் திறந்தன. பின்னர் இந்துக் கோயில்களின்

ஆட்சியாளர்களும் சில தமிழ்ப் பள்ளிகளை ஏற்படுத்தினர். எனினும் இந்த நூற்றுண்டின் தொடக்கத்திலேயே அரசாங்கம் தமிழ்க்கல்வியில் சிறிது நாட்டம் செலுத்தத் தொடங்கியது. இதன் பின்னரே தமிழ்ப்பள்ளிகளின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றில் சில ஒழுங்கு முறைகள் ஏற்பட்டன. 1938 இல் தமிழாசிரியர் பயிற்சி வகுப்புகளையும் தொடங்கிய பின்னர்த் தமிழ்க் கல்வியின் தரம் உயர்ந்தது. இன்று மலாயாப் பல்கலைக் கழக இந்தியப் பகுதியில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, சமூகவியல் ஆகியன பயிற்றுவிக்கப்படுகின்றன. எனினும் தொடக்கப் பள்ளித் தமிழ்க்கல்விக்கும், பல்கலைக் கழகத் தமிழ்க் கல்விக்கும் இடையில் ஒரு பெரிய தொய்வு உள்ளது. இதற்குக் காரணம் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாக இல்லாததே எனலாம். அரசாங்கக் கல்வித்திட்டத்தின்படி இடைநிலைப்பள்ளிகளில் ஒரு வகுப்பில் பதினைந்து பிள்ளை களுக்கு மேல் தமிழைப் பாடமாகப் பயில விரும்பினுல் ஒரு தமிழா சிரியரை நியமிக்கலாம். எனினும் இவ் வாய்ப்பை அதிகமாகப் பயன்படுத்துவதாகக் கூற முடியாது.

பொருளாதாரப் பயன் இல்லாவிடினும் காலத்திற்குக் காலம் பல இடையூறுகளுக்குட்பட்டு, தமிழ்க்கல்வி இங்கு நிலைபெற்றே வந்துள்ளது. அது நிலைபெறப் பத்திரிகைகளும் தக்க துணை செய்துள்ளன. தமிழ்க்கல்வி நிலைபெறப் மட்டுமல்லாமல், இலக்கிய வகைகளின் வெளியீட்டிற்கும் பத்திரிகைகள் துணை செய்துள்ளன. மலேசியாவைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பத்திரிகைகள் மலேசியத் தமிழிலக்கியத்தின் தாய் என்றே கூறலாம். இன்று 'தமிழ் நேசன்', 'தமிழ் மலர்' என இரு நாளிதழ்களும், 'வானம்பாடி' என்ற வார இதழும், 'உதயம்', 'புதிய சமுதாயம்' என இரு திங்கள் இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் 'தமிழ் நேசன்' பொன் விழாக் கண்டு சில ஆண்டுகள் ஆகின்றன. 1924 இல் வாரப் பதிப்பாகத் தோன்றிய 'தமிழ் நேசன்' 1937 முதல் நாளிதழாக வெளிவந்துகொண்டிருக்கிறது. இவையன்றிச் சில ஆண்டுகளுக்கு முன் நின்றுவிட்ட 'தமிழ் முரசு' நாளிதழும் மலேசியத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளது. 1935 இல் வாரப் பதிப்பாகத் தொடங்கிய 'தமிழ் முரசு' பின்னர் நாளிதழ் ஆனது. இன்றும் சிங்கப்பூரில் தொடர்ந்து வெளி வருகிறது. 'தமிழ் முரசு' என்றவுடன் மலேசியத் தமிழர்களுக்கு நினைவு வரும் பெயர் அமரர் கோ. சாரங்கபாணி. மலாயாப் பல்கலைக் கழக இந்தியப் பகுதியில் தமிழ் முதன்மை பெறவும், 'தமிழ் எங்கள் உயிர்' இயக்கத்தின் மூலம் மொழியுணர்ச்சி

பெருகவும், 'தமிழர் திருநாள்' இயக்கத்தின் மூலம் தமிழர்களிடையே ஒற்றுமையுணர்வு உறுதிப்படவும், 'தமிழ் இளைஞர் மணிமன்ற'த்தின் மூலம் இளைஞர்களுடைய ஆற்றலை ஒருங்கு திரட்டவும் அமரர் கோ. சாரங்கபாணி ஆற்றிய தொண்டு என்றும் நினைவிற் கொள்ளவேண்டிய ஒன்று. இங்கு நாளிதழ்களின் ஞாயிறு மலர்கள் இலக்கிய ஏடுகளாகவே மலர்கின்றன. இவையே எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களுக்கு வாயில்களாக உதவி வந்துள்ளன.

மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகள், தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி இருப்பினும் அவற்றினுடைய வரலாறு ஒரு சோக காவியமாகவே இருக்கின்றதெனலாம். போதிய முன்னேற்பாடுகள் இல்லாமல் ஆர்வத்தை மட்டுமே முதலாகக் கொண்டு தொடங்கிய காரணத்தால் பல நாளிதழ்களும், வார இதழ்களும், திங்களிதழ்களும் இங்குத் தோன்றி மறைந்துள்ளன. வாசகர்களின் ஆதரவின்மையும் இதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். சில இதழ்கள் ஒன்றிரண்டு இதழ்கள் வந்த அளவிலேயே நின்றுவிட்டன. மலேசியாவில் வெளிவந்த நூல்கள், பத்திரிகைகள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புக்களைத் தொகுத்து அமரர் டாக்டர் இராம. சுப்பையா வெளியிட்ட 'தமிழ் மலேசியானு' என்ற நூலில் இத்தகைய பத்திரிகைகள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். குறுகிய காலமே இப் பத்திரிகைகள் உயிர் வாழ்ந்திருந்தாலும், மலேசியத் தமிழிலக்கிய வரலாற்றில் தங்கள் சுவடுகளைப் பதிக்க இவை தவறவில்லை.

மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளை அடுத்து, மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம். ஆங்காங்கே நடந்த கவியரங்கங்களில் பாடப்பட்ட கவிதைகளைத் தொகுத்து 'அரங்கேறிய கவிதைகள்' என்ற நூலையும், திங்கள்தோறும் சிறுகதைக் கருத்தரங்குகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளைத் தொகுத்துப் 'பரிசு' என்ற நூலையும் இச் சங்கம் வெளியிட்டுள்ளது. மலாயாத் தமிழ்ப்பண்ணை, தமிழ் இளைஞர் மணிமன்றம், கெடா எழுத்தாளர்—வாசக இயக்கம், பேரா தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவையும் இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் காட்டி உழைத்து வருகின்றன.

இவற்றுடன், ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு என்றுமே ஊன்றுகோலாய் நிற்பது புத்தகப் பதிப்புத் துறை.

இத் துறையில் இங்கு வளர்ச்சியில்லை என்றே கூறிவிடலாம். எழுத்தாளர்கள் தங்கள் நூல்களைத் தாங்களே அச்சிட்டு விற்கக் கூடிய நிலையிலேயே இன்றும் உள்ளனர். இந் நிலையில் மாற்றம் ஏற்பட்டால் இலக்கிய வளர்ச்சி வேகப்படும்.

மலேசியத் தமிழிலக்கியத்தில் சிறுகதைக்கடுத்த நிலையில் வளர்ந்துள்ள துறை கவிதையென்றாலும், முதன்முதலாகச் சுடர் விட்ட துறை கவிதையாகவே காணப்படுகின்றது. சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே கவிதை நூல்கள் இங்கு வெளிவரத் தொடங்கி விட்டன. வண்ணை நகர் சி. ந. சதாசிவப் பண்டிதர் இயற்றி 1887 இல் வெளிவந்த 'வண்ணையந்தாதி', 'வண்ணை நகரூஞ்சல்', 'சிங்கை நகரந்தாதி,' 'சித்திர கவிகள்' ஆகியவையே முதலில் வந்த நூல்களாகக் காணப்படுகின்றன. இவற்றையடுத்து நா. வ. இரங்கசாமி தாசன் இயற்றிய 'அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி' 1893 இல் வெளிவந்தது. 1890 இல் 'பதானந்த மாலை' என்ற நூலை முகம்மது சுல்தான் மரைக்காயர் வெளியிட்டார். இவையனைத்தும் சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் வெளிவந்த கவிதை நூல்களின் போக்கிலேயே அமைந்துள்ளன. சமயமும் ஒழுக்கமுமே இவற்றின் பொருள்களாகக் காணப்படுகின்றன. இப் போக்கு இந் நூற்றாண்டின் முதல் முப்பத்தைந்து ஆண்டுகள் நீடித்ததெனலாம். சிந்து, காவடிச் சிந்து, லாவணி முதலிய எல்லோரையும் கவரும் கவிதை வடிவங்களையே ஆசிரியர் பலர் கையாண்டனர். கற்பனையும் எளிமையும் இனிமையும் பக்தியும் நிறைந்த பாடல்களாக இவை காணப்படுகின்றன.

''நலந்திகழு நாதவிந்து கால்க ளாக
நயந்திகழும் பரம்பொருளோர் விட்ட மாக
வலந்திகழுங் காலமெலாம் வடங்க ளாக
வரந்திகழும் வேதமெலாம் பலகை யாக
புலந்திகழும் பிரணவம்பொன் விதான மாக
பொருடிகழு மூபனிடதம் பீட மாக
கலந்திகழுஞ் சரசைநெறி வண்ணை வாழுங்
காமாட்சி யம்மையே யாடூ ரூசல்''

என்று 'வண்ணை நகரூஞ்சலில்' வரும் பாடல் இதனை நன்குணர்த்தும்.

அன்றாட நாட்டு நடப்புக்களுடன், சீர்திருத்த வேகமும் இக் கால கட்டத்தில் மலேசியத் தமிழ்க் கவிதையில் முக்கிய இடம் பெறத் தொடங்கியது. 1930 க்குப் பின்னர்ச் சீர்திருத்தக்

கருத்துக்களும் கொள்கைகளும் இங்கு வேகமாகப் பரவத் தொடங்கின. சீர்திருத்தங்களைப் பரப்புவதற்காகவே பல பத்திரிகைகளும் தோன்றத் தொடங்கின. 'முன்னேற்றம்', 'சீர் திருத்தம்', 'தமிழ் முரசு' ஆகியவை இவற்றில் முக்கியமானவை. இவற்றின் விளைவாகவே சிங்கப்பூரில் 'தமிழர் சீர்திருத்த சங்க'மும் தோற்றுவிக்கப்பட்டது. இச் சீர்திருத்த அலைகள் இலக்கியத்தையும் விட்டுவைக்கவில்லை. இக்காலப் பகுதியிலும் இதற்குப் பின்னர்ப் பல ஆண்டுகளிலும் எழுதப்பட்ட கதை, கவிதை, கட்டுரை முதலிய அனைத்திலும் இதனதாக்கத்தைக் காணலாம். இதனை ஒட்டியே இக்காலக் கவிதைகளிலும் சீர் திருத்தக் கருத்துக்கள் வேகமாக இடம்பெறத் தொடங்கின. இவ்வாறு வெளிவந்த ஒரு நூல் ப. ஆறுமுகம் இயற்றி, 1939 இல் வெளிவந்த 'நவரச ஆனந்த சீர்திருத்தக் கீதமலர்' ஆகும்.

தனிப்பட்ட முறையில் காணப்படும் இத்தகைய முயற்சிகளே அல்லாமல், கூட்டாக ஒன்று சேர்ந்து இயங்க முனையும் சில முயற்சிகளையும் 1940 க்குப் பின் காண்கிறோம். இவற்றுள் சிறப் பாகக் குறிப்பிடத் தக்கது பத்து பகாட்டில் இயங்கி வந்த 'கவிதா மண்டலம்' ஆகும். நாடெங்கிலும் உள்ள எழுத்தாளர்களைக் கொண்டு 1943 இல் உருவான இக் கவிதா மண்டலம், கவிதையில் மட்டுமல்லாமல் சிறுகதை, நாடகம், கட்டுரை ஆகிய துறைகளி லும் நாட்டம் செலுத்தி வந்தது. 1946 இல் 'கவிதா மண்டலம்' என்ற பெயரிலேயே ஒரு மலரையும் இம் மண்டலம் கொண்டு வந்துள்ளது.

மலேசியா விடுதலை பெற்ற 1957 ஆம் ஆண்டு, மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தக்க ஆண்டாகும். இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே மலேசியத் தமிழர்கள் தங்களுக்கெனத் தனி இலக்கியம் இருக்க வேண்டிய தேவையை உணரத் தலைப்பட்டுவிட்டனர். அந்தத் தேவை வளரப் புதிய பாதையை மலேசிய விடுதலை திறந்து விட்டுவிட்டது. அதன் காரணமாக மலேசியத் தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகள் கவிதைகளில் இடம்பெறத் தொடங்கின. அவற்றுடன் இயற்கை, குழந்தை, தாய்மை, காதல், மொழி யுணர்வு, நாட்டுப் பற்று பற்றிய பாடல்களும் பெருகத் தொடங்கின. 'தமிழ் முரசும்', 'தமிழ் நேசனும்' கவிதைக்கெனத் தனிப் பக்கங்களை ஞாயிறு மலர்களில் ஒதுக்கிக் கவிதை வளரத் துணை செய்தன.

மலேசியத் தமிழ்க் கவிதையுலகில் நீண்ட காலமாக எழுதி வரும் கவிஞர்கள் பலர் உள்ளனர். கவிமணி கிருஷ்ணதாசன், சோமசன்மா, ந. பழனிவேலு, கா. பெருமாள், சுவாமி இராம தாசர், நாச்சிகுளத்தார் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத் தக்கவர். ந. பழனிவேலுவின் 'கவிதை மலர்கள்' சோம சன்மாவின் 'மகிழம்பூ'—மலேசிய விடுதலைக்குச் சற்று முன்னும் பின்னுமான கவிதைப் போக்கினை நன்கு காட்ட வல்லன. இவர்களுக்குப் பின் வந்த கவிஞர்களில் ஐ. உலகநாதன், கரு. திருவரசு, நகைச்சுவைப்பித்தன், சங்கு சண்முகம், காரைக் கிழார், சி. அன்பானந்தம், பாதாசன், வீரமான், கரு. வேலுசாமி, இரா. பாண்டியன், எல்லோன், வி. கே. சுப்பிரமணியன், சி. வேலுசாமி, முகிலன், சா. ஆ. அன்பானந்தன், பட்டவர்த் சைனுத்தீன், முல்லைவாணன், ந. கரீம், முரசு. நெடுமாறன், அமுத இளம்பாரதி, மறைமுடி வல்லத்தரசு ஆகியோர் பல சிறப்பான கவிதைகளை எழுதி வருகின்றனர். கவிஞர் உலக நாதனின் 'சந்தனக் கிண்ணம்' மலேசியத் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெறும் நூல். உணர்ச்சியும் கற்பனையும் நிறைந்த பல அழகிய பாடல்களை இத் தொகுப்பின் கண் காணலாம். தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களைப் பற்றிய ஒரு கவிதையில், அவர்களின் பாராமுகத்தைச் சற்றுக் கடுமையாகவே இவர் இவ்வாறு சாடியுள்ளார்:

''வாழ்வில்லை வளமில்லை
வலிவில்லை செழிப்பில்லை
சூழ்தொல்லை சிறிதில்லை
சுகமில்லை நலமில்லை—என்றால்
மரமுண்டு கயிறுண்டு
மரணத்தில் சுகமுண்டு
பிறகென்ன துயருண்டு ?
பேசாதே போவென்று சொல்வார்—இவர்
கூசாமல் சாவென்று சொல்வார்!—இங்கே
வாழ்வுக்கு வழிகேட்டால்
சாவுக்கே வழிகாட்டிச் செல்வார்!''

கரு. திருவரசு என்ற மற்றொரு கவிஞர், தம் 'வண்ணங்கள்' என்ற தொகுப்பில் மலேசியத் தமிழ்ச் சமுதாயம் எதிர்நோக்கி யுள்ள பல பிரச்சினைகளைக் கவிதையாக்கியுள்ளார். 'தமிழ் ஆண்டிகள்' என்ற கவிதையில், தமிழர்களிடம் காணப்படும் ஒற்றுமையின்மையை அவர் கேலி செய்துள்ள விதம், அவர் கவிதை புனையும் ஆற்றலுக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது.

இதனையே சற்று இன்னும் கடுமையாக நகைச்சுவைப்பித்தன் சாடுகிறார்.

அவரது கவிதை, தமிழ்ச் சமுதாயத்தின் போக்கினைக் கண்டு அவர் படும் வேதனையைத் தெளிவாக உணர்த்துகிறது. சமுதாயத்தை இக்கவிஞர்கள் இவ்வளவு கடுமையாகச் சாடினாலும், அச்சாடலுக்குக் கீழே ஒரு பரிவுணர்ச்சியையும் காண முடிகிறது. அண்மையில் இந் நிலை மாறியுள்ளது. சமுதாயத்தில் தாங்களும் ஓர் அங்கம் என்பதை மறந்து, சமுதாயத்தை மூன்றாம் மனிதனாக்கி மிகமிகக் கடுமையாகச் சாடும் போக்கு அண்மையில் தோன்றியுள்ளது. 1977-78 ஆண்டுகளில் வெளிவந்துள்ள காரைக்கிழாரின் 'கணைகள்', கரு. வேலுச்சாமியின் 'புயல்', டி. எஸ். பொன்னுசாமியின் 'தீப்பொறி' ஆகிய மூன்று தொகுப்புக்களிலும் இப் போக்கினைக் காணலாம்.

மலேசியத் தமிழ்க் கவிதையில் குறுங்காவியங்களும் கவிதை நாடகங்களும் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கவிஞர் கா. பெருமாளின் 'கட்டை விரல்', 'வாழ்வின் இறுதி', 'பரமேஸ்வரன்', 'தெய்வயானை', 'உரைசால் பத்தினி' ஆகிய கவிதை நாடகங்கள் வானொலியில் ஒலியேறிப் பலர் பாராட்டைப் பெற்றவை. ஐ உலகநாதனின் 'தமிழன் கதை', 'அணையும் ஆணை'; சி. அன்பானந்தனின் 'நந்தா விளக்கு', 'கனிமொழி', 'கிணற்றுத் தவளை'; கரு. திருவரசுவின் 'அழகின் அழைப்பு'; காரைக் கிழாரின் 'அலை ஓசை', 'புரியாத புதிர்'; வெ. பழனியின் 'அழகோவியம்' ஆகியவை இங்கு வெளிவந்த குறுங்காவியங்களில் குறிப்பிடத் தக்கவை. இவற்றில் காரைக் கிழாரின் 'அலை ஓசை', சி. அன்பானந்தனின் 'கிணற்றுத் தவளை' ஆகிய இரண்டு மட்டுமே நூல் வடிவம் பெற்றுள்ளன. தமிழகத்தில் நடந்த 'மறைமலையடிகள் பிள்ளைத் தமிழ்ப் போட்டி'யில் முதற் பரிசு பெற்றவர் சி. அன்பானந்தன் என்பதும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

மரபுக் கவிதையோடு புதுக்கவிதை முயற்சியும் அண்மைக் காலத்தில் இங்குப் பெருகி வருகிறது. தொடக்கத்தில் 'தமிழ் நேசனும்' 'தமிழ் மலரும்' சில புதுக்கவிதைகளை வெளியிட்டன. இப்போது 'வானம் பாடி' வார இதழ், புதுக்கவிதைகளுக்கு நல்ல ஆக்கம் ஊட்டி வருகிறது. சி. கமலநாதன், அக்கினி, இராஜ குமாரன் ஆகியோர் இத் துறையில் மிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மலேசியத் தமிழிலக்கிய வரலாற்றில் கவிதையை அடுத்துப் பிறந்த இலக்கிய வகை நாவல் எனலாம். 1917 ஆம் ஆண்டில் வெங்கடரத்தினம் எழுதிய 'கருணாசாகரன்' அல்லது 'காதலின் மாட்சியே' இதுவரை வெளிவந்துள்ள நாவல்களில் முதல் நாவலாகக் காணக் கிடைக்கின்றது. தமிழகப் பின்னணியில் அமைந்துள்ள இந்த நாவல் அறிவுறுத்தவென்றே எழுதப் பட்டுள்ளது. வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கங்கள், அறிவு நெறிகள் முதலியவை பல பக்கங்களுக்குக் கட்டுரைகள் போல இந் நாவலில் காணப்படுகின்றன. இதனையடுத்து 1918 ஆம் ஆண்டில் 'பாலசுந்தரம்' அல்லது 'சன்மார்க்க ஜெயம்' என்ற நாவல் தோன்றியது. இரண்டு பாகங்களால் ஆன இந் நாவலின் இரண்டாம் பாகம் மட்டுமே இன்று கிடைக்கின்றது. இந் நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி மலாயாவைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி, கோலாலம்பூர் நகரம் உருவாகத் தொடங்கும் நிலை, இலங்கைத் தமிழருக்கும் இந்தியத் தமிழருக்கும் இடையில் இருந்த பிணக்குகள் முதலிய பல செய்திகளை இவ்விரண்டாம் பாகத்தில் காணலாம்.

இவற்றையடுத்து 1930 ஆம் ஆண்டிற்குப் பின்னரே மறு படியும் நாவல்களைக் காண முடிகிறது. கோ. பார்த்தசாரதி எழுதிய 'தோட்டக்கொலை மர்மம்' அல்லது 'பத்துமலைக் கள்வன்' (1932), மு. சீ. செல்வத்துரை எழுதிய 'கோரகாந்தன்' அல்லது 'தென் மலாயா கிரியில் வட இலங்கைத் துப்பாளி' (1934), கே. எஸ். பாண்டியன் எழுதிய 'மதனபூரணி' (1931), சுளிபுரம் சிவஞானம் எழுதிய 'நேசமலர்' அல்லது 'கற்றோரின் கனு' (1936), க. டொமினிக்கின் 'கழகானந்த புஷ்பம்' (1936) முதலிய இந் நாவல்கள் பெரும்பாலும் துப்பறியும் நாவல்களாகவே அமைந்துவிட்டன. நாவலுக்கு இன்று நாம் வகுக்கும் வரை யறைகள் இவற்றிற்குப் பொருந்தாவிட்டாலும், அன்றைய கதை இலக்கியப் போக்கினை இவை நன்கு தெளிவுபடுத்துகின்றன. துப்பறியும் கதைகளாயினும் அக்காலக் குடும்ப அமைப்பு, கல்விப் பிரச்சினைகள், திருமணச் சிக்கல்கள், இளைஞர்கள் மனப்போக்கு, சமய நிலை, சுற்றுப் புறச்சூழல் ஆகியவற்றை இந் நாவல்களில் காட்ட நாவலாசிரியர்கள் தவறவில்லை.

இந் நாவல்களுக்குப் பின்னர், மலேசிய விடுதலையை அடுத்தே மறுபடியும் நாவல்களைப் பார்க்க இயலுகிறது. மலேசிய விடுதலைக்குப்பின் வந்த நாவல்களில் பல குறுநாவல்களாகவே விளங்குகின்றன. காதலும், துப்பறிதலும் சில நாவல்களில்

முக்கிய இடம் பெற்றுள்ளன. எனினும் தோட்டத் துண்டாடலின் பாதிப்பை உணர்த்தும் 'செம்மண்ணும் நீல மலர்களும்' நாவலும், தோட்டப்புற மக்களின் அவல வாழ்க்கையைக் கதையாக்கும் 'துயரப் பாதை'யும், இக்கால இளைஞர்களின் ஒரு சிறு பகுதியினரின் வாழ்க்கைப் பின்னணியில் அமைந்த 'பசித்திருக்கும் இளங்கொசுக்க'ளும் இவற்றுள் சிறப்பிடம் வகிக்கின்றன. கவிதைக்குப் பின்னர், கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே நாவல் அரும்பு விட்டாலும், அது மலரும் காலத்திற்கு இன்னும் காத்திருக்க வேண்டியே உள்ளது.

கவிதையையும் நாவலையும் அடுத்துப் படைப்பிலக்கியத் துறையில் இங்குச் சிறுகதை தோன்றியது. எனினும் இன்று சிறுகதையே மலேசியத் தமிழிலக்கிய வகைகளில் முன்னணி வகிக்கின்றது. இதற்குக் காரணம் உரைநடை இலக்கிய வகைகளில் சிறுகதைக்கமைந்த வாய்ப்புக்களே எனலாம். சிறிய வடிவமும், நெஞ்சில் ஆழமாகப் பதிய வைக்கக் கூடிய ஆற்றலும் சிறுகதைக்கு உண்டு. இவையே சிறுகதையை ஒரு பரவலான இலக்கிய வகையாக்கிவிட்டன. மலேசியத் தமிழ் இதழ்களும் இப் பரவலுக்கு நன்கு துணை நிற்கின்றன.

மலேசியச் சிறு கதையின் தோற்றம் பற்றி ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே இத் துறை வேகமாக வளரத் தொடங்கியது. 1940 ஆம் ஆண்டுக்கு முன்னரே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு கதைகள் காணப்படுகின்றன. 1941 ஆம் ஆண்டில் 'தமிழ் முரசு' வெளியிட்ட இரண்டாம் ஆண்டு மலரில், "இந்த ஆண்டில் ஆண்டு மலருக்கு மலாயாவிலுள்ள ஆரம்ப எழுத்தாளர்கள் ஆண்களும் பெண்களும் ஏராளக் கட்டுரைகள், கதைகள் அனுப்பியிருந்தார்கள். அவற்றுள் சிலவே இதில் இடம் பெற்றுள்ளன" என்ற குறிப்போடு, சில சிறுகதைகள் வெளியாகியுள்ளன. முருகு சுப்பிரமணியம் எழுதிய 'பொன்னி'யும் குளுவாங் ரா. துரைசாமி எழுதிய 'காதலா, கனவா, பித்தமா ?' கதையும் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. ஜப்பானியர் ஆட்சி காலத்தில், 1943 ஆம் ஆண்டில், 'ஜெயமணி'யில் சில சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ராஜப்பா எழுதிய 'ஆசை முகம் மறந்து போச்சே' கரு பொன்னம்பலம் எழுதிய 'சிரஞ்சீவி வேணு' அ. வீர. ந. எழுதிய 'காதலர்களின் தேசபக்தி', அ. மு. சி. எழுதிய 'விதியின் சுழல்' ஆகியவை அவற்றுள் சில. இவ்வாறு அங்கும் இங்குமாகச் சில படைப்புக்கள் காணப்பட்டாலும், 1945 க்குப் பின்னரே சிறு

கதைத் துறையில் ஒரு கணிசமான ஊக்கத்தையும் ஆக்கரமான முயற்சியையும் காண முடிகிறது. ஜப்பானியர் ஆட்சிக்குப் பிறகு தன்னுடைய மூன்ருவது ஆண்டு மலரைக் கொண்டு வந்த 'தமிழ் முரசு', அன்று எழுதிய ஒரு குறிப்பு அக்காலக் கதைகளின் போக்கை ஓரளவு தெளிவுபடுத்தும். "ஆரம்ப எழுத்தாளர்கள் காதல் கதைகள் எழுதுவதில் அடங்காத ஆர்வமுடையவர்களாய் இருக்கிருர்கள். கதை எழுத விரும்புகிறவர்கள் பார்த்த சினிமாக்களையும், படித்த கதைகளையும் கருத்தில்லாமல் கொட்டி அளக்கக் கூடாது. கதைகளில் கருத்துக்கள் இருக்கவேண்டும்; கதாபாத்திரங்களின் வாயிலாக மக்கள் மனதைத் தைக்கக் கூடிய அறிவுரைகள் வெளிப்பட வேண்டும்; எழுத்து நடையில் அழகு மிளிர வேண்டும்; சொற்ருெடர்கள் சுவைக்கச் சுவைக்க இருக்க வேண்டும்" என்பதே அக் குறிப்பு.

இதற்குப் பின்னும் நிலைமை முற்ருக மாறிவிடவில்லை 1948இல் தோன்றிய 'தமிழ்ச் சுடர்' என்ற திங்கள் இதழ் தன்னுடைய முதல் இதழிலேயே 'தமிழ் நாட்டைப் போல் மலாயா எழுத்தாளர்கள் சிறுகதைத் துறையில் கவனம் செலுத்தவில்லை. பத்திரிகை வசதி இல்லாததையும் காரணமாகக் கூறலாம். 'தமிழ்ச் சுடர்' சிறுகதைத் துறையில் மலாயாவில் எழுச்சியை உண்டுபண்ணி விரைவில் சிறுகதைப் போட்டி ஒன்றும் ஆரம்பிக்க விருப்பதால் ஆரம்ப எழுத்தாளர்களுக்கு ராஜாஜியின் இச் சிறுகதை இலக்கணம் மிக உதவியாயிருக்கும்'' என்ற குறிப் போடு, ராஜாஜியின் சிறுகதை பற்றிய கட்டுரை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. சிறுகதைத் துறை முற்ருக மாருவிட்டாலும், முனைந்து வளர்க்கவேண்டும் என்று ஓர் எழுச்சி இக்காலப் பகுதியில் ஏற்பட்டதை இவை நன்கு உணர்த்துகின்றன.

ஆங்காங்குப் பரவலாக இவ்வாறு ஏற்பட்ட எழுச்சியே 1950ஆம் ஆண்டில் 'தமிழ் நேச'னின் 'கதை வகுப்பாக' உருவம் கொண்டது 1951ஆம் ஆண்டு ஏப்பிரல் வரை நடந்த இக்கதை வகுப்பை, சுப. நாராயணனும், பைரோஜி நாராயணனும் மிகச் சிறப்பாக நடத்தினர். முறையாகக் கதையெழுத இக் கதை வகுப்பு பெருந்துணை செய்தது. கதை வகுப்பின் இறுதியில் இவர்கள் ஒரு தேர்வையும் நடத்தினர். 1951 ஏப்பிரல் 22 ஆம் நாள் அறிவித்த தேர்வு முடிவில், மேதை எழுத்தாளர், சிறந்த எழுத்தாளர், தேர்ந்த எழுத்தாளர், நல்ல எழுத்தாளர், ஆர்வ எழுத்தாளர் என ஐந்து பிரிவினராக இப் போட்டியில் கலந்து கொண்ட எழுத்தாளர்களை இனம் கண்டு பிரித்துத் தங்கள் தீர்ப்பை வழங்கினர். இக் கதை வகுப்பினுல் பலர் துணிவாக எழுத்துலகுக்கு வந்தனர்.

கதை வகுப்பு தோற்றுவித்த ஆர்வம் தணிந்துவிடாத முயற்சியில் பின்னர்ப் பத்திரிகைகளும் மன்றங்களும் இயக்கங்களும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டன. 'சோலை', 'திருமுகம்', 'மாதவி', 'மலைமகள்' முதலிய பல ஏடுகள் இப்பணியில் முனைந்து நின்றன. இவை புதிய சிறுகதைகள் உருவாக வழி வகுத்தன.

இதற்குப் பின் 1957 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமையும் அமரர் கு. அழகிரிசாமி நடத்திய இலக்கிய வட்டக் கூட்டங்கள், சிறுகதை எழுத்தாளர்களுக்கு மிகுந்த பயன் விளைவித்தன. நாடெங்கிலுமிருந்து சிறுகதை எழுத்தாளர்கள் இவ் வகுப்புகளில் கலந்துகொண்டனர். இக் கூட்டங்களில் சிறுகதையின் இலக்கணங்கள் பற்றிக் கு. அழகிரிசாமி ஆற்றிய சொற்பொழிவுகளும், தேர்ந்தெடுத்த சிறுகதைகள் பற்றிச் செய்யப்பட்ட திறனாய்வுகளும் சிறுகதைத் துறை வளர்ச்சியடையப் பெரும் பணியாற்றின.

சிறுகதைத் துறையின் வளர்ச்சிக்கு, ஆங்காங்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளும் தக்க துணை செய்தன. தமிழ்ப் பண்ணை, தேவன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி, மணி மன்றங்கள், திராவிடர் கழகம், எழுத்தாளர் சங்கங்கள், பத்திரிகைகள் முதலிய பலவும் அவ்வப்போது நடத்திய சிறுகதைப் போட்டிகள் புதிய எழுத்தாளர்கள் உருவாகத் துணை புரிந்தன. 'தமிழ் நேசன்' மூன்றுண்டுகள் நடத்திய பவுன் பரிசுப் போட்டியும், தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய மாதாந்திரச் சிறுகதைக் கருத்தரங்குகளும் இவற்றில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. 'தமிழ் நேசன்' பவுன் பரிசுப் போட்டியில் முதலாமாண்டு தேர்ந்தெடுத்த கதைகளைப் 'பவுன் பரிசுக் கதைகள்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளது. தமிழ் எழுத்தாளர் சங்கம், முதல் பதினான்கு மாதங்களில் தேர்ந்தெடுத்த பதினான்கு கதைகளைப் 'பரிசு' என்ற பெயரில் ஒரு தொகுப்பாக வெளியிட்டுள்ளது

புத்தக வெளியீட்டுத் துறை என்று எடுத்துக் கொண்டாலும், சிறுகதையே முன்னணி வகிக்கின்றது. 1953 இல் வெளிவந்த 'இரத்த தானம்' என்ற முதல் சிறுகதைத் தொகுப்பைத் தொடர்ந்து ஏறத்தாழ அறுபது சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்து விட்டன. அண்மையில் சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிடும் ஆர்வம் மேலும் பெருகி வருகின்றது. மலேசியாவில் நூற்றுக்கும் அதிகமான சிறுகதை எழுத்தாளர்கள் இன்று உள்ளனர். இதுவரை வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளில்

சி. வடிவேலுவின் 'இருண்ட உலகம்', எம். ஏ. இளஞ் செல்வனின் 'முச்சந்தி மலர்கள்', ரெ. கார்த்திகேசுவின் 'புதிய தொடக்கங்கள்', தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் 'மணிக் கதைகள்', சீ. முத்துசாமியின் 'இரைகள்', கு. கிருஷ்ணனின் 'புனிதமான உலகங்கள்', அன்புச் செல்வனின் 'தவத்தின் வலிமை' ஆகியவை குறிப்பிடப்படவேண்டிய சிறுகதைத் தொகுதிகள். அரசியல், கல்வி, பொருளாதாரம், குடியுரிமை, குடும்ப அமைப்பு உறவுகள், மனித உணர்ச்சிகள், குடி, ஒற்றுமை முதலிய பல்வேறு பிரச்சினைகளும் இங்குச் சிறுகதைகள் ஆகியுள்ளன. தோட்டப்புறங்களில் எழுத்தார்வம் பெருகவும் சிறுகதை எழுத்தாளர்கள் உருவாகவும் 'சங்கமணி' ஆற்றிய அரும் பணியும் இங்கு நினைக்கத் தக்கது. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் தோட்டப்புற வாழ்க்கையும், பிரச்சினைகளும் பல சிறு கதைகளில் வெளிப்பட்டுள்ளன.

மற்ற இலக்கிய வகைகளைப் போல் நாடக நூல்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இங்கு வெளிவரவில்லை என்றாலும் மேடை நாடகங்கள் பல அவ்வப்போது அரங்கேறி வருகின்றன. தோட்டங்களில் உழைப்பதற்காக இங்குக் குடியேறிய தமிழர்கள் தங்களுடன் கூத்துக்கலையையும் கொண்டுவந்தனர். அக் கூத்துக்களே தொடக்கத்தில் இங்கு நடைபெற்றன. சமய அடிப்படையில் அமைந்திருந்த இவை, பின்னர் சீர்திருத்த விளக்கங்களுக்கும் பயன்பட்டன. இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் அமைந்த 'மலாயன் சுகுண விலாச சமாசமும்', இந்திய தேசிய ராணுவத்தின் சார்பில் தொடங்கப்பெற்ற 'இந்தியச் சுதந்திரக் கழகமும்' பல நாடகங்களை மேடையேற்றியதாக அறிகிறோம். இந்திய சுதந்திரக் கழகம் நடத்திய 'வீர வனிதா' என்ற நாடகத்தை நேதாஜி இருமுறை கண்டு பாராட்டியதாக, சா. ஆ. அன்பானந்தன் தம் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பின்னர்ப் பாரதிதாசனின் 'புரட்சிக் கவி', 'கவி உதாரன்' என்ற பெயரிலும், 'அமைதி', 'எதிர்பாரா முத்தம்' ஆகியவை அதே பெயர்களிலும், மேடை ஏறின. தமிழ்க்கலை மன்றம், கலைப் பண்ணை, மலேசியக் கூட்டரசு தமிழர் மன்றம், தமிழ் இளைஞர் மணி மன்றம் முதலிய பல அமைப்புக்கள் இங்கு பல அருமையான நாடகங்களை மேடையேற்றி உள்ளன. மலேசியக் கூட்டரசு தமிழர் கலைமன்றத்தின் மூலம் மறைந்த ஆழி. அருள்தாசன் மேடை யேற்றிய 'யார் குற்றவாளி?', 'மின்னொளி', 'வாடாமலர்', 'உயிரோவியம்', 'கடாரம்', 'முல்லைத் தேர்' ஆகிய நாடகங்கள் ஒளி—ஒலி அமைப்பு 'காட்சி அமைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கிய நாடகங்கள். இவையன்றி

மலேசிய வானொலியும் பல இலக்கிய நாடகங்களையும், சமூக, நகைச்சுவை நாடகங்களையும் ஒலிபரப்பியுள்ளது. எஸ். ஆர். எம். பழனியப்பன், பைரோஜி நாராயணன், சி. கோன், ரெ. சண்முகம், ப. சந்திரகாந்தம் முதலிய பலருடைய நாடகங்கள் வானொலி மூலம் மக்களிடையே பரவிச் சிறப்புப் பெற்றுள்ளன.

மேடைகளிலும் வானொலியிலும் இந்த அளவாவது வளர்ந்துள்ள நாடகத் துறை, புத்தக வெளியீட்டுத் துறையில் பெரும் ஏமாற்றத்தையே தருகின்றது. பைரோஜி நாராயணனின் 'மாலதி', வாசி. பாண்டியனின் 'உரிமைப்போர்', மணிமாறனின் 'இலட்சியச் சுடர்,' மா. கு. மாணிக்கத்தின் 'கடமை வீரன்' ஆகியவையே நூலுருவில் வந்த நாடகங்கள் ஆகும்.

சிறுவர் இலக்கியத் துறையிலும் மலேசியத் தமிழிலக்கியம் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளதெனலாம். முரசு. நெடுமாறனின் 'இளந்தளிர்', 'அன்புப் பாட்டு , 'அறிவுப் பாட்டு', 'அழகுப் பாட்டு' ஆகியவை இத் துறையில் குறிப்பிடத்தக்க நூல்கள். சி. வேலுசாமியும் இத் துறையில் பல அழகிய எளிய நூல்களை வெளியிட்டுள்ளார். 'தேனீயைப்பார்!' 'பூம் பூம்', 'பழக்கம்,' 'அருள் புரிவாய்' முதலிய பல நூல்களை எழுதியுள்ள இவர், சிறுவர்களுக்காகவே 'திருமகள்' என்ற திங்கள் இதழையும் பல ஆண்டுகளாக விடாது நடத்தி வருகின்றார்.

தங்கா தமிழ்ப்பாணன், கே. எம். முருகேசன், கு. கிருஷ்ணன் ஆகியோரும் பல ஆண்டுகளாக இத் துறையில் கவனம் செலுத்தி வருகின்றனர். தங்கா தமிழ்ப்பாணனின் 'விசித்திரத் தீவுகள்', 'நமது தேசிய மலர்', 'குழந்தைக் கதைகள்' ஆகிய நூல்களும்; கே. எம். முருகேசனின் 'மணியோசை', 'இரண்டு முத்துக்கள்' ஆகிய நூல்களும், கு. கிருஷ்ணனின் 'கண்ணாடி மாளிகை', 'மஞ்சள் வீடு' ஆகியவையும் இத் துறையில் அண்மையில் வெளிவந்த குறிப்பிடத்தக்க நூல்கள்.

மலேசியத் தமிழிலக்கியத்தில் கட்டுரையும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இலக்கியக் கட்டுரைகள், அறிவியல் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் முதலிய பல்வகைக் கட்டுரைகளும் பத்திரிகைகளின் வாயிலாக வளர்ந்துள்ளன. 'முன்னேற்றம்', 'சீர்திருத்தம்', 'தமிழ் முரசு' ஆகிய இதழ்கள் நிறையச் சீர்திருத்தக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. 'தமிழ்க்கொடி', 'தமிழ்ச் சுடர்', 'மலாய் நாடு', 'பாரத மித்திரன்', 'தமிழன்' ஆகிய இதழ்களின் பணியும் இத்

துறையில் மிகுதியாக அமைந்துள்ளது. அமரர் கோ. சாரங்க பாணி, சைவப் பெரியார் கா. இராமநாதன், சீ. வி. குப்புசாமி, அ. இராமநாதன், முருகு சுப்பிரமணியம், சுப. நாராயணன், மா. செ. மாயதேவன், சி. கமலநாதன், சித்தாந்த வித்தகர் இரத்தினம் செட்டியார், ரெ. ராமசாமிப் புலவர், சேதுராமன், சா. ஆ. அன்பானந்தன் முதலியோர் இத் துறையில் குறிப்பிடத் தக்கவர்கள். 'நாதன் கண்ட நாடுகள்' இ. ஜே. ஜோன்சனின் 'கிழக்கும் மேற்கும்' ஆகிய இரண்டும் பயணத் துறையில் வெளி வந்த சிறந்த நூல்களாக விளங்குகின்றன. அப்துல் ரசீதின் 'படியுங்கள்', முருகு சுப்பிரமணியனின் 'நன்னெறி நூல் நயம்,' ரெ. ராமசாமியின் 'பாரதியின் காதலி', மா. செ. மாயதேவனின் 'மன உணர்வுகள்', ஐ. இளவழகுவின் 'மனிதனின் கதை', சா. ஆ. அன்பானந்தனின் 'நான் யார்?' ஆகியவை இத் துறையில் வெளிவந்துள்ள சில சிறந்த நூல்கள்.

மலேசியத் தமிழிலக்கியம் இவ்வாறு கடந்த ஒரு நூற்றுண்டு காலமாகப் பல்வேறு துறைகளிலும் கிளைவிட்டுப் படர்ந்து வருகிறது. தொடக்கத்தில் தமிழக இலக்கியப் போக்கினை அப் படியே பின்பற்ற முயன்றிருப்பினும், தனக்கென ஒரு புதிய இலக்கியத்தை உருவாக்கிக்கொள்ள முனையும் முயற்சியைப் பின்னர்க் காண முடிகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இம் முயற்சி அதிகமாகவே காணப்படுகிறது. இம் முயற்சியில் வெற்றிபெறத் தடைகள் சில காணப்பட்டாலும், அவற்றைத் துணிந்து கடக்க வேண்டும் என்ற வேட்கை இளைஞர் சமுதாயத்தினிடம் உள்ளது. இவ் வேட்கை செயலுருவம் பெறுவது, வாசகர்களின் ஆதரவையும் ஊக்கத் தையும் பொறுத்தே உள்ளது.

---

## வியட்னுமில் தமிழ்ப்பணி

திரு. சேதுராமன் அவர்களின் முயற்சியால் 'திருவள்ளுவர் மலர்' ஒன்று வியட்நாமில் வெளியிடப் பெற்றது. இவர் தமிழ்ப் பாடல்கள் பலவற்றை வியட்னும் மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்த்து, துண்டுப் பிரசுரங்களாக வெளி யிட்டிருக்கிறுர். பிரெஞ்சு வியட்னும் மொழிகளில், தக்கார் வாயிலாக, திருக்குறளை மொழிபெயர்க்கும் முயற்சியில் இவர் இப்போது பெரிதும் ஈடுபட்டிருக்கிறுர்.

"செட்டிநாடும் தமிழும்"

*With best compliments*
*from*

# G. R. MOTORS

**WAZIRPUR**

DELHI

With the best compliments
from:

PANDIT

BROTHERS

B-19, Industrial Area,
Wazirpur, DELHI.

# முனியம்மா

[இலக்கியக் குரிசில் மா. இராமையா, மலேசியா]

முனியம்மா இப்படியெல்லாம் நடக்குமென்று எதிர்பார்க்கவே இல்லை. மகன் பட்டணத்தில் கண்ணுக்கு அழகாக வாழும்போது தான் ஒருத்தி ஒதுங்குவதற்கு மட்டும் இடமில்லாமலா போய்விடும் என்று அவள் நினைத்தது தவருகிவிட்டது.

எப்போதும் நினைப்பதுதான் நடப்பதில்லையே!

அவள் மகன் மருதுபாண்டியனும் அவளைத் தன்னோடு வந்து விடும்படி பலமுறை சொல்லியிருக்கிருன். அவன் அழைத்தும் அவள் ஒதுங்கி ஒதுங்கிப் போனதற்குக் காரணம் என்ன? அவள் இத்தனை காலமாக வேலை செய்து வந்த புளுவேலி தோட்டத்தில் அவளுக்கு எந்தத் தொல்லையும் இல்லை.

அதைத் தவிர அந்தத் தோட்டத்தின் மீது அவளுக்கு ஒரு தனியான பற்றும் இருந்தது. அது ஒரு ராசியான தோட்டம் என்பது அவள் எண்ணம். அவளுடைய மூத்த மகன் மருது பாண்டியனும் இளையமகன் செல்லப்பாண்டியனும் அந்தத் தோட் டத்தில்தான் பிறந்தனர். முனியம்மா அடுத்தடுத்து இரண்டு ஆண் குழந்தைகளை ஈன்றெடுத்தபோது தோட்டத்து மக்களின் கண்ணேறு அவள் மீது விழுந்து விட்டது.

எல்லாரும் ஒருமித்துக் "கரித்துக் கொட்டிய" போது பக்கத்து வீட்டுப் பாவாயி மட்டும் அவளுக்கு ஆதரவாக இருந்தாள்.

"இவளுங்களுக்கு ஏன் இவ்வளவு வயிற்றெரிச்சல்? மணி யான ரெண்டு பிள்ளையைப் பெத்துட்டான்னு வெதும்பிச் சாகு ருளுங்க. இவளுங்களும் பெத்துக்க வேண்டியது தானே?" என்று கேட்பாள்.

எல்லாருடைய எண்ணம் போலவே மருதுபாண்டியனும் செல்லப்பாண்டியனும் மணியான பிள்ளைகளாகவே தோன்றினர்.

விளையும் பயிர் முளையில் என்பார்கள்! அவர்கள் இருவரும் அந்தத் தோட்டத்துப் பிள்ளைகளிலேயே தனித் தன்மையோடு கல்வியில் முன்னணியில் நின்றனர். தோட்டத்துக் கிராணிமார்களின் விருப்பப்படியே இருவரும் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். அங்கும் அவர்கள் திறமை பளிச்சிட்டது.

அதில் கூடப் பலருக்குப் பொருமை !

"ஆசைன்னு அதுக்கும் ஓர் அளவு இருக்கணும். முனியம்மா வுக்கு வந்திருக்கிற ஆசை - பேராசை! தன் மகன்கள் என்னவோ பெரிய ஆபீசரா ஆகணும்னு கனவு காணுரு" என்று வாய் விட்டுச் சொல்ல முடியாதவர்கள் உள்ளுக்குள் வைத்துப் புழுங்கினர்.

மருதுவும் செல்லாவும் மேல் வகுப்பில் படித்துக் கொண் டிருந்தபோது அவர்களுடைய தந்தை கண்ணையா மாரடைப்பால் காலமாகி விட்டார். முனியம்மாவுக்கு உலகமே இருண்டு விட்டது போலாகி விட்டது. என்ன செய்வதென்று புரியாமல் தவித்துப் போனுள். பிள்ளைகள் இருவரையும் பள்ளியிலிருந்து நிறுத்தி விடலாம் என்ற எண்ணங்கூட அவள் மனதில் தோன்றியது.

"இதோ பாரு முனியம்மா...நீ வேணுமாஞ என் வீட்டிலே சாப்பிட்டுக்க. உனக்குக் கிடைக்கிற சம்பளத்தைக் கொண்டு இரண்டு பையன்களையும் தொடர்ந்து படிக்கவை" என்று தைரிய மூட்டினுள் பாவாயி.

தன் பிள்ளைகள்தான் சோடையாகப் போய் விட்டார்கள். ஆர்வத்தோடு படிக்கிற பிள்ளைகளாவது முன்னுக்கு வரட்டுமே என்ற நல்ல மனது அவளுக்கு.

ஆதரவு தருகிருளே என்பதற்காக அவள் சொன்னபடியே முனியம்மா நடந்து கொள்ளவில்லை. தன்னுல் முடிந்த அளவு வயிற்றை வாயைக் கட்டி அவர்களைப் படிக்க வைத்தாள்.

அவளுடைய இலட்சியம் ஈடேறி விட்டது.

ஆனுல், அவளுடைய உடல் நிலை மிகவும் பாதிப்புக்குள் ளாகியது. ஐம்பது வயதைத் தாண்டுவதற்குள் அறுபது வயதைக் கடந்து விட்டது போன்ற சோர்வும் களைப்பும் அவளை ஆட்கொண்டு விட்டன. அவளால் முன்புபோல் சரிவர வேலை செய்ய முடிய வில்லை. மாதத்தில் பத்து நாட்கள் வேலைக்குப் போவதே அரிதாகி விட்டது.

தோட்ட நிர்வாகம் அவளை வேலையை விட்டு நிற்கும்படிச் சொல்லி விட்டது. அதற்காக முனியம்மா மனங் கலங்கவில்லை. அவளுக்கு என்ன சுமை இருக்கிறது? பிள்ளைகள் இருவரும் படித்து வேலையிலும் அமர்ந்து விட்டனர். இனி யாருக்காக உழைக்கப் போகிறாள்.

"ஏன் முனியம்மா... இத்தனை காலம் வாழ்ந்துவிட்ட இந்தத் தோட்டத்தை விட்டுப் போக உனக்கு எப்படி மனம் வருது? தொரைதான் இருக்க வீடு தர்றேன்னு சொல்றாரே. இங்கேயே இருந்துவிட வேண்டியதுதானே?" என்றாள் பாவாயி.

"இருந்திடலாம் பாவாயி... சாப்பாட்டுக்கு என்ன பண்றது?" முனியம்மா கேட்டாள்.

"நாங்களெல்லாம் இல்லையா?... உன்னை அப்படியா அனாதையா விட்டுடுவோம்" என்றாள் பாவாயி.

பாவாயி சொல்கிறது போலவே நடக்குமென்று அவளுக்குத் தெரியும். ஆனால், ஊர் உலகம் என்ன சொல்லும்? சிங்கம் போல இரண்டு பையன்களைப் பெற்றாள். இப்போது வீடு வீடாகக் கையேந்தி நிற்கிறாள் என்று சொல்லமாட்டார்களா?

முதன் முதலில் முனியம்மா செல்லப்பாண்டியன் வீட்டுக்குத் தான் போக வேண்டும் என்று நினைத்தாள். அவனுடைய மனைவி சீனப் பெண். முனியம்மாவுக்கும் அவளுக்கும் மொழிப் பிரச்சினை உண்டு. முன்பு இரண்டு முறை அங்குப் போனபோது மொழி புரியாமல் இருவருக்கும் தகராறே வந்து விட்டது.

கடைசியாக அவள் மருதுபாண்டியன் வீட்டுக்கே போக முடிவு செய்து விட்டாள். அவன் மனைவி தமிழ்ப் பெண். இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிக் கொஞ்சம் குடும்ப அனுபவம் பெற்றவள்.

செல்லப்பாண்டியனைவிட மருதுபாண்டியன் கொஞ்சம் சிறப்பாகவும் வாழ்கிறான்.

மாடி வீடு. நான்கைந்து அறைகள். இரண்டு கார்கள். அமைதியான சுற்றுப் புறம். வேலைக்காரிக்கெனத் தனி அறை. வீடு முழுவதும் தராசோ போடப்பட்ட வழவழப்பான தரை. அதில் பாதங்களை ஊன்றி நடக்கவே சுகம்.

முனியம்மா அங்கு வந்ததில் மருதுபாண்டியனின் மனைவி மதுபாலாவுக்கு அவ்வளவு திருப்தி இல்லை. மிக நாகரிகமான அந்த வீட்டுக்கு அவள் ஒரு ''திருஷ்டி பரிகாரமாக'' அவளுக்குத் தோன்றியது.

காலியாகக் கிடக்கும் அறைகளில் ஒன்றைத் தன் தாயாருக்குக் கொடுக்க வேண்டும் என்று மருதுபாண்டியன் சொன்னபோது ''வேலைக்காரி அறைதான் குசுனிக்குப் பக்கத்திலே காலியா கிடக்கே, அதை ஒழிச்சிக் கொடுத்தா போதாதா?'' என்று முகத்தை ஒரு முழம் தூக்கிக் காட்டினாள் மதுபாலா.

அந்த ஒரு நிகழ்ச்சியிலேயே இரண்டு பேருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதை முனியம்மா புரிந்து கொண்டாள்.

''இந்தத் தள்ளாத வயதிலே அடிக்கடி என்னால மாடிப்படி ஏறி இறங்க முடியாதுப்பா. இந்த அறைதான் எனக்குச் சௌகரியமா இருக்கும்'' என்று தான் கொண்டு வந்திருந்த டிரங்க் பெட்டி, கிழிந்த பாய் தலையணை அனைத்தையும் கொண்டுபோய் ''சர்வெண்ட்'' ரூமில் வைத்து விட்டு வந்தாள்.

மதுபாலாவின் கெடுபிடி தாங்க முடியாமல் ஒரு மாதத்திற்கு முன்புதான் வேலைக்காரி வேலையை விட்டுப் போய்விட்டாள். இப்போது ஒரு நடுத்தர வயது மலாய்க்காரி காலையில் வந்து மாலையில் போய்க்கொண்டிருந்தாள்.

முனியம்மாவுக்கு அவ்வளவாக மலாய் தெரியாது. அவள் முனியம்மாவிடம் ஏதாவது சொல்ல வேண்டுமானால் மருதுபாண்டியனின் மூத்த மகன் முரளியைத்தான் தேடவேண்டும். அவனுக்கு வயது ஏழுதான். மலாய் நன்றாகப் பேசுவான். அவன் தங்கை அமுதாவுக்கு வயது ஐந்து. இன்னும் கிண்டர்கார்டனுக்கே போகவில்லை.

மதுபாலா வீட்டில் இல்லாத நேரங்களில் அவளுடைய இரண்டு குழந்தைகளையும் வேலைக்காரிதான் பார்த்துக்கொள்ள வேண்டும். காலையில் பள்ளிக்குச் செல்லும் அவள் பிற்பகல் ஒரு மணிக்குத்தான் இல்லம் திரும்புவாள். அவள் ஓர் ஆசிரியை. மருதுபாண்டியனைப் போல் கைநிறையச் சம்பாதிக்கிறாள். அவளுக்கென ஒரு காரும் உண்டு.

அவள் ஒரு செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவள். மருதுபாண்டியன் அவளை மணந்துகொண்ட போது அவள் தந்தை

அவளை வெறுங்கையுடன் அனுப்பி வைக்கவில்லை. இலட்சம் வெள்ளி பெறுமானமுள்ள அந்த வீட்டை அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

கணவன் மனைவிக்கு இடையே சுமுகமான உறவு இருந்த போதிலும் மதுபாலாவின் வார்த்தைகள்தாம் எப்போதும் எடுப்பாக முன் நிற்கும்.

முனியம்மாவுக்கு இடம் ஒதுக்கிய மதுபாலாவே அவளுக்கெனச் சாப்பாட்டுத் தட்டு ஒன்றும் கண்ணாடிக் கோப்பை ஒன்றும் கொண்டு வந்து கொடுத்தாள். சாப்பாடும் அவளுக்குத் தனிதான். அதுவும் அவளுடைய அறைக்கே போய்விடும்.

"அப்பா!...அப்பா!...அந்த சர்வெண்ட் ரூமிலே ஒரு கிளவி இருக்காங்களே அது யாருப்பா" என்று மருதுபாண்டியனிடம் அமுதா கேட்டாள்.

"அது கிழவி இல்லேம்மா...அதுதான் உன் பாட்டி" என்ருன் மருதுபாண்டியன்.

"பாட்டியா?...அம்மா கிளவினுல்லே சொல்ராங்க"

"அம்மாவுக்குத் தெரியாது. நீ பாட்டின்னுதான் கூப்பிடணும்" என்ருன் மருது.

"சரிப்பா" என்று தலையை ஆட்டிவிட்டுச் சமையலறைப் பக்கம் ஓடினுள் அமுதா. அப்போதுதான் முனியம்மா வெற்றிலை பாக்கு இடித்துக்கொண்டிருந்தாள்.

"பாட்டி, பாட்டி என்ன பாட்டி இடிக்கிறே?" என்று கேட்டுக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தாள் அமுதா.

"வெத்திலே இடிக்கிறேம்மா." சொல்லிவிட்டு மீண்டும் 'டொக்...டொக்...' என்று இடித்தாள் முனியம்மா.

அமுதாவுக்கு அது ஒரு புதுமை! அருகிலேயே உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அமுதா முனியம்மாவின் அறைக்குப் போவதும் அவளுடன் விளையாடுவதும் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதும் மதுபாலாவுக்குக்

கட்டோடு பிடிக்கவில்லை. அவளைப் பார்க்கும் போதெல்லாம் முகத்தைச் சுளித்துக் கொள்வாள். ஏதோவொரு கொடூரமான நோயாளியைப் பார்ப்பது போன்றிருக்கும் அவளுக்கு. முதலில் முனியம்மா அந்த வீட்டுக்கு வந்ததே பிடிக்கவில்லை. அதனைத் தன் கணவனிடம் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் மென்று விழுங்கிக்கொண்டிருந்தாள்.

மதுபாலாவின் தோழிகள் வந்திருக்கும் போது முனியம்மா தப்பித் தவறி கூடத்துப் பக்கம் தலைகாட்டிவிட்டால் போதும் முகத்தை "உர்"ரென்று வைத்துக்கொள்வாள்.

தோழிகள் முனியம்மாவைக் காட்டி யாரென்று கேட்டால் சட் டென்று பதில் சொல்லமாட்டாள். ஒருமுறை அவளுடைய தோழி ஒருத்தி யாரென்று கேட்டபோது "போக்கிடம் இல்லாத அனாதை" என்று சொல்லி வைத்தாள்.

மதுபாலாவின் போக்கு மருதுபாண்டியனுக்குப் புரிந்தது. தன் தாயார் உடம்பை வருத்தித் தன்னையும் தன் தம்பியையும் படிக்க வைத்ததை அவனால் இலகுவில் மறந்துவிட முடியவில்லை.

அவனுடைய தந்தை இறந்தவுடன் "என்னுடைய வருமானம் போதலே. நீங்க ரெண்டு பேரும் வேலைக்குப் போங்கன்னு" முனியம்மா சொல்லியிருந்தா இந்த வாழ்வு அவர்களுக்குக் கிடைத் திருக்குமா? வீடு, கார், வேலைக்கு ஆள் என்று சொகுசான வாழ்க்கையைத்தான் அமைத்துக்கொண்டிருக்க முடியுமா?

தன் தாயாரின் தன்னலமற்ற மனப்பான்மையை எண்ணிப் பார்த்தான். அவன் கண்களில் நீர் தேங்கிவிட்டது.

மதுபாலா நடந்துகொள்ளும் விதம் தன் தாயாரின் மனத்தைப் புண்படுத்தியிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். அதற்காக அவளைக் கண்டிக்கும் தைரியம் மட்டும் அவனுக்கு வரவில்லை.

"அமுதா." மதுபாலா கூப்பிட்டாள்.

"இங்கேதாம்மா இருக்கேன்." முனியம்மாவின் அறையி லிருந்து ஓடிவந்தாள் அமுதா.

"எங்கேடி போயிருந்தே?" அதட்டலாகக் கேட்டாள் மதுபாலா.

''பாட்டி கிட்டே போயிருந்தேம்மா''

பளார் என்று ஓர் அறை!

''பாட்டியாம், பாட்டி...போக்கிடம் இல்லாத அனாதைக்கெல்லாம் இங்கே இடம்...'' மீண்டும் கையை ஓங்கினாள் மதுபாலா.

பொசுக்கென்று உள்ளே வந்த மருதுவின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழுந்துவிட்டன. சமையற்கட்டிலிருந்து கூடம் வரை வந்துவிட்ட முனியம்மாவின் காதுகளிலும் அந்த வார்த்தைகள் விழுந்திருக்க வேண்டும்.

''மது!......அமுதாவை ஏன் அடிக்கிறே?'' மருதுபாண்டியன் கேட்டான்.

''என் பிள்ளையை அடிக்க எனக்கு உரிமை இல்லையா?'' அமுதாவை இழுத்துக்கொண்டு அறைக்குள் போய்விட்டாள் மதுபாலா.

அன்றிரவு மாடியில் மதுபாலாவுக்கும் மருதுபாண்டியனுக்கும் தகராறு. காரசாரமான வார்த்தைகளை மதுபாலா உதிர்த்துக் கொண்டிருந்தாள். இடையிடையே முனியம்மாவின் பேச்சும் அடிபட்டதிலிருந்து தன்னை வைத்துத்தான் தகராறு வளர்ந்துள்ளது என்பதை அவள் ஊகித்துக்கொண்டாள்.

அவள் மனத்திலே வேதனை.

இதெல்லாம் அவள் எதிர் பாராத சோதனைகள்.

''மணியா ரெண்டு பையன்களைப் பெற்றிருக்கிற நீ செல்லச் சாப்பாடு சாப்பிடு'' என்று பலர் வாழ்த்தின வார்த்தைகள் பொய்த்துவிட்டன.

மறுநாள் படுக்கையை விட்டு எழுந்த மருதுபாண்டியனும் மதுபாலாவும் பேசிக்கொள்ளவில்லை. ஆளுக்கொரு திசையில் சென்றுவிட்டனர்.

---

இந்தப் போக்கு ஒருவாரம் வரை நீடித்தது. முனியம்மாவின் மனத்தில் துயரச் சுமை கூடுகட்டிவிட்டது. தன் ஒருத்தியால் அந்தக் குடும்பத்தில் அமைதி குலைவதா?

அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

முனியம்மா வரும்போது கொண்டுவந்திருந்த படுக்கை பாயெல்லாம் நாகரிகமாக இல்லையென்று என்றோ கழித்தாயிற்று. இப்போது எஞ்சியிருப்பதெல்லாம் அந்த 'டிரங்க்' பெட்டி ஒன்று தான்.

முனியம்மா அதனை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

"அம்மா!......எங்கேம்மா போறே?" மருதுபாண்டியன் கேட்டான்.

முனியம்மாவின் கண்கள் கலங்கிவிட்டன. அவனும் கண் களைத் துடைத்துக்கொண்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்ணீர் அவளது மேலாடையை ஈரப்படுத்தியது.

"அம்மா!......இந்தாம்மா. இதை வச்சிக்க." ஒரு பத்து வெள்ளி நோட்டை அவளிடம் நீட்டினான்.

முனியம்மா அவனையும் அந்த நோட்டையும் மாறி மாறிப் பார்த்தாள். தான் கையில் பிடித்திருந்த டிரங்க் பெட்டியைக் கீழே வைத்துவிட்டுத், தன்னுடைய வெற்றிலை பாக்குப் பையைப் பிரித்து அதிலிருந்து இரண்டு சிவப்பு நோட்டுகளை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"அம்மா!!......"

"நான் இன்னிக்கோ நாளைக்கோ சாகப்போறவ. என்னைப் பற்றிக் கவலைப் படாதேப்பா. நீ புள்ளைகுட்டிக்காரன். உனக்குப் பணம் தேவைப்படும் வச்சிக்க" பெட்டியை எடுத்துக்கொண்டு நடந்தாள்.

மருதுபாண்டியனின் நெஞ்சிலிருந்து வெடித்து எழுந்த அழுகையை அவனால் நிறுத்தமுடியவில்லை.

Attention
P V C PROCESSORS
Recession?

Then why not reduce
your cost with
Indo-Nippon's new range
of Plasticizers

INDOFLEX
INDOFLEX-M
PLASTICIZERS-N
DI-OCTYL ADIPATE

★ for superior cold flex temperature,
★ improved plasticizer efficiency,
★ colour stability, reduced viscosity, etc.
Also available DOP, DIDP, DBP, DMP,
DEP, etc.,

Indo-Nippon
Chemical Company Limited

*Maker Bhavan No. 2,*
*18, New Marine Lines,*
BOMBAY-400 020.

Tel. No. 251897

With the best compliments
from

ELOFIC
INDUSTRIES
(INDIA)

DELHI

# ஏ!

[திரு. வெ. ஆறுமுகம், மலேசியா]

இருள்பிறக்கும் அடவிநடு வேகிணற்றில் பிறந்துவளர்ந்
திருந்தஒரு சிறிய தவளை
இமிழ்கடலைத் தன்கிணற்றின் இயல்பினதாய் அளவினதாய்
எண்ணியுரை செய்த செயலாய்
மருள்பிறங்கும் புல்லியவோர் மதியீனன் எலாமறிந்த
மாமேதை என்ற நினைவில்
மன்றங்கள் ஏறிநின்று வாய்கொழுத்து நாத்திகமே
மட்டின்றிப் பேசி யலைந்தேன்!
அருள்பிறங்கும் மறையேத்தும் ஆண்டவனை இல்லையென்றே
ஆர்ப்பரித்த பேதை இவனே!
அண்டரண்டம் எல்லாரும் ஆட்டுவிக்கும் சுத்தரசே!
ஆலமர்ந்த பரம சிவனே!

நாள்விளங்க எழுந்துவரும் ஞாயிற்றைப் பார்த்திந்த
நாய்குரைத்த குரைப்பும் குறைவோ!
நலம்விளங்க ஒளிபொழியும் நன்னிலவைப் பார்த்திந்த
நரியிட்ட ஊளை குறைவோ?
கோள்விளங்க ஓங்கிநிற்கும் கொடுமுடியைப் பார்த்திந்தக்
கூகையெள்ளி நகைத்த திலையோ?
கோவிளங்க முகில்வளர்க்கும் குரைகடலைப் பார்த்திந்தக்
கூன்புழுவும் சிரித்த திலையோ?
தோள்விளங்க மார்தட்டித் தொல்சமயம் இறைக்கொள்கை
'தூ'வென்ற பேதை இவனே!
துடிவிளங்க அண்டரண்டம் தொடர்ந்தாட்டும் கூத்தரசே!
துகளறுக்கும் பரம சிவனே!

முற்றாத சிற்றறிவு முகிழ்க்காத பிள்ளைமனம்
முதிராத சிறிய வயதில்
முற்றாகப் பொய்ந்நூல்கள் முப்போதும் கற்றறிந்து
முழுமூடன் ஆன பொழுதில்

வற்ருத உளக்குழியாய் மனம்மாற, ஆணவமும்
வந்தேறி நின்ற தருணம்
வரையின்றி நாத்திக வாதங்கள் செய்துநல்லோர்
மனம்கீண்டு மகிழ்ந்த தருணம்
பற்ருத வழிபற்றிப் பரம்பொருளைச் சிலர்மறக்கப்
பாதைசொன்ன பேதை இவனே!
பந்தாக அண்டரண்டம் பார்த்தாட்டும் கூத்தரசே!
பாடகற்றும் பரம சிவனே!

நனிகற்ற அறிஞர்கள் நயந்துரைக்கும் மொழிகேட்டு
நான்நகைத்த நாட்கள் மிகுதி:
நாய்கெட்ட கேட்டுக்கு நற்கவிஞன் எழுத்தாளன்
நாவல்லான் என்ற தகுதி!
நுனிகற்ற சிற்றறிவால் நூலெல்லாம் கற்றதுபோல்
நூறுமுறை வேடம் புனைந்தேன்!
நோய்பெற்ற உள்ளத்தால் நுவலரிய சைவத்தை
நோயென்று சொல்லி யலைந்தேன்!
இனிதுற்ற தெய்வத்தை இல்லைஇல்லை இல்லையென
இழித்துரைத்த பேதை இவனே!
இவ்வுலகம் அவ்வுலகம் எலாம்நடத்தும் கூத்தரசே!
இடர்நீர்க்கும் பரம சிவனே!

---

## பைபிளும் திருவாசகமும்

A broken and a Contrite heart
O God thou will not despise (Psalms 51-17)

"ஏசினும், யான் உன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதி கண்டாய்."

நீத்தல் விண்ணப்பம்–50

WITH BEST COMPLIMENTS
FROM

A
WELL
WISHER

With best compliments from:

**PERFECTPAC LIMITED**

Paper Division

1010, Ansal Bhavan

16, Kasturba Gandhi Marg

NEW DELHI - 110 001.

Grams: RAJGARHIA

384973
384974

# ஈழத்தில்
# இலக்கியத் திறனாய்வு

[பேராசிரியர் க. கைலாசபதி, இலங்கைப் பல்கலைக்கழகம்]

ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கலையின் வரலாற்றைச் சிந்திக்கத் தொடங்கும் ஒருவர், தவிர்க்க இயலாத வாறு ஈழத்திலே தமிழிலக்கியம் தோன்றி வளர்ந்து வந்த வரலாற்றை ஆதாரமாய்க் கொள்ள வேண்டியவ ராகிறார். ஏனெனில், இலக்கியம் தோன்றியதையடுத்து இலக்கியத் திறனாய்வும் தோன்றுகிறது, என்பது பொதுவிதியாகும். பழங் காலத்திலே இலக்கணத்தைப் பற்றிக் கூறப்பட்டது கொள்கை யளவில் திறனாய்விற்கும் பொருந்தும் எனலாம்.

எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்

என்பது பழைய வாக்கு. இலக்கிய ஆக்கத்தை அடுத்துப் பின் தொடர்ந்து திறனாய்வும் எழுகின்றது.

எனினும் நவீனகாலத்திலே 'திறனாய்வு' என்னும் சொல் குறிப்பதையே முற்காலத்தினும் இலக்கண நூல்கள் குறித்தன என்பதற்கில்லை. பண்டைக் காலத்தில் அணியிலக்கணம் திறனாய்வின் ஒரு பகுதியையே சிறப்பாக ஆராய்ந்தது; உவமை, உருவகம் முதலியன செய்யுளுக்கு அழகு செய்வனவாய்—மெரு கூட்டுவனவாய்—அமைவன என்பதே அணியிலக்கணத்தின் அடிப்படைக் கருத்தாகும். அதற்கியைய அணிகளை நுணுக்கமாக வகுத்தமைத்தனர் அணியிலக்கண நூல் ஆசிரியர்கள். ஆனால், இன்று நாம் திறனாய்வு எனக்கருதுவது அணியிலக்கணத்தை மட்டுமன்று. அழகைச் சுவைப்பதுடன், அதனோடு பிரிக்க இய லாதவாறு பிணைக்கப்பட்டிருக்கும் செய்திகளையும் சிந்தனைகளையும் கருத்துருவங்களையும் கண்டுகொள்வதும் அவற்றை மதிப்பிடு வதும் அவற்றுக்கு விளக்கம் உரைப்பதும் திறனாய்வின் பண்பும் பயனும் ஆகும். முற்காலத்தில் அணியிலக்கணம் விதி முறையில் அமைந்தது எனக்கொண்டால் இன்றைய திறனாய்வு

விவரித்து விளக்கும் முறையைப் பற்றுக்கோடாய்க் கொண்டது என்பதில் தவறில்லை.

ஆயினும், இலக்கண நூல்களுக்குப் பின்னர் வந்த உரையாசிரியர்கள், விதிகளுக்கு ஏற்ப நூல்கள் அமைந்திருக்கும் தன்மையை விவரிக்க முனைந்தவிடத்து, விதிவிலக்குகளுக்கு ஆதரவு கூறுமுகமாக இலக்கிய வழக்கு, காலமாற்றம், நாட்டு வேறுபாடு, தத்துவச்சார்பு முதலிய செய்திகளை எடுத்துக்கூற வேண்டியவராயினர். நச்சினார்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களின் எழுத்துக்களிலே இப் பண்பைக் காணுதல் கூடும். இக்காலத் திறனாய்வாளரது முன்னோடிகளாக இவர்களைக் குறிப்பிடுதல் அத்துணைப் பொருத்தமல்லவாயினும், காலம், நாடு, வழக்காறுகளுக்கு இயைய இலக்கியத்தில் மாற்றங்கள் உண்டாகின்றன என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர் எனலாம்.

இப்பொழுது நியதியையும் வளர்ச்சிப் போக்கையும் மனங்கொண்டு ஈழத்திலே திறனாய்வுக்கலை வளர்ந்திருக்குமாற்றைச் சுருக்கமாக விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது இடைக்கால உரையாசிரியர் மரபு எமது நாட்டிலும் செழித்து வளர்ந்து வந்திருப்பதை மறுப்பார் இலர். ஈழநாட்டு உரையாசிரியர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரித்தால் அம் மரபின் வரன்முறையையும் உள்ளூரத்தையும் தெரிந்துகொள்ளலாம். இத்தகைய முயற்சிக்கு எடுத்துக்காட்டாக மா. பீதாம்பரன் எழுதிய "ஈழநாட்டு உரையாசிரியர்கள்" (கணேசையர் நினைவுமலர் 1960) என்னும் கட்டுரையைக் குறிப்பிடலாம். சித்தியாருக்கு உரைகண்ட ஞானப்பிரகாச முனிவரிலிருந்து சங்கநூற்செல்வர் சு. அருளம்பலவனார் வரை இம் மரபு குறிப்பிடத்தக்க விதத்தில் ஈழத்தில் நீடித்துள்ளது. ஆயினும், பழைய இலக்கண சாத்திர நூல்களை எடுத்துக்காட்டாய்க் கொண்டு நூல்களை எடைபோடும் முறையையன்றி நவீன வாழ்வியலையும் கருத்தோட்டங்களையும் உரைகல்லாகக்கொண்டு புதிய ஆக்கங்களைப் பகுத்தாயும் திறனாய்வு நெறியையே இவ்விடத்திற் சிறப்பாக நாம் நோக்குதல் தகும்.

பண்பு நலன்களையும் கால அடைவையும் அடிப்படைகளாய்க் கொண்டு பார்த்தால் மூன்று முக்கியமான திறனாய்வுப் போக்குகள் இருபதாம் நூற்றாண்டிலே கிளைத்தெழுந்துள்ளமை புலனாகும். ஈழத்திற்கு மாத்திரமின்றித் தமிழ்நாட்டிற்கும் இப்பொழுது வளர்ச்சிப்போக்கு இயைபுடையதாகும். இது குறித்து இலக்கியமும்

திறனாய்வும் (சென்னை 1976) என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

முதலாவது பிரிவைச் சேர்ந்தோர் நாம் மேலே குறிப்பிட்ட உரையாசிரியர் மரபின் நவீன பிரதிகளேயாவர். இலக்கண இலக்கிய சாத்திர நூல்களிலே தமக்குள்ள பயிற்சியையும் பாண்டித்தியத்தையும் துணைக்கொண்டு, பெரும்பாலும் முற்கால நூல்களுக்கு விளக்கம் எழுதி அவற்றின் சிறப்பியல்புகளைப் பாராட்டி உரைப்போர் இப் பிரிவிற்குள் அடங்குவர். இத்தகைய இலக்கிய ஆய்வை, 'மரபுவழித்திறனாய்வு' அல்லது 'பண்டிதமுறைத் திறனாய்வு' என்று விவரித்தல் சாலும். இத்தகைய ஆய்வுகளின் பயனாக வெளிவரும் நூல்களைப் 'புதுவிளக்க' நூல்கள் என்றும் கூறலாம். சி. கணேசையர், வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், விபுலானந்த அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார் முதலியோர் அவ்வப்போது எழுதியுள்ள நூல்களையும் கட்டுரைகளையும் இவ்வாய்வு முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாய்க் கருதலாம். ஆயினும் விபுலானந்த அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் வேறுபட்ட அணுகுமுறைகளையும் கையாண்டிருக்கின்றனர், என்பதும் நினைந்துகொள்ள வேண்டியதொன்று; அதாவது கணபதிப்பிள்ளை அவர்கள் வைதிகசமயநெறி நின்று கலை இலக்கியங்களைச் சீர்தூக்கி ஆராய்பவர். காட்டாக சமயக்கட்டுரைகள் (1961), கந்தபுராணம் தக்ஷகாண்டம் உரை (1967), என்பவற்றைக் கூறலாம். அதேவேளையில் தற்சார்பான முறையிலும் சிலபல கருத்துக்களைக் கூறுவார். அவரது தனித்துவம் அது. இலக்கியவழிகந்தபுராண போதனை முதலிய நூல்களில் நவீன திறனாய்வுப் போக்கின் சாயலை ஆங்காங்குக் காணலாம். அவரது ஆளுமையின் தனிச்சிறப்பு என்றும் இதனைக் கூறலாம். பண்டிதர் க. வீரகத்தியின் எழுத்திலும் இப் பண்பினைக் காணலாம்.

இரண்டாவது பிரிவினர், முதற் பிரிவினருடன் சில செய்திகளில் ஒற்றுமையுடையவரெனினும், பழைய நூல்களையேயன்றி, புதிய இலக்கியங்களையும் தழுவிக்கொள்வதில் வேறுபடுகின்றனர். அதுமட்டுமன்று. முதற்பிரிவினர் ஒழுக்கம், சமய நம்பிக்கை முதலியவற்றுக்கு ஆதரவாகவும் துணையாகவுமே இலக்கியத்தைக் கொள்வர்; இலக்கியத்தை அதனளவில் முக்கியமானதாய் அவர்கள் கருதுவதில்லை. ஆனால், இரண்டாவது பிரிவினரோ இலக்கியச் சுவையையும் அதனாற் பெறப்படும் உணர்ச்சிகளையும் தம்மளவில் முக்கியமானவையாய்க் கருதுவர். வேறுவிதமாகக் கூறுவதாயின் அறநோக்கையே முதன்மைப்படுத்துபவர்கள்

அல்லர் இப் பிரிவினர். இவர்களைச் சுவையுணரும் நோக்குத் திறனாய்வாளர் என விவரித்தல் பொருத்தமாகும். குழு முயற்சிகளும் இதில் அடங்கும். தமிழ்நாட்டிலே டி. கே. சி. வழிவரும் இப் போக்கினை பி. ஸ்ரீ, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். மகராசன், ல. சண்முகசுந்தரம், மீ. ப. சோமசுந்தரம், கு. கோதண்டபாணிப்பிள்ளை, கு அழகிரிசாமி முதலியோர் எழுத்துக்களிலே துலக்கமாய்க் கண்டுகொள்ளலாம். இதன் மனங்கவரும் வடிவத்தை கி. வா. ஜகந்நாதன் போன்றோர் விளக்கி வெளிப்படுத்தியுள்ளனர்.

முதலாவது பிரிவினருக்கும் இவர்களுக்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. விபுலானந்த அடிகள் தவிர முதற்பிரிவைச் சேர்ந்தோருக்கு மேனாட்டு இலக்கியத்தில் நேரடிப் பழக்கம் குறைவு. இரண்டாவது பிரிவிலே அடங்குவோரில் பெரும்பாலானோருக்கு, மேனாட்டு இலக்கியங்களில் (மொழிபெயர்ப்புக்கள் மூலமாகவேனும்) போதுமான பழக்கமுண்டு, அதனால் ஆங்கில இலக்கியங்களிலிருந்து அவ்வப்போது ஒப்புமை காட்டுதல் இவர்கள் எழுத்துக்களிற் காணும் ஒரு தனிப் பகுதி ஆகும்.

சமூகவியல் வகையிற் கூறுவதாயின், ஈழத்திலே 1930 ஆம் ஆண்டையடுத்த காலப்பகுதியில் இடைத்தர மக்களிடையே விரைந்து வளர்ந்த அரசியல் அக்கறைகளுக்கு ஒப்பாகத் தமிழிலக்கிய ஆர்வமும் தலைதூக்கியதெனலாம். இதற்குரிய பொருளியல் சமூகக் காரணிகளை விரித்துரைத்தல் இவ்விடத்தில் இயலாததொன்று. கல்வி இலாகாவுடனும் கல்லூரிகளுடனும், குறிப்பாக ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த சிலரே, இரசனைமுறைத் திறனாய்வு ஈழத்தில் வேரூன்றி வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினர் எனலாம். க. ச. அருள்நந்தி, தி. சதாசிவஐயர், அ. வ. மயில்வாகனன், மா. பீதாம்பரன் முதலியோருடன் சி. கணபதிப்பிள்ளை அவர்களும் சேர்ந்துழைக்கும் சூழ்நிலையொன்று இருந்தது. ஏறத்தாழ இக்காலப் பகுதியிலேயே தமிழ்நாட்டில் டி. கே. சி. குழுவினர் வட்டத்தொட்டியினர் தமிழிலக்கியப் பரப்பில் இடைக்காலக் கவிஞர்கள் சிலரையும் பாரதி, தேசிகவிநாயகம் பிள்ளை முதலிய மறுமலர்ச்சிக் கவிஞரையும் வேறு சில நூல்களையும் விளக்கமுறச் செய்து வந்தனர். கம்பராமாயணத்திலே தேர்ந்தெடுத்த செய்யுள்களிலும் இக் குழுவினருக்குச் சிறப்பான ஈடுபாடு இருந்தது. இப் போக்கிற்கு ஒப்பவே கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழத்துக் கவி

மரபில் வரும் சின்னத்தம்பிப் புலவர் போன்ற இடைக்காலத்தவர் சிலரையும் சோமசுந்தரப்புலவர் போன்ற புதியவர்களையும் கவி மன்னர்களாக அரியணையில் ஏற்றினர். அண்மைக் காலத்தில் கனக செந்திநாதன் வெளியிட்ட கடுக்கனும் மோதிரமும், திறவாதபடலை ஆகிய சுவைமிக்க நூல்கள் இம்மரபில் வருவனவே. 1935 ஆம் வருடத்திலே கல்வியதிகாரியாயிருந்த க. ச. அருள் நந்தி அவர்களது தூண்டுதலின் பயனாகப் பிள்ளைப்பாட்டு என்னும் குழந்தைப்பாடல் தொகுதி வெளிவந்தது. புதிய பாடல்களை இயற்றவும் அவற்றைக் கற்பிக்கவும் சுவைக்கவும் அம் முயற்சி பெருந்தூண்டுதலாய் அமைந்தது என்பதில் ஐயமில்லை. இது தொடர்பாக நான் எழுதியுள்ள "தமிழில் குழந்தைக் கவிதைகள்- ஒரு மதிப்பீடு" (கலாமதி, 1971) என்ற கட்டுரை ஊன்றி நோக்கத்தக்கது. யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் வெளியிட்ட வெள்ளிவிழா மலரிலே (1950) பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதியிருந்த "இலக்கிய இன்பம்" என்னும் கட்டுரையும், அருள்நந்தியின் "இலக்கியச் சுவை" என்னும் கட்டுரையும் அடிப்படையில் சுவையுணர்முறைத் திறனாய்வுக்குக் கோட்பாட்டு விளக்கம் அளிப்பனவாய் அமைந்தன. பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளையின் கட்டுரைகளும் இந்த நேரத்திற் குறிப்பிடப்பட வேண்டியன.

இரண்டாவது பிரிவினரிற் பலர் ஆங்கிலப்புலமை உடையரா யிருந்தபோதிலும், உண்மையில் பழந்தமிழ் நூல்களையே தோன்று எடுத்துக்காட்டாய்க்கொண்டு இயங்கினர்; அவற்றையே அடி மனத்தில் மதித்துப் போற்றினர். பழைய இலக்கியங்களுள்ளும் செய்யுள்களையே முதன்மையான இலக்கியப் பிரிவாகக் கொண்டனர். (தமிழகத்திலே சுவையுணரும் திறனாய்வுத் தந்தையான டி. கே. சி. யும் அவ்வாறே கவிதைக்குச் சிறப்பிடம் அளித்தமை மனங்கொளத்தக்கது). உரைநடையில் எழுந்த அல்லது வெளிவரத் தொடங்கியிருந்த நவீன இலக்கிய வடிவங்களாம் நாவல், சிறுகதை, நாடகம் முதலியன இவர்களது பார்வைக்குள் விழவில்லை. அவற்றை இலக்கியமாக அவர்கள் கருதியிருப்பர் என்பதும் ஐயத்துக்குரியதே.

இத்தகைய சூழ்நிலையிலும் பின்னணியிலுமே தேவை காரணமாக மூன்றாவது பிரிவினர் தோன்றினர். புதுவதாய்ப் படைக்கப்படும் இலக்கிய ஆக்கங்களை மதிப்பிடவும் அவற்றின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத கருத்துரையாடல்களை நடத்தவும் இவர்கள் முன்வந்தனர். 'எழுத்தாளர்' என்ற பொதுப் பெயரால் இவர்கள் அறியப்பட்டனர். முதலிரு பிரிவுகளைச்

சேர்ந்தோர் பல வழிகளில் வரையறுக்கப்பட்ட ஒருமைப்பாடுடையவராயிருந்தனர். மரபுவழித் தமிழ்க்கல்வியினாலும் அதற்கேற்ற குலத்தகைமைகளினாலும் அலுவல் நிலைமைகளினாலும் சமூகத் தகுதியினாலும் அவர்களுக்கிடையே பொதுப் பண்புகள் பல இருந்தன. தலைமுறை ஒருமைப்பாடும் இருந்தது. ஆனால், மூன்றாவது பிரிவினரோ அத்தகைய சமூகப் பண்பாட்டு ஒருமைப்பாடு அற்றவர்கள்.

இலக்கிய ஆக்கத்திலே ஈடுபட்டிருந்தமையைத் தவிர வேறெந்தப் பொதுப் பண்பும் அவர்களுக்கு இருக்கவில்லை. அதனோடு அவர்கள் சமூகத்தின் பல்வேறு படிநிலைகளிலிருந்தும் வந்தவர்கள். கல்வித்தரத்தைப் பொறுத்தவரையிலும் வேறுபாடுடையவர்கள். கூர்ந்து நோக்கினால் அவர்கள் ஒருமைப்பாட்டை இழந்தவர்கள் எனலாம். ஆனால், இலக்கிய உலகிலே புகுந்து தமக்கென ஒருமைப்பாடு ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தவர்கள். இலக்கிய வேட்கையும் படைப்பும் செய்தித்தாள் தொடர்பும் அவர்களுக்குக் குறைந்த அளவு ஒருமைப்பாட்டை அளித்த போதிலும், தாமாகவே புதிய இலக்கிய அளவுகோல்களையும் மதிப்பீடுகளையும் தேட வேண்டியவராயிருந்தனர். அதாவது முதலிரு பிரிவினருக்கும் இலக்கியத்தின் பயன், இலக்கியத்தில் இடம்பெறக்கூடிய பொருள், இலக்கிய ஆசிரியர்கள் கையாளவேண்டிய மொழிநடை என்பன பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. (சமய நம்பிக்கைகள் சில வேளைகளில் குறிப்பிட்ட நூல்கள் பற்றிய மதிப்பைப் பாதித்திருக்கலாம்.) ஆனால், மூன்றாவது பிரிவினர் இலக்கிய அரங்கிற் காலடி வைத்த காலப்பகுதியையடுத்து, சொற்போரிடுதல் பெருவழக்காயின. அவைகளில் பேசத்தகாத சொற்கள் இலக்கியத்தில் இடம்பெறலாமா? பேச்சுவழக்கு எடுத்தாளப்படலாமா? பிறமொழிச் சொற்கள் வந்து கலக்கலாமா? அரசியல் கருத்துக்கள் எந்த அளவுக்கு இலக்கியத்தில் இடம்பெறலாம்? இவ்வாறு பல ஐயங்களும் வினாக்களும் இலக்கிய உலகில் வெடித்து எதிரொலித்தன. இலக்கிய ஆசிரியர்களின் பெருமை சிறுமை குறித்தும் உரையாடல்கள் தோன்றின. சாதியுணர்வும் தனிப் பற்றுள்ளமும் ஆங்காங்கே தலைதூக்கின. பழைய முறையில் வந்த இலக்கிய அறிஞர்களுக்கு இவை அனைத்தும் கலிகாலத்துத் தலைதடுமாற்றத்தின்பாற் படுவனவாயிருந்தன. ஆனால், புதிய எழுத்தாளருக்கும் திறனாய்வாளருக்கும் இவை இன்றியமையாப் போராட்டங்களாய்த் தோன்றின.

ஈழத்துச் சிறுகதையிலக்கியத்தின் முன்னோடிகளாய் விளங்கும் இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சோ. சிவ

பாதசுந்தரம், சம்பந்தன் ஆகியோருள் முதல் மூவரும் திறனாய்வுத் துறையிலும் முதன்முயற்சியாளராய் இருந்தனர். முற்றுப்பெறாத கல்லூரிப் படிப்புடன் இலக்கிய உலகிற் புகுந்த இவர்களுடைய எழுத்தில் மணிக்கொடி குழுவினரின் சொற் போரைக் காணலாமாயினும், ஒருவகையான 'தேசிய' நோக்கு இவர்களது மனத்தில் பதிந்திருந்தது என்று கூறத் தோன்று கிறது. இவர்களுள் படைப்பு இலக்கியத்திலே முழுமூச்சாக ஈடுபட்டிருந்த இலங்கையர்கோன் (இயற்பெயர் ந. சிவஞான சுந்தரம்) அவ்வப்போது எழுதிய கட்டுரைகளில் மேற்கூறிய நோக்கம் இனங்கண்டுகொள்ளக் கூடியதாயிருக்கிறது. எனினும் புதிய இலக்கியங்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணிகளிலும் அவற்றின் முக்கியத்துவத்திலும் இவர்களுக்குப் போதிய அக் கறையும் அறிவும் இருந்தன எனக் கூறவியலாது. இலங்கையர் கோனைத்தவிர ஏனையோர் பிற்காலத்தில் சமூக இயக்கங்களி லிருந்து ஒதுங்கிக்கொண்டமையும் நோக்கத்தக்கதே.

இக்காலப்பகுதியில் மற்றொரு பகுதியும் திறனாய்வுக் கலைக்கு அரண் செய்வதாயும் வளமூட்டுவதாயும் வந்தமைந்தது. இலக் கியத்தை மட்டுமன்றிச் சிற்பம், ஓவியம், நடனம் முதலிய கவின் கலைகளையும் கிராமியக் கலைகளையும் விளக்கிக்கூறும் போக்கே இதுவாகும். கலைப்புலவர் க. நவரத்தினம், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, மு. இராமலிங்கம் ஆகியோரின் பல்வேறு பட்ட கட்டுரைகள் இதுதொடர்பாகக் குறிப்பிடத்தக்கன. இம் முயற்சிகளின் விளைவாகக் கலைப்படைப்பின் தன்மையையும் உளவியல் பகுதிகளையும் அவற்றோடு தொடர்புடைய சமூகக் காரணிகளையும் கணக்கெடுக்கும் ஆய்வுநெறி மெல்லமெல்ல உருவாகியது. ஈழகேசரி (1930—1958) பத்திரிகையின் பழைய இதழ்களைப் படிக்கும்பொழுது இதனைச் சிறிதளவு காணமுடி கிறது. எழுத்தாளர் பலருக்கு வழிகாட்டியாக இலங்கையர் கோன் சில கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவருடைய உடன் எழுத்தாளரிடத்துக் காணப்படாத மாநிலப்பற்றும், தேசிய உணர்ச்சியும், வரலாற்றுணர்வும் இலங்கையர்கோனிடம் குறிப் பிடத்தக்க அளவு காணப்பட்டன. பின்னாட்களில் (1957) அவர் எழுதிய "யாழ்ப்பாணத்தில் நாடகக்கலை" என்ற கட்டுரை யில் இவ் வுணர்வுகள் முனைப்பாய்த் தோன்றுகின்றன.

தனிப்பட்ட இலக்கியப் படைப்புக்களைப்பற்றி மட்டுமன்றிப் பொதுவாக இலக்கியத் தொடர்பான பல்வேறு செய்திகள் குறித்தும் கொள்கையடிப்படையிலும் உண்மை விளக்கம் தரும் நோக்கிலும் சிலர் எழுதினர். கே. கணேஷ், அ. ந. கந்தசாமி

ஆகியோர் இத் தொடர்பில் விதந்துரைக்கப்பட வேண்டியவர்கள். இவர்களிற் சிலர் முற்போக்குத் தத்துவத்தைத் தழுவியிருந்தனர் என்பதும் நினைவு கூரவேண்டிய செய்தியாகும்.

திறனாய்வு முயற்சிகள் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட்ட பகுதியில் விரைவாக வளர்ந்தன. இக்காலப் பகுதியிலே—குறிப்பாக 1956 ஆம் ஆண்டு அரசியலில் நிகழ்ந்த சிற்சில சமூகப் பொருளாதார மாற்றங்களின் சூழலிலே—ஜனநாயகம், சோஷலிஸம், தேசியம் முதலிய கோட்பாடுகளுக்கும் இலக்கியத்துக்குமுள்ள தொடர்புகள் முதன் முறையாக விரிவாயும் வெளிப்படையாயும் இலக்கிய எழுத்தாளர்களால் விவாதிக்கப்படலாயின. இவ் விவாதங்கள் திறனாய்வுக் கலைக்குப் புதிய அளவுகளைக் காட்டின. இதே காரணத்தால்—தனிப்பட்ட அரசியல் சூழலில் திறனாய்வு எதிர் பாரா வளர்ச்சி பெற்றமையால்—ஈழத்துத் தமிழிலக்கியமும் திறனாய்வும் தமிழ்நாட்டு இலக்கியப் போக்கிலிருந்து பல வகைகளில் வேறுபட்டுத் தமக்கெனத் தனிப்பட்ட இயல்புகளையும், பண்புகளையும் வகுத்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. இன்று தமிழகத்து இலக்கியத் திறனாய்வாளர்களும், செய்தியறிந்த எழுத்தாளர்களும் ஏற்றுள்ள இவ் வளர்ச்சி, வரலாற்றின் ஒரு பகுதியாகிவிட்டது. இக் கால கட்டத்திலிருந்து திறனாய்வுத் துறையில் தீவிரமாகச் செயற்பட்டு வருபவரில் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, ஏ. ஜே. கனகரத்தின, இ. முருகையன், சில்லையூர் செல்வராசன் முதலியோர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் அறியப்பட்டவர்கள். ஈழத்து இலக்கியங்கள் மட்டு மன்றிப் பொதுவாகத் தமிழிலக்கியத் திறனாய்வும் ஆழஅகலம் பெற இவர்கள் பங்களித்துள்ளமை நன்குதெரிந்த செய்தியாகும். இவர்களுக்குக் காலத்தாற் சிறிது பின்னதாக கே. எஸ். சிவகுமாரன், ஆ. சிவநேசச்செல்வன், சபாஜெயராசா, சித்திர லேகா மௌனகுரு, எம். ஏ. நுஃமான், செ. யோகராசா, க. நவசோதி முதலியோர் திறனாய்வுத்துறையில் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றனர். இலக்கிய உலகின் வளர்ச்சியினால் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளும் திறனாய்வுக்கு உரிய இடத்தை அளிக்கத் தொடங்கியுள்ளன. முற்கூறிய சிலருடன் சி. தில்லைநாதன், பொ. பூலோகசிங்கம் ஆகிய இருவரும் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளனர். குறிப்பாகக் கடந்த நூற்றாண்டுகளிலே ஈழத்தில் நடைபெற்ற இலக்கியங்களைத் திறனாய்வுசெய்யும் முயற்சிகள் இப்பொழுது ஆழமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிக அண்மையில், முற்போக்கு இலக்கியம், தேசிய இலக்கியம் முதலிய கோட்பாடுகளையே மீளவும் ஆய்வுசெய்து, கலை இலக்கியப் படைப்புக்களில் எல்லாப் பகுதிகளையும் மேலும் ஆழமாகவும் நுணுக்கமாகவும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக அழகியல் பற்றிய நுட்பமான ஆய்வுகளும் நடைபெறத் தொடங்கியுள்ளன இவை யாவும் மூன்றாவது பிரிவினரால் கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து செய்யப்பட்டு வந்திருப்பனவாகும்.

இன்று திறனாய்வுக்கலை ஈழத்தில் முக்கியமான ஒரு கட்டத்தை வந்தடைந்துள்ளது. தாய்மொழிமூலம் உயர்கல்வி நடைபெறும் சூழ்நிலையில் பலதுறைக் கல்விப் பயிற்சி பெற்றவர்கள் இலக்கியத்துறையில் எழுத்தாளராயும் திறனாய்வாளராயும், வாசகராயும் நுழைகின்றனர். தமிழ் கற்றோரின் தனிப்பட்ட உரிமையாக இலக்கியம் இனி இருத்தல் இயலாது. இந்நிலை, புதிய எதிர்ப்பு ஆற்றலையும், புதிய வாய்ப்புக்களையும் இலக்கிய ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறது. இதேவேளையில் புதியபுதிய அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளும் நாட்டவரை எதிர்நோக்குகின்றன. தமிழுணர்ச்சியோ, இலக்கிய இன்பமோ மட்டும் இலக்கியத்துக்குப் போதுமானவையல்ல. இவை யாவற்றுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அதேவேளையில் உலக இலக்கியத்தின் உயர்ந்த குறிக்கோள்களைத் தழுவியும் இலக்கிய ஆக்கம் நடைபெறவேண்டியநிலை இன்றுள்ளது. இதற்கும் திறனாய்வுக்கலை பக்கத்துணையாயும், சிலவேளைகளில் வழிகாட்டியாயும் பணிபுரிய வேண்டியிருக்கிறது.

---

## தமிழரின் கடல் வாணிகம்

கி. மு. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'சாலமன்' அரசனுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கப்பல் வாயிலாக மயில் தோகை, யானைத்தந்தம், மணப்பொருள்கள் முதலியன சென்றன. ஈப்ரு மொழியிலுள்ள 'துகி' என்பது தமிழ்த் 'தோகை' என்பதாகும்; 'அகல்' என்பது 'அகில்' என்பதாகும்.

டாக்டர் மா. இராசமாணிக்கம்
(தமிழ்மொழி இலக்கிய வரலாறு)

With Best Compliments
From

PUSHPAM
INTERNATIONAL (P) LTD.,

A - 23, Green Park,
NEW DELHI-110 016.

Exporters of Readymade Garments,
Hosiery, Handicrafts Etc.

**With the best compliments from:**

# MANGALORE CHEMICALS & FERTILISERS LTD.,

KHIVRAJ MANSION,
10/2, KASTURBA ROAD,
BANGALORE-560 001.

* * *

Factory:
PANAMBUR, MANGALORE (Karnataka)

*With best compliments from:*

# UNITED TOWERS INDIA PRIVATE LIMITED.,

**2o, Barakhamba Road,**

NEW DELHI-110001.

## Contractors, Structural Engineers & Consultants

Phone: 40530
45401

Cable: UBICO

# இல்லையான காவியம்

[நாவற்குழியூர் நடராசன், இலங்கை]

## கடவுள் வாழ்த்து

இல்லைஉண்டென் கின்ற வாதம்
இன்றும் அன்றும் என்றுமிங்
கில்லை யாக இல்லை யாக்கும்
இல்லை யான இறைவனே!
இல்லை யான காவி யத்துக்
கெழுது கின்ற இவ்வுரை
இல்லை யான தேதுங் கொண்ட
தில்லை யாக வேணுமே.

## அவையடக்கம்

எல்லாரு மேதோ எழுதுகிருர், அவ்வவற்றைப்
பல்லாருங் கூடிப் பரிகசித்துத் தள்ளுகிருர்;
வல்லாரும் என்கவியை வசைகூற முயல்வாரோ?
இல்லாத காவியத்துக் கென்னசொல்ல இருக்கிறது!

## நூன்முகம்

இலக்கியமா செய்கின்றேன்? இல்லை யில்லை,
எவரையும்நான் மகிழ்விக்க எண்ண வில்லை;
கலக்கியடிக் கின்றசில நீதி கூறும்
கற்பனைகள் சொல்லிடவுங் கருத வில்லை;
நிலத்தினிலே நடக்கின்ற நிகழ்ச்சி பட்டென்
நினைப்பினிலே தெறிக்கின்ற கிரணக் கற்றை
புலத்தினிலே உருவங்கள் பொறிக்கு தங்கே
பொத்திவைக்க இடமில்லை, போடு கின்றேன்.

## நாட்டு வருணனை

சூழ நீள்கடல் சூழ்ந்து கிடப்பினும்
ஆழ நீளம் அறிந்தில வாறுபோல்,

ஆளை ஆளங் களந்தறி யாதது
'கீழம்' என்றொரு நாடிருக் கின்றது.

வாளை தாவி வயலிடைப் பாய்வதும்
பாளை மோதப் பழவகை வீழ்வதும்
கூழை வாழைக் குலைகளைச் சாடலும்
வாழை தேனை வழங்கலும் அங்கிலை.

ஆனை யான அடங்கிக் கிடப்பதும்
பூனை யான புடைத்துக் குதிப்பதும்
சேனை நாயகர் சித்திரச் சிங்கங்கொண்
டானை ஆள நினைத்ததும் அங்குதான்.

மந்தி சிங்க மயிரினைப் போர்த்(து), 'ஒரு
மூந்தி வந்த முழுமுதல் தான்' என
நந்தி தம்மை நவைசெயும்; இங்கிவை
வெந்து நொந்து வெடித்தெழுந் தார்த்திடும்.

வானை நோக்கி வளர்ந்த பனையினைக்
கானை நோக்கிக் கவிந்த பலாவினம்
சேனை போலச் சிதைக்க வளர்ந்திட
ஆனை போல அதுவும் உயர்ந்திடும்.

ஆதி கால அரக்கர் பரம்பரைச்
சாதி யொன்று சதிசெய்தங் கேஉள
வீதி யெங்கும் வெறிகொண்டு நிற்குது;
நீதி மெள்ள நிலைகுலை கின்றதால்.

தொன்று தொட்டு வளர்ந்த கலையினை
இன்று நேற்றிங் கெழுந்த முளைஇலை
கொன்று தின்னக் குதிகொள்ளு கின்றது;
வென்று செல்லும் விதியிதற் குள்ளதோ?

ஆலை தோறும் அரசியற் போர்களும்
வேலை தேடி விழுந்தடிப் போர்களும்
வாலை வாரி வளம்பெறு வோர்களும்
சாலை தோறும் சழக்குரைப் போர்களும்,

கூலி பேசிக் குழப்பஞ்செய் வோர்களும்
போலி வேடப் பொதுநலப் பேர்களும்
பாலி யாற்றுப் படுமணல் தன்னிலும்
நாலி லொன்றுக் குயர்ந்ததந் நாட்டினில்.

சூழ்ச்சி செய்து சுகமெடுப் போர்களே
ஆட்சி செய்யும் அரசியல் வானிடை
காட்சி தந்து களிநட மாடுவார்,
வீழ்ச்சி யெய்தும் வியப்பதும் உண்டுதான்

### நகர வருணனை

பழங்குடி யறியாப் பதி; மொழி நூறு
வழங்கிடு 'சிழும்பு' வான்நகர் அதனில்
களங்கமோர் கோடி கண்மறை வாக
விளங்கிடும்' அதைநான் விரித்திட லாமோ?

எத்தனை சாதி, எத்தனை சமயம்,
அத்தனை யாகு மனுசா ரங்கள்;
உத்தமர் களுமுளர் ஒருமணி வேளை,
பத்தினி களுமுளர் பகலினி லங்கே.

* * *

வந்தனைகள் செய்குவது வானவரை யல்ல,
தந்தமது மேலையதி காரிகளை யாகும்;
சந்ததமும் அந்தவகை சாதனைகள் செய்வோர்
எந்தவகை யாலுமுயர் வெய்துவது சாலும்!

மிஞ்சிவழிந் தோடுவது மேல்வீதி யெங்கும்
விஞ்சுவிசை வண்டிகளே, வெண்ணெய்தயிர் அல்ல;
கஞ்சிகழு நீரினையும் காண்பதரி தென்றும்
அஞ்சிடுவர் தண்ணீரும் அற்றுவிடும் என்று.

* * *

மாடிகள் கோடி யங்கு
மனைகள்முன் மலர்த்தோட் டங்கள்
கோடியின் பின்னால் எங்கும்
குப்பைசேர் குச்சு வீதி;
பேடிகள் போல, மக்கள்
பெருகிய கூட்டத் தார்கள்,
வாடிய சிறுபான் மைக்கு
வகுப்பது பிறிதோர் நீதி.

பூக்களோ அங்கு மல்கு
பூவையோர் ஒத்த வாகும்,

நோக்கவே அன்றி வேறு
மோக்கவோ உதவா; என்றும்
'ஆக்களோ' அடிவ ழுக்கி
அதிகமாய் விழுவ தெல்லாம்
மாக்களின் மதத்தா லல்ல,
மக்களின் மதத்தா லாகும்.

### நூல்

காவியமா எழுதவந்தேன்? இல்லை இல்லை,
காவியத்துக் கிங்கேயோர் கதையுமில்லை,
மேவியநற் றலைவனில்லை தலைவி யில்லை,
மேலான என்கவியை மெச்சி மெச்சிப்
பாவினிலே உயர்ந்ததெனப் பரிச ளிக்கப்
பண்புடைய வள்ளலொரு பேரு மில்லை;
காவியமேன் எதற்காயிங் கெழுத வேண்டும்?
கட்டிவைப்போம் ஏட்டினை இக் கணக்கி லேயே!

---

## கொரியா மொழியும் - தமிழ் மொழியும்

தென் கொரியாவில் உள்ள பேராசிரியர் கொரிய மொழியி லுள்ள சில சொற்கட்கும், தமிழ்ச் சொற்கட்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து வருகிறார். அவர் ஒப்பு நோக்கிய சில சொற்கள் :

| கொரியா மொழி | தமிழ் மொழி |
|---|---|
| அப்பா | அம்மா |
| அம்மா | அம்மா |
| உன்னி | அன்னி |
| புல் | புல் |

# வாழ்வின் தரிசனங்கள்

[டொமினிக் ஜீவா, இலங்கை]

யாழ்ப்பாணப் பட்டணத்தின் உயிர்நிலையமாக விளங்கும் வணிக வட்டாரமான 'கிரண்ட் பஜார்' பகுதியின் இதய நாளத்தை ஊடறுத்து நட்ட நடுவில் நேராக ஓடிக்கொண்டிருக்கின்றது அந்த நீண்ட தெரு.

அந்தத் தெருவின் முச்சந்தி முனையை அடைந்துவிட்ட மேகமூர்த்தி, சிறிது நிதானித்துதான் பிரயாணம் செய்து கொண்டு மிகத் துரித கதியில் வந்த சைக்கிளின் வேகத்தை மட்டுப்படுத்தினன்.

வீதியின் ஆரம்ப முனையில் நடப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையைப் பார்த்துவிட்டுச் சைக்கிளின் இருக்கையில் இருந்து சடாரெனக் குதித்து இறங்கினன்.

'முக்கிய கவனிப்பு: ஒருவழிப் பாதை இது. இப் பாதையில் போகக்கூடாது!'

சிவப்பு எழுத்துக்களும் தடிப்புக் கோடுகளும் மேகமூர்த்தியை வழிமறித்து எச்சரிக்கை செய்தன.

சைக்கிளில் இருந்து அவசர கோலத்தில் குதித்து இறங்கியதினல் இடக் கரத்தில் அழுத்திப் பிடித்திருந்த சிறிய கண்ணடிப் போத்தலொன்று சைக்கிள் ஹான்டிலில் உரசி உரசி ஏதோ தந்திப் பாஷையில் அலறுவது போலத் துடித்தது.

அந்தக் கண்ணடிப் புட்டி எழுப்பிய 'டக்....டக்டக்... என்ற ஒலியைக் கேட்டதும் தான் வந்துற்றதின் அவசர அவசிய நோக்கம் இன்னும் அதிகமாகப் புலப்படத் தொடங்கியது, அவனுக்கு.

யாழ்ப்பாண மாநகர சபையின் கட்டளைச் சட்டத்திற்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டுமாக இருந்தால் அடுத்துள்ள வீதிக்குச் சென்று கால்மைல் தூரம் அதே தெருவை அளந்து, பின்னர்

வளைந்து, இந்த வீதியின் மறு கோடிக்குப் போய்த்திரும்பி அப்புறம் இதே தெருவில் நுழைந்து, வந்து படையெடுத்தால்தான் தான் வந்த காரியம் கைகூடக் கூடும் என்ற நினைப்பு மனத்தில் எழுந்தபொழுது மேகமூர்த்திக்குச் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டுமென்ற எண்ணம் போய் மனச் சாட்சிக்குக் குந்தகமில்லாமல் நடக்க வேண்டிய அவசரம் குறுக்கிட்டு விரட்டியது.

சைக்கிளை இடுப்பில் சார்த்தி வைத்துக்கொண்டு, சட்டைப் பையைக் குடைந்து ஒரு மூடிய கடிதக்கவரை வெளியே எடுத்து முகவரியைப் பார்த்தான்.

ஃபாரின் லிகர் ரெஸ்ற்றூரண்ட்; உரிமையாளர்; ஞான மாணிக்கம், என ஆங்கிலத்தில் தனித்தனி எழுத்தாக எழுதப் பட்டிருந்தது.

பலதடவைகள் அவன் இதே வீதியால் சென்றிருக்கிறன்: பல காரணங்களுக்காக இந்தத் தெருவை அவன் நடந்து கடக்க வேண்டி ஏற்பட்டதுண்டு. யாழ்ப்பாணப் பட்டணத்தில் வாழ்பவர்கள் எதற்காவது எப்போது ஒருநாளாவது இந்தச் சாலையில் கால் வைக்காமல் இருந்திருக்க முடியாது. அப்படியான பிரபலம் வாய்ந்த இந்த வீதியில் மேகமூர்த்தி ஒரு கரையில் நின்று கொண்டு ஒருகணம் யோசித்துத் தடுமாற்றமுற்றன்.

'மேல்நாட்டுக் குடிவகைகள் விற்கும் குடிவகைச் சாய்ப்பு எந்தப் பக்கத்தில் இருக்கும்?'

இதுநாள்வரை தான் இந்தத் தெருவில் வந்திருந்தும் போயிருந்தும் இப்போது தேடும் இந்தக் குடிவகைச் சாய்ப்பைத் தான் அவதானிக்காமல் இருந்துவிட்டதை எண்ணி இப்போது மனத்திற்குள் வருத்தம் அவனுக்கு. தனது அறியாமைக்காக நெஞ்சிற்குள் வருத்தப்பட்டுக்கொண்டிருக்க இப்போது நேரமில்லை என்ற உணர்வு மனத்தில் நிழலாட அவன் தான் வந்த வேலையில் அவசரம் காட்ட முனைந்தான்.

சைக்கிளை மெதுவாகத் தள்ளிக்கொண்டு வீதிக்குள் நுழைந்த மேகமூர்த்தி வீதியின் இரு மருங்குக் கடைகளிலும் வரிசை வரிசையாக விதவித கோணங்களில் அறிவிப்புச் செய்து கொண்டு துலங்கும் விளம்பரப் பலகைகளையும் நோட்டம் விட்டான். புடவைக் கடை, சப்பாத்துக் கடை, சலூன், பல சரக்குக் கடை, சலவைச் சாலை, வானொலிப்பெட்டி திருத்துமிடம் சிற்றுண்டிச்சாலை, மணிக்கூட்டுக் கடை, பேக்கரி, சவப்பெட்டிக் கடை, சாய்ப்புச் சாமான் விற்கும் நிலையம், மல்லிகை அலுவலகம்.... இன்னும்....... இன்னும்......

தன்னில் தானே அவனுக்கு ஒரு விசித்திர உணர்வு ஏற்பட்டது.

நேற்றுவரைக்கும் பக்கத்து ஒழுங்கையிலுள்ள கள்ளுக் கொட்டில் படலையைக்கூட எட்டிப் பார்த்தறியாத அவன் இன்று மேல்நாட்டுச் சீமை குடிவகைச் சாய்ப்பைத் தேடிப் பெரிய கடைப் பிரதேசத்தை வலம் வர ஏற்பட்டுள்ளதேனென்றால்?

அவனுக்கு ஒரு ஞாபகம் வந்தது.

பேட்டுக் கோழி இரண்டு நாட்களாகக் கள்ள முட்டை இட்டு வந்தது. வீட்டுப் பக்கமே வரவில்லை. தாய் தையலம்மா அதைத் துரத்திப் பிடிக்கச் சொன்னாள். ஓடிய கோழி கள்ளுக் கொட்டில் வளவிற்குள்போய் பதுங்கிக் கொண்டுவிட்டது.

மேகமூர்த்தி வெறுங் கையுடன் திரும்பிவிட்டான். மகனின் கையாலாகாத தனத்தைக் கண்டு தையலம்மா கோபித்துக் கொண்டாள். 'போனை! சனியன் புடிச்ச கோழி கள்ளுக்கொட்டில் வளவுக்கை ஓடீட்டுது. அதுக்கை ஆக்கள் இருக்கினம். நான் கொட்டில் வளவுக்கை போறதில்லை!'

எண்ணிப் பார்த்தபொழுது மனித மன விசித்திரங்கள் அவனுக்குப் புரிந்தது போலுமிருந்தது. புரியாமலும் விசித்திர மாகப் பட்டது.

சாயங்காலம் முற்ற வெளியில் பிரபல கல்லூரிக் கோஷ்டிக ளிடையே காற் பந்தாட்டம் நடக்க இருந்தது. அவன் விளையாட்டுப் பிரியன், ரஸிகன். எனவே ஆவலாகப் புறப்பட ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தபொழுது அம்மாவின் குரல் நெருங்கிக் கேட்டது.

'எடேய் தம்பி, மேகம் இந்தப் பால்போத்தில் ரெண்டையும் மடத்திலை குடுத்துப்போட்டு அப்படியே பெரிய கடைப்பக்கம் போய்ப் பசு மாடுகளுக்குப் பிண்ணாக்கும் பருத்திக்கொட்டையும் வாங்கிக்கொண்டுவா ராசா!'

'போனை, எனக்குத் தெரியாது! நான் எங்கையும் அவசரமாப் போக வெளிக்கிட்டால்தான் உனக்கும் வேலை. நேத்துச் சோதினை. இண்டைக் கெண்டாலாவது மாச் பாக்கப் போகலா மெண்டால் எனக்கு வேறை வேலை சொல்லுறாய். வேணு மெண்டால் மடத்திலை பாலைக் குடுக்கிறன். பெரிய கடைக்குப் போகமாட்டன்!

'நல்ல பிள்ளையெல்லே. பசுமாடுகள் ரெண்டும் ராவைக்குப் பட்டினி ராசா. கடைத்தெருப்பக்கம் போய் இதெல்லாம் வேண்டித்தர எனக்கு வேறை ஆர் இருக்கினம்? என்ற ராசா வெல்லே! ஒருக்காப் போயிட்டு வந்திடு.'

தையலம்மா மகனின் பலவீனத்தைப் புரிந்துகொண்டு வார்த்தைகளை அள்ளி வீசினள். மேகமூர்த்தி சற்று யோசித்தான்.

'சரி...சரி....! காசைக் கொண்டா. போத்தலை எடுத்துவை!

ஐந்து ரூபா நோட்டை வாங்கிப் பத்திரப் படுத்திக்கொண்டு பாற் போத்தல்களுடன் சைக்கிளில் புறப்பட்ட மேகமூர்த்தி அண்மையில் உள்ள வயோதிப மடத்தை அடைந்ததும் பாற் போத்தல்களை வழக்கமாகக் குசினிக்குள் வைக்கும் தட்டைச் சுவரில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து மாமரத்தடியில் சாய்த்து வைத்திருந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட பெடலில் காலை வைத்தான்.

'தம்பி மூர்த்தி, கொஞ்சம் நில்லும், வாறன்.'

வெள்ளை உடை தரித்துக் கிழப் பழமாகக் காட்சிதரும் மேட்ரன் அவனை அணுகி வந்தாள்.

ஆண்டு பலவாக அந்த வயோதிபர் மடத்திற்குப் பால் கொடுத்து வரும் தன்னிடம் ஒரு புன்முறுவலைத் தவிர நின்று பேசி அறியாத அந்த மடத்தின் தலைவி தன்னைச் சற்று நிற்கச் சொல்லிவிட்டுத் தன்னை நெருங்கி வருவதைக் கண்ட பொழுது மேகமூர்த்தியால் ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை.

'என்னத்துக்காக இருக்கும்?'

'தம்பி அவசரமா பஜாருக்கு ஒருதரம் போயிட்டு வரமுடியுமா?' எனக்கிட்ட நெருங்கியதும் கேட்டாள் மேட்ரன்.

அவன் எதற்கு எனக் கேட்க நினைத்தான்; ஆனல் கேட்கவில்லை.

அவனது நினைப்பைப் புரிந்துகொண்டவளாக மேட்ரன் சொன்னள்: 'தம்பி ஆச்சிமுத்துக் கிழவிக்கு வருத்தம் கடுமை யாக்கிப் போட்டுது. டாக்டர் பிறண்டியில் அடிக்கடி மருந்து கலக்கிக் கொடுக்கச்சொல்லி இருக்கிருர். இங்கே பிறண்டிக்கு எங்கே போகிறது? நான் ஒரு கடிதம் தாறன். அதைக்கொண்டு போய் அதிலை எழுதியிருக்கிற விலாசத்திலை குடும். அங்கே

தாறதை இந்தப் போத்தலுக்குள்ளே வாங்கிக்கொண்டு வாரும். அவசரந் தம்பி!'

மேட்ரன் பேசிய படபடப்பைக் கண்டே நிலைமையின் அபாயத்தைப் புரிந்துகொண்டு விட்ட மேகமூர்த்தி போத்தலையும் மூடிய கவரையும் வாங்கிக் கொண்டான்.

"பணம் தரப்படவில்லையே?" என்ற எண்ணம் அவன் மனத்தில் முகிழ்த்தபொழுது அப் பணத்தைப் பெறுவதற்காக அவன் அதை வெளிக் காட்டாமலே சற்றுத் தயங்கித் தயங்கித் திரும்பினன்.

மேகமூர்த்தியின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட மேட்ரன் இன்னுஞ் சற்று நெருங்கிவந்து குரலைத் தணித்துக்கொண்டு, இரகசியம் சொல்லும் பாணியில், 'தம்பி, பிறண்டிக்குக் காசு தர இல்லையெண்டு நீ யோசிக்காதை; இந்தக் காயிதத்தைக் குடுக்கப் போறவர்தான் ஆச்சிமுத்துக் கிழவியின்ற சொந்த மகன். இது வெளியே தெரியாது. இருந்தாலும் ஆபத்திற்கு இதை விடச் சரியாக வழியொண்டும் எனக்குத் தெரியல்லை. கெதியாப் போட்டுவாரும். இருட்டப் போகுது."

போத்தலையும் கடித உறையையும் கையில் வாங்கிக் கொண்டதும் அக் கடித உறை கனப்பதுபோன்ற ஒரு பிரமை நெஞ்சில்.

'சீ! உலகத்திலே இப்படியும் மனிதர்களா?'

மேட்ரன் சொன்ன தகவல்கள் முள்ளாக ஆடி மனத்தை நெருடியது. ஆச்சிமுத்துக் கிழவியின் பெயரை நினைத்ததும் அந்தப் பெயரே அவன் மனத்தில் மணத்தது. ஆரம்பத்தில் அந்த அநாதை மடத்துக் கிழவிகளை யெல்லாம் அலட்சியமாகத்தான் எண்ணி நடந்து வந்தவன் மேகமூர்த்தி. பார்வையில்கூட அநுதாபமற்ற போக்குகளும் அவனிடம் குடிகொண்டிருந்தன. பால் கொடுப்பதுடன் தனது கடமை முடிந்துவிட்டது என மேலோட்டமாக நடந்து வந்த அவனை ஆச்சிமுத்துக் கிழவியின் அன்பு முகம் கொஞ்சம் கொஞ்சமாகக் கவர்ந்து கொண்டு விட்டது.

ஒரு சில மூதாட்டிகள் அந்த மடத்தின் மதிலோரம் செம்பரத்தைமர வரிசைகளுக்கு எதிரே சீமேந்துச்சாய்மணைகளில் கால்களைத் தொங்கப் போட்ட வண்ணம் அமர்ந்திருப்பார்கள். அதில் ஒருத்தியாக ஆச்சிமுத்துக் கிழவியும் காட்சி தருவாள்.

அப்படியான ஒரு சூழ்நிலையில்தான் முதன் முதலில் அவன் ஆச்சிமுத்துக் கிழவியைக் கண்டான்.

சிலரை முதன் முதலில் அவர்களது முகத்தைக் கண்ட வுடன் பிடித்துப்போய் விடுகிறது. இன்னுஞ் சிலரை முன் பின் பழக்கமில்லாமலே கண்ட மாத்திரத்தில் மனத்தில் வெறுப்பேற் பட்டு விடுகின்றதே! அப்படியாக ஆச்சிமுத்துக் கிழவியின் முகத்தைக் கண்ட மாத்திரத்திலேயே மேகமூர்த்திக்கு அவள் மீது ஒருவித பரிவுணர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

ஒருவித வார்த்தையாடல்களும் இல்லாமல் வெறும் புன் முறுவல் மூலம் தனது அன்பை வெளிக்காட்டி வந்த அக் கிழவியிடம் தாய்மைப் பரிவைப் போகப் போக அவன் கண்டான்.

அந்த ஆச்சிமுத்துக் கிழவிக்குத்தான் இன்று கடுஞ் சுகவீனம்.

அநாதை மடத்துக் கிழவி என நீண்ட நாள்களாக எண்ணி வந்த அந்தக் கிழவியின் வசதி படைத்த மகனிடம் அவளுக்காக உதவிகோரி இன்று அவன் போகின்ருன்! எத்தனை பெரிய விசித்திர உண்மை இது!

'இது ஆச்சிமுத்துக் கிழவிக்குத் தெரியுமோ, தெரியாதே?'

அந்த வேகத்தில் சைக்கிளை எடுத்து மிதித்துக்கொண்டு புறப்பட்டு விட்டான் மேகமூர்த்தி.

இப்பொழுது அந்த வீதியின் பெயர்ப் பலகைகளை வரிசை யாக வாசித்துக்கொண்டு சென்ற அவனது மனத்தில் ஓர் எண்ணம் தட்டுப்பட்டது.

'யாரையாவது விசாரித்துப் பார்த்தால் என்ன ?'

சைக்கிளைப் படிக்கட்டொன்றில் நிறுத்திவிட்டுச் சப்பாத்துக் கடைக்காரர் ஒருவரைக் கேட்டுப் பார்த்தான்.

அவர் வெளியே வந்து இடத்தைச் சுட்டிக் காட்டினர்.

விளக்கு வைக்கும் நேரம்.

'சீமைக் குடிவகைகள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படும்' எனக் கட்டியம் கூறுவது போன்ற நீண்ட நெடும் விளம்பரப் பலகையைக் கொண்ட அந்த மேனட்டுக்குடி வகைச் சாய்ப்பினுள்ளே குழல் விளக்குகள் பிரகாசமாக ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தன.

படிக்கட்டில் ஏறும்போதே ஒருவகை நெடி—ஆஸ்பத்திரிகளில் ஏற்படுமே ஒருவித மணம்—அதையும்விடக் காரமான, குடிவகை நிலையங்களுக்கேயுரிய பிரத்தியேகமான, வாடை மூக்கைத் துளைத்தது.

பலர் உள்ளே நுழைவதும் வெளியேறுவதுமாக இருந்தனர்.

சில இளைஞர்கள் கையில் சிகரெட்டுடன் ஒருவர் தோள்மீது ஒருவர் கை போட்டவண்ணம் ஆடி அசைந்து தெருவில் இறங்கி ஒருவித பரவசத்துடன் நடந்து சென்றனர்.

தனியாக வெளியே வந்த ஒருவன் இவனைப் பார்த்து குடிகாரப் புன்னகை முகத்தில் ததும்பச் சிரித்துவிட்டுச் சென்றான்.

இவை யாவுமே மேகமூர்த்திக்குப் புதிய அநுபவங்கள்.

உள் நுழைந்த மேகமூர்த்தி நீண்ட ஹாலில் மெதுவாக நடந்தான். மின் விசிறிகள் மெதுவாகச் சுழன்றுகொண்டிருந்தன. திரை அடைப்புக்களில் இருந்து கதிரைகளை இழுக்கும் சத்தமும் பல குரலில் சம்பாஷணைகளும் போத்தல் திறக்கப்படும் ஓசைகளும் அவன் காதுகளில் வந்து மோதிச் சென்றன.

மேசை விசிறி சுழன்றுகொண்டிருந்தது. அதற்கு எதிரிலே கவுண்டரில் தங்கப் பிரேமிட்ட கண்ணாடி அணிந்த ஒருவர் உட்கார்ந்து யாருடனோ ஃபோனில் உரக்கக் கத்திப் பேசிக்கொண்டிருந்தார்.

'இவர்தாம் அவரோ?'

போத்தல், கிளாசுகளுடன் வந்த ஊழியரை மறித்தான். 'உங்கள் முதலாளி ஞானமாணிக்கம்......' அவன் முடிக்கவில்லை.

அவன் பயங்கலந்த பார்வையுடன் சைகையால் இவன் சந்தேகித்த அவரையே காட்டிவிட்டு அவசரமாகச் சென்று ஒரு திரைச் சீலைத் தட்டிக்குள் மறைந்துவிட்டான்.

தூண் ஓரமாகச் சற்று ஒதுங்கி நின்றான்.

தொலைபேசியில் பேசிமுடித்த அவர் அதை வைத்துவிட்டுத் திரும்பி, கண்ணாடியைக் கழற்றித் தோளிற் கிடந்த சால்வையால் அதைத் துடைத்துக்கொண்டார்.

நேராக அவர் முன் போய் நின்ருன் மேகமூர்த்தி. ஒரு வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் பெயர் எழுதிய கடிதத்தை அவர் முன் எடுத்து நீட்டினுன்.

அவன்மீது ஆச்சரியம் ததும்பும் விழிகளுடன் ஒரு பார்வையை விட்டெறிந்த ஞானமாணிக்கம், அவன் தந்த கடித உறையைப் பிரித்துப் படித்தார். பின்னர் கண்களை நிமிர்த்தி அவனைப் பார்த்தார். அவரது உதட்டில் கோணத்தில் தெரித்த வெறுப்பின் சாயல், அவனைப் பேசத் தூண்டவில்லை.

மேகமூர்த்தியின் முகத்தில் இனந் தெரியாத குழப்பம் நிழலாடியது.

பரிவற்ற அவரது பார்வை அவனைக் குத்திக் குடைந்தது.

'ஏதாவது தவறு செய்துவிட்டோமோ' என ஒரு கணம் தடுமாறிப் போய்விட்டான் அவன். அந்தப் பார்வை அப்படிக் குற்றஞ் சாட்டுவதுபோல அவனுக்குப் பட்டது.

'ம்...! ம்...!' எனத் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்தும் ஓர் உறுமல். கடிதத்தை மேசையில் வைத்துவிட்டு நிமிர்ந்தார்.

'இந்தா! காசு கொண்டு வந்திருக்கிறியா? அரை ட்ராம் ஐந்து ரூபாய்...இருக்குதா காசு?' என்ருர். கூர்மையான கண்டிப்பு மிகுந்த குரல்.

இறுக்கமான உணர்ச்சிமிக்க சொற்கள் இப்போது மேக மூர்த்திக்குத் தேவைப்பட்டன. ஆனுல் ஒரு வார்த்தைகூட வெளிவர மாட்டேன் என்கிறதே!

'வந்து... வந்து....'

'என்ன வந்ததும் போனதும்? இதென்ன சத்திரம் எண்ட நினைப்பா உங்களுக்கெல்லாம்....? ....ஹூம்!'

அவனது உள்ளத்தில் கோபத்தைப் போன்ற ஓர் உணர்ச்சி திடீரெனப் பொங்கிக் கொதித்தது. திடீரெனத் தணிந்து விட்டது.

மனத்தில் ஒரே எரிவு; வெறுமை கலந்த சோர்வு; பாழடைந்த வீட்டில் தனியே நிற்பதுபோன்ற பிரமை,

'ஏ, போய்!' என்ற குரலைத் தொடர்ந்து 'யேஸ், சேர்!' என்ற பதில் குரலும் கேட்டது.

மீண்டும் டெலிபோனில் யாருடனே அவர் பேசத்தொடங்கி விட்டார். அக் கடிதம் அவர் கைக்குள் கசங்கிப்போய்க் கிடந்தது.

வெளியே வந்தான்.

சைக்கிள் படியோரம் சாய்ந்து அநாதையாகக் கிடந்நது.

'இனி என்னத்தைச் செய்யிறது.'

மனத்தின் அடித்தளத்தில் கையாலாகாத வேதனை அரிப்பு.

வாசலில் நிற்பதற்கே கூச்சம் கலந்ததொரு வெட்கம். வேறு சந்தர்ப்பமாஞல் என்ன காரணத்தைக் கொண்டும் ஒரு கணம்கூடத் தாமதித்திருக்கமாட்டான். அன்று பழைய அகம் பாவத்தின் மின்னல் கீற்று உணர்ச்சிகள் அவன் மனத்தில் உறைக்காமலும் இல்லை.

அபூர்வமான பரிவு ததும்பும் ஆச்சிமுத்துக் கிழவியின் முகம் தனது கால்களைக் கட்டிப்போட்டுவிட்டாற் போன்ற இயக்கமற்ற நிலையில் அவன் நின்ருன்.

துக்க ரேகைகள் முகத்தில் நிழலாட, சோகமே உருவாக மேகமூர்த்தி எவ்வளவு நேரம் அந்த நடைபாதையில் நின்றிருந் தானே அது அவனுக்கே தெரியாது,

இருள் மெல்ல மெல்ல வெளிச்சத்திற்குப் போர்வை போர்த்துக்கொண்டிருந்தது.

கையிலுள்ள போத்தலைப் பக்கத்தேயுள்ள சாக்கடைக்குள் வீசி எறியப்போன அவனது எண்ணத்தில் திடீரென ஒரு மின்னல் கீற்று.

'தம்பி எடேய், மேகம்; இந்தா காசு. பசுமாடுகளுக்கு...

தேகமெல்லாம் சிலிர்த்தது. புதியதொரு தெம்பு.

உள்ளே நுழைந்தான்; நேரே சென்ருன்.

பழக்கப்பட்டுப்போன சத்தங்களும், ஓசைகளும், சந்தடிகளும் இரைச்சல்களும், பின்னணி கீதம் இசைக்க, உணர்ச்சிகள் முன் உந்த, கவுண்டர் மேசையை அவன் அணுகினன்.

புனிதமென மனிதன் மதிக்கத்தக்க எல்லாவற்றையுமே இழந்துவிட்டு, வெறும் பணப்பெட்டியே தஞ்சமென நினைக்கும்

தார்மீகப் பண்பற்ற அம் மனிதனைப் பார்க்கவே அவனது நெஞ்சம் கூசியது.

ஒரு மௌனமான அலட்சியத்துடன் ஞான மாணிக்கம் அவனை நோக்கினார்.

வாய்ப் பேச்சுக்கு இடமில்லாமல் ஐந்து ரூபா நோட்டை அவர் முன்னே நீட்டிவிட்டுப் போத்தலை மேசைமீது வைத்தான்.

உதடுகள் துடித்தன. நாக்கால் உதடுகளைத் தடவி ஈரக் கசிவை ஏற்படுத்தியவாறு தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

சில மௌனவினாடிகளுக்கு அப்புறம் பொருள் கைக்கு வந்தது.

ஒருகணம் அவரை வெறித்து நோக்கிய அவன் மீண்டும் வெளியே வந்தான்; சைக்கிளை நிமிர்த்தினான்.

'தம்பி எடேய், மேகம்; பசுமாடுகள் ரண்டும் ராவைக்குப் பட்டினி;' தாயின் உணர்ச்சிப் புலம்பலுக்குப் பின்னால் அந்தக் குடும்பமே அம் மாடுகளில்தான் தங்கி உள்ளதான நன்றிப் பெருக்குத் தெரிந்தது. அவனது நெஞ்சை இவ் உணர்ச்சி சற்றுத் திணரடிக்க வைத்தது.

'மாடுகள் தாமே, பரவாயில்லை; இண்டைக்குப் பட்டினி கிடக்கட்டும்;

அவன் திரும்பிய பொழுது இருள் அவனுக்காக வழியில் காத்துக்கொண்டிருந்தது.

(நன்றி ''மல்லிகை'')

———

# அருணகிரியின் பாடல்களில் சக்தி வழிபாடு

[K. V. ஜ்வலபில், யூட்ரெக்ட்]

அண்மைக் கால ஆய்வு ஒன்றில் சி. லெவி-ஸ்ட்ராஸ், பி. மிராண்டா ஆகியோரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, ப்ரெண்டா ஈ. எஃப் பெக் என்பவர் தென்னிந்திய உறவுமுறையின் ஆழத்தில் ஓர் உறவு மையக்கரு இருக்கிறது என்று வாதித்திருக்கிறார். இந்த மையக் கருவின் நடுவிலே, நம்முடைய வாதத்திற்கு நேரடித் தொடர்பு உள்ள ஒன்று இருக்கிறது.—அதாவது, ஆண்களால் சூழப்பட்ட பெண். இந்த அமைப்பின் நடுவிலே பெண் இருப்பது, நேரடியானதும், உணர்வு பூர்வமானதும் ஆகுமேயன்றி, அமைப்பின் பிற குணாதிசயங்களின் விளைவினால் வந்ததல்ல.

பெண் நடுவில் அமைந்துள்ள 'உறவு மையக்கரு' என்ற கருத்தை, சைவ தெய்வ அமைப்பின் நடுவில் அமைந்துள்ள பெண்ணுடன் நாம் தொடர்புபடுத்தி, அதைத் தற்காலத் தென்னிந்தியனின் கண்கொண்டு பார்க்கும்போது, நமக்குக் கீழ்க்கண்ட வரை படம் கிடைக்கிறது. அதில் முருகனுக்கு உள்ள இடம் குறித்து, இந்தக் கட்டுரையைப் பொறுத்தவரை முக்கியத் தொடர்பு உண்டு.

முருகன் என்பது யார்? இந்தக் கேள்விக்கான விடையை, முருகனும்—ஸ்கந்தனுமானவன்மீது பாடப்பட்ட சிறந்த இடைக் காலத் தமிழ்க் காவியமான கந்தபுராணத்தின் ஆசிரியரும், மக்களால் மிகவும் விரும்பப்படுகிறவரும், இந்த விஷயத்தைப் பற்றிப் பேசத் தகுதியுள்ளவர் என மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறவருமான கச்சியப்ப சிவாச்சாரியாரின் வார்த்தைகளிலேயே காணுவோம் :

"அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்

கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.''

ஸ்கந்த-குமார-முருக பக்தர்கள், உலகை உய்விக்கப் புறப்பட்டு வந்த தெளிந்த உண்மையாம் இறைவனின் அவதாரம்தான்

வரை படம் 1




Δ - ஆண்; O - பெண்; I - பெற்றோர்/குழந்தை உறவு முறை (பாரம்பரியத் தொடர்பு); — - ஒரே மாதிரியான உறவு முறை அமைப்பு (உறவுத் தொடர்பு) = - திருமண உறவுமுறை (திருமணத் தொடர்பு)

முருகன் என்று நம்புவது தெரிந்ததுதான். இது பழைமையான, ஆனல் இன்றும் செல்லுபடியாகும் சமய தத்துவம். இதையே இன்னும் சற்று விரிவாக, ஸ்கந்தன் (அல்லது கந்தன், குமரன், சுப்ரமண்யன், முருகன்) பற்றிய, அருணகிரிநாதர் காலத்தில் (கி. பி. 1370-1450 வாக்கில்) வழக்கிலிருந்த கதையைப் பார்ப்போம். முழுமுதற் கடவுளான சிவபெருமான், ஆறுமுகம், பன்னிரு கைகளுமுடைய உருவெடுத்துத் தேவர்களையும், மனிதர்களையும் உய்விப்பதற்காகச் சரவணப் பொய்கையிலே எழுந்தனன். இறைவனின் ஆன்மாவையும், அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட பஞ்சபூதங்களையும் அந்த ஆறுமுகங்களும் குறிக்கின்றன. அவை நான்கு முதன்மையான திசைகளையும், விண்ணையும், மண்ணையும் நோக்கியுள்ளன—அவன் எல்லாவற்றையும் நோக்குபவன், எதையும் அறிந்தவன். அந்த ஆறு முகங்களும் உடலின் ஆன்மீக

சக்தியின் ஆறு சக்கரங்களையும், இறைவனின் ஆறு குணங்களான—அறிவு, பற்றற்ற தன்மை, புகழ், செல்வம், வளமை, அதிகாரம் ஆகியவற்றையும்கூடக் குறிக்கின்றன.

அவதாரம் எடுத்த காரியத்தை நிறைவேற்ற ஸ்கந்தப் பெருமான் குழந்தைப் பருவத்திலேயே பல தெய்வீகச் செயல்கள் புரிந்த பிறகு, தலைமை தாங்கி, தெய்வீகச் சேனையின் (தேவ-சேனு) பதியாக, அசுர சக்திகளைத் தாக்கி அந்தச் சக்திகளின் தலைவனும், தீமையே உருவெடுத்து நின்றவனுமான சூரபத்மனை அறிவின் சக்தியாகிய ஞானசக்தியைக் குறிக்கும் தம் வேல் கொண்டு அழித்தார். அந்தப் பெருமான் தேவர்களைச் சிறை மீட்டார். இந்திரன் (செயல் சக்தியாகிய கிரியா சக்தியைக் குறிக்கும்) தன் மகள் தேவசேனுவை அவருக்கு மணம் முடித்து வைத்தான். அதன் பின்னர் அவர், விருப்ப சக்தியாகிய இச்சாசக்தியைக் குறிக்கும் வள்ளிதேவியை மணந்தார். இவ்விதம் ஸ்கந்தப் பெருமான் சக்திகளின் தெய்வம். எல்லா வரங்களும் அளிப்பவர். தம் பக்தர்களின் உள்ளக் குகையில் வசிப்பவராதலால் அவரைக் குகன் என்றும் அழைப்பர். ஸ்கந்தப் பெருமான் தெய்வீக சேனையின் சேனுதிபதியும், அசுர சக்திகளை அழிப்பவரும் மட்டுமல்லர். ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக அவதாரம் எடுத்த முழு முதற் கடவுளும் ஆவர். சொல்லப் போனல் படைப்பிலும் நம் வாழ்க்கையிலும் முருகன் அவதாரம் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது.

வரை படம் 2



தேவசேனு, வள்ளி - இவர்கள் யார்? அவர்கள் உடன் பிறப்பாகிய தமக்கை, தங்கைகள், ஆதியில் திருமாலின் பெண்க ளாக இருந்தவர் என்பது சாலப் பொருத்தமாகத்தான் இருக்கிறது. இதன்படி, முருகன் மணந்துகொண்டது தென்னுட்டு மரபை யொட்டியே, தன் மாமன் மகள்களைத்தான். இப்போது சிவபெரு மானின் விரிந்த குடும்பம் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது.

கி. பி. 15 ஆம் நூற்ருண்டின் இடையில்-அதாவது அருண கிரியார் வாழ்ந்து, தம் துடிப்புள்ள கவிதைகளை இயற்றிய சமயத்தில் உருவாக்கப்பட்டு, இன்றுவரை வழக்கில் உள்ள முருகன்-சுப்பிரமணியனது வரலாற்றைப் பற்றிய நிலை இதுதான். ஆனுல், அருணகிரியோ பழந்தமிழ் மரபிலே முழுவதுமாக வேரூன்றியவர். அவருடைய பாடல்களிலே, இதைவிடப் பழைமை யானதும் சுயம்புவானதுமான ஒரு கதைப்போக்கு காணப்படுகிறது.

ஒரு புறம் அவர் பழந்தமிழ் நூல்களான பரிபாடல், சிலப்பதி காரம் இன்னும் (கீழே குறிப்பிட்டுள்ளபடி) திருமுருகாற்றுப்படை யிலிருந்தும் தமக்குத் தேவையான கருப்பொருள், கற்பனை ஆகிய வற்றை எடுத்துக்கொண்டார் மற்ருெரு புறம், அருணகிரிநாதர் காலத்தில் தென்னிந்திய சைவ சித்தாந்தத்தின்மீது தாந்திரிகம், சாக்தம் ஆகியவற்றின் சாயல் படிந்திருந்ததுபோல, அருணகிரியின் படைப்புகளுக்கும் அவை பெரிதும் ஊக்கம் அளித்தன. அருணகிரி, பழங்காலத்திலிருந்து அம்மா நிலையிலிருந்த, தாய்-தேவதையாகிய தேவியின் பக்தர். அந்தத் தேவியை வள்ளியின் வடிவத்தில் அவர் வெளிப்படையாகவே உபாசித்து வந்தார் என்பதை நாம் இப்போது காண்போம்.

முருகனின் கதை, சம்ஸ்கிருத, இதிகாச, புராணக் கருத்துக்கள், கதைகளின் ஆழமான சாயையினுல் உருப் பெற்றது. சக்தியின் பிறப்பிடமும், சக்தி நிறைந்தவளும், பிந்திய கற்கால உழவர்கள் வழிபட்ட அம்மா-தேவியுமான வள்ளியுடன் கூடிய சேய்முருகு என்னும் வேட்டைக்காரனும்; வேடுவர்களும் ஆநிரை மேய்த்து வந்த பழங்குடி மக்களும் வழிபட்டு வந்த, என்றும் இளமை மாருதவருமான தெய்வத்தின் ஆதி கதையி லிருந்து பிறந்தது முருகனின் கதை. சேய்-வள்ளி, இவர்களின் தெய்வீகப் புணர்ச்சியின் சாதனைதான்—ஒரு புறம் புராணங்களிலும் மற்ருெரு புறம் சடங்குகளிலும் அநுமான ரீதியாகவும் உள்ள மிகப் பழையதான படைப்புச் செயல். ஆனுல், ஓரளவுக்குப் பிந்தைய காலத்தது என்று சொல்லக்கூடிய கந்த புராணத்திலும் கூட வள்ளி வாழ்ந்துவந்த சூழ்நிலையும் சுற்றுப்புறமும் ஆரம்ப

கால உழவர்கள் வாழ்ந்த சமயத்தது என்று தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது. (அத்தகைய சமுதாயத்தில், வேலைப்பங்கீட்டு முறைப்படியே, வள்ளி இது போன்ற பயிர் விளைச்சலைப் பறவைகள் விலங்குகள் இவற்றிலிருந்து பாதுகாப்பதற்காகத் தினைப்புனக் காவலில் தீவிரமாக ஈடுபடுகிறாள்) வேடுவனாகிய முருகன்-வள்ளி, இவர்களின் சேர்க்கை (வள்ளி என்னும் பெயரே விஷயத்தை நன்றாக விளக்குவதாக இருக்கிறது—ஏனெனில், வள்ளி என்பது அந்த ஆரம்பகால உழவர்கள் தினையுடன்கூட விளைத்து வந்ததும், உணவுக்குப் பயன்பட்டதுமான ஒரு செடியின் கிழங்கு) இந்தப் புராணக் கதையின் சூழ்நிலையைப் பொறுத்தவரை, ஆதிகுடிகளின் இரு தரப்பட்ட சமுதாய—பொருளாதார அமைப்புகள், அதாவது வேடுவர்களுடையவும், ஆரம்பகால உழவர்களுடையவும் அமைப்பு களின் இரண்டற்ற கலப்பினைக் குறிக்கிறது.

இந்தத் தெய்வீகப் புணர்ச்சியின் (நூல்முகச்சான்றாக நமக்குக் கிடைக்கும் மிகப் பழையது என்று சொல்லக்கூடிய) எதிரொலி இன்றும் நமக்குப் பழந்தமிழ்க் காவியமான நற்றிணை (82-4)யில் கிடைக்கிறது. அதில் வள்ளி-முருகனின் புணர்ச்சி பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொற்றவை தேவியின் (சேய்) மகனான இந்த ஆதி முருகனைப் பற்றிய குறிப்பு சிறிய – ஆனால் சிறந்த, தமிழ்ச் செய்யுள் ஒன்றிலிருந்து (குறுந்தொகை) நமக்குக் கிடைக்கிறது :

*செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த*<br>
*செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்*<br>
*கழறொடிச் சேஎய் குன்றங்*<br>
*குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.*

அந்தப் பழைய காலத்திலே, எதிர் காலத்தில் 'உறவுக் கருப் பொருளா'க விரிவுற்றதின் பெண் இன மையமாக (பிற்காலத்தில் துர்க்கை-பார்வதி எனத் தெளியப்பட்ட) (வரை படம் 3) கொற் றவை தேவி இருந்திருக்கலாம். இந்தக் கொற்றவை தேவி வளமை-விபத்து, வெற்றி-தோல்வி ஆகியவற்றைக் குறிக்கும் தாய்-தேவதையாக இருந்தாள். இத் தேவியை வழிபடும் முறை, ஆரியருக்கு முந்திய, இந்தியச் சமய வழிபாட்டு முறைகளிலெல் லாம் மிகத் தொன்மையானதும், உறுதியானதும், தொடர்ந்து நிற்பதுமான வழிபாட்டு முறையாக இருந்தது. மற்றொரு பெண் தேவதை, முருகனின் வருங்கால சக்தியும் (கடவுளின் பலமும் சக்தியும்) கொற்றவை தேவிக்கு மாறுபட்ட சூழ்நிலை, மாறுபட்ட சமுதாய, பொருளாதார அமைப்புகளைச் சேர்ந்தவளுமாக இருந்த வர்தாம் வள்ளி (வரை படம் 3)

ஆனால் பழங்கால, திராவிட ஆதிகுடிகளின் செவ்வேள், கொற்றவையின் மகன், பலமுகங்கொண்ட ஸ்கந்த-சுப்ரமண்ய-குமார-கார்த்திகேய-முருகனை எப்படி, ஏன் பரிணமித்தார் என்பது வேறு. நமது ஆராய்ச்சிக்குத் தொடர்பற்ற கதை. நாம் இங்குக் காட்ட விரும்புவது, தமிழ்க் கவிஞர்களிலே சிறந்த ஒருவரும், முருக வழிபாட்டு முறைக்குப் புத்துயிர் ஊட்டியவர்களில் மிக முக்கியமானவர்களிலே ஒருவருமான அருணகிரி உண்மையில் சாக்தர் (சக்தி உபாசகர்) என்பதும், வள்ளி வழிபாடு அருணகிரியின் படைப்புகளில் உச்சக் கட்டத்தை அடைந்தது என்பதும் தான். அண்மைக் காலத்தில் கூட வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமி (1870-1950)களின் வாழ்க்கையிலும் அரும்பணிகளிலும் சரி, கிருபானந்த வாரியாரின் அரும்பணிகளிலும் சரி, வள்ளிமலை, கடரகமா முதலிய இடங்களில் வள்ளி வழிபாட்டு முறை ஒரு (மக்கள் கூட்டத்தின் மனங்கவர் முறையிலும் எளிய மக்களும் கண்டுகளிக்கும் வகையிலும் புத்துயிர் பெற்றெழுந்ததை நாம் கண்டோம்; இன்றும் காண்கிறோம்.)

1. முதலில் பக்திக்குரியவர் என்ற முறையில் வள்ளி வழிபாடு எப்பொழுது தொடங்கியது என்று பார்ப்போம் (ஆனால், இந்தப் பகுதிகூட இங்குச் சுருக்கமாகத்தான் அலசப்பட முடியும்)

வள்ளி வழிபாடு சரித்திர காலத்துக்கு மிக முன்பானது என்றும், ஆரம்பத்தில் அவள் ஓர் ஆதி குடிகளின் தேவதை என்றும், காட்டைத் திருத்திப் பயிர் விளை வித்து வந்த ஒரு நாகரிகத்தையும் வளமையையும் சார்ந்த ஒரு தேவதை என்றும் நான் முழுமனத்தோடு நம்பு கிறேன். ஆனால், அதற்கோ அல்லது அவளது வழிபாட்டுக்கோ, திருமுருகாற்றுப்படை, பரிபாடல், முக்கியமாகச் சிலப்பதிகாரம்— இந்த நூல்களைத் தவிர வேறு எதிலும் நம்மிடை நூல் வழிச் சான்று இல்லை. ஆனால், இதிலிருந்து தெளிவாக நமக்குப் புலப் படும் அமைப்பு இதுதான். தென்னகத்தின் இளங் கடவுள் (அவர் மீது வடமொழி. பிராம்மணீய ஆதிக்கம் பூர்த்தியானதும்) அநேக மாக இரு மனைவியரை மணந்தவராகத்தான் காணப்படுகிறார். அவர்களுள் முதல் மனைவி வரலாற்று முறைப்படி பிற்பட்டவளாக இருந்தாலும், குலத்தால் உயர்ந்தவர்கள் என்ற காரணத்தால் முதல் மரியாதை பெறுகிறவள் ஆகிறாள். அவளுடைய பெயரும் வடமொழிமயமாக்கப் படுவதோடு, பிராமணீய தெய்வ அமைப்பில் ஒருத்தியாகவும், ஸ்தல மரபுக்கு ஒத்தவளாகவும் காணப்படுகிறாள். ஆனால், இரண்டாம் மனைவியோ வரலாற்று முறைப்படி முந்திய வளாக இருப்பினும், தாழ்ந்த குலத்தில், அநேகமாக ஆதிகுடி

களில் ஒருத்தியாகப் பிறந்ததால் இரண்டாம் மரியாதைதான் பெறுகிருள். இம்மாதிரியான பரிணும வளர்ச்சி எப்படி வந்திருக்கலாமென்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள வரை படங்களில் திட்ட வட்டமாகக் காட்டப்படுகிறது.

### வரைபடம் 3

(ஆதியில் இருந்த திராவிட அமைப்பு முறை கரிய சின்னங்கள் திராவிடத்துக்கு இயல்பானவற்றையும், வெள்ளைச் சின்னங்கள் வடமொழி—பிராமணீய ஆதிக்கத்தால் இங்கு இறக்குமதி செய்யப்பட்டவற்றையும் குறிக்கும்.)




### வரைபடம் 4

(சற்றுப் பிற்காலத்திய நிலை வடமொழி—பிராமணீய ஆதிக்க ஆரம்பநிலை.)



## வரைபடம் 5

(அழுத்தமான வடமொழி ஆதிக்கத்துக்குப் பிறகு)




தமிழில் தற்சமயம் கிடைக்கும் முழுமையான பக்தி நூல்களில் காலத்தால் எல்லாவற்றுக்கும் முந்தியதான திருமுருகாற்றுப்படை (கி. பி. 250ஆம் ஆண்டு அளவில் அல்லது அதற்குப் பிறகு இயற்றப்பட்டது) வடமொழி ஆதிக்கத்தில் முழுவதும் பாதிக்கப் பட்ட ஒரு பிராமணக் கவிஞர், நக்கீரரால் இயற்றப்பட்டது. இருப் பினும், அந் நூல் (அதுவரை வழிபாட்டுக்கு உரியவளாக இராத) வள்ளியை, முருகன்—குமாரன் சம்பந்தப்பட்ட, எங்கும் வழக்கில் இருக்கும் சில வடிவ அமைப்பின் ஒரு பகுதியாக— அறிமுகப் படுத்துகிறது என்பது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. இந்தக் கடவுளின் ஆறு முகங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் நூலாசிரியர், ஆறாவது முகம் கொடியிடையாளும், மலைவாசிகளின் களங்கமில்லா மகளுமான வள்ளியை நோக்கி அமைதிப் புன்னகை செய்தது என்கிறார். (குறவர் மடமகள்......வள்ளியொடு நகையமர்ந் தன்றே). இது வள்ளி வழிபாட்டை, பிராமணீய மயமாக்கிய ஸ்கந்த—முருக வடிவத்தோடு இணைப்பதில் ஒரு முக்கிய கட்ட மாகும்; ஏனெனில் வள்ளியை நோக்கிப் புன்னகை செய்தல், வெறும் அன்பைத் தெரிவிக்கும் பாங்கோ, அல்லது அந்தக் கடவுளின் உயர்ச்சிகள் ஒன்றினுடைய பறந்து மறையும் காட்சியோ அல்ல. சொல்லப் போனால் அது அவருடைய ஆறுமுகங்களும் தங்கள் தெய்வ காரியங்களுள் ஒன்றாக (கிரியை) நிறைவேற்றும்

பணி. இந்த மாதிரியான செயலுக்கு உரியவள் ஆனவள் தேவ சேனு—தெய்வ யானை அல்ல; வள்ளியே என்பதும் குறிப்பிடத் தக்கது.

பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு, வள்ளிக்குத் தனி மரியாதை காட்டும் இந்தத் தெய்வச் செயலை, நக்கீரரின் செய்யுள் வரிகளின் கருத்துரையாக, அருணகிரி தம் திருப்புகழ்ப் பாடல் ஒன்றில் இவ்வாறு வர்ணிக்கிருர் :

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
    ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
    குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
    வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
    ஆதியரு ணசல மமர்ந்த பெருமாளே.

ஆனல், எல்லாவற்றையும்விட முக்கியமாக, சிலப்பதிகாரத்தில் (கி. பி. 450ஆம் ஆண்டு சமயத்தது) 24ஆவது காதையில் முதலாவதாக வள்ளியை நோக்கிச் செய்யப்படும் பிரார்த்தனைகளும், முருகனின் மனைவியென்றும், மலைக்குறவர் குலத்தவளென்றும், அந்தக் குலத்தவரின் வழிவழி இருப்பிடத்தைச் சேர்ந்தவளென்றும் அந்தத் தேவதையைக் குறிப்பிட்டுக் காட்டும் முக்கியமான குறியீடும் காணப்படுகின்றன. நம்மைப் பொறுத்தவரை, இதை விட முக்கியமான விஷயம் வழிபாடு நடப்பது **முதலில்** வள்ளிக்குத் தான்; பிறகு முருகக்கடவுளுக்கு; அதன்பின் இருவருக்கும். தமிழ், நூல் வடிவ மரபில் (ஆதலால் தமிழில் சிறப்பு வாய்ந்த மரபின்படி) முதல் முறையாக தேவதை என்ற ஸ்தானத்தில் வள்ளியின் நேர் வழிபாடு பற்றிய குறிப்பு ஏன் முதன் முறையாகச் **சிலப்பதிகாரத்தில்** காணப்படுகிறது? இதன் காரணம் : சிலப்பதிகாரம் ஒரு பெண்ணைப் பற்றிய காவியம்—ஒரு பெண் எப்படித் தேவதையாகிருள் என்பது பற்றிய கதை; பெண்ணுகவும் தெய்வமாகவும் ஆன கண்ணகி அதன் நாயகி; பெண்ணின் சக்தி, மனிதஇன, தெய்வீக—இருமட்டங்களிலும் பெண்ணின் அழிக்கும் சக்திதான் அந்தக் காவியத்தின் உண்மையான கருப்பொருள். (மாதவி, கோவலனை 'மனித இன' மட்டத்தில் அழிப்பதும், பின்னர் வாழ்க்கையை வெறுப்பதும், பிற்காலத்தில் துறவு பூணப்போகும் மணிமேகலையைப் பெற்றெடுப்பதும், முக்தி மார்க்கத்துக்குச் செல்வதும்; எல்லாவற்றுக்கும் மேலாகக் கண்ணகி, முதலில் கோவலனை,

வெறும் மனித இன மட்டத்தில், வறுமை, அயர்வு ஆகியவற்றி லிருந்து காப்பாற்றல், பிறகு மதுரையில் அநீதி இழைத்த மன்னனையும், மதுரை நகரத்தையுமே அழித்தல்; பின்னர்த் தெய்வ மாகி, இரண்டாவது முறையாகக் கோவலனை, தெய்வீக அல்லது மீட்பு மட்டத்தில் காப்பாற்றல்). ஆகையால்தான் 24ஆம் காதையில் வள்ளியாகிய அம்மா, பெண் தெய்வம், தேவதை, தேவியை நேராகவே வழிபாடு செய்யப்படுகிறது.

2. வள்ளி வழிபாட்டின் உச்சக் கட்டம் (14-15 நூற் ருண்டுகள்) அருணகிரி நாதராகப் பரிணமித்தது. அருணகிரிநாதர் (சாக்தர்) சக்தியின் உபாசகர் என்று நான் அறுதியிட்டுக் கூறு கிறேன். அவருடைய பரந்த படைப்புகளிலே தேவியையும், தேவி வழிபாட்டையும் பற்றிப் பொதுவாகக் குறிப்பிடும் எத்தனையோ பாடல்கள் சிதறிக் கிடக்கின்றன. அருணகிரியின் கருத்துப்படி மனித இனத்தின் நன்மைக்காகத் தேவி பலமுறை அவதரித்திருக் கிருள். அவள் பச்சை நிறத்தவள்; வேதங்களே உருவானவள்; அவள் அருணகிரியின் அறியாமை, துன்பம், ஆசை எல்லாவற்றை யும் நீக்கி, அவருடைய மமதையை அழித்து, அவருக்கு அருள் செய்தவள்; அவருக்குத் தாயாகவும், பாதுகாவலாளியாகவும் உள்ளவள்.

ஆயினும், நம்மைப் பொறுத்தவரை, இருவிதப் பாடல்கள் முக்கியமானவை; ஒன்றில் அருணகிரி முருகனின் அன்பு மனைவி வள்ளியின் ரூபத்தில் சக்தியை வழிபடுகிருர்; மற்ருென்றில், வள்ளியை முருகனைவிடவும் உயர்ந்தவளாகத் துதிக்கிருர். அருண கிரியின் கவிதைத் திரட்டுகள் இரண்டிலிருந்து—அதாவது திருப் புகழும், அதைவிடச் சிறியதாயினும், மிகவும் முக்கியமானதான கந்தரனுபூதியும் (ஸ்கந்த அனுபவங்கள்)—இவை இரண்டிலு மிருந்து நான் இதுபோன்ற பதினேழு பாடல்களை ஆராய்ந்து விட்டேன்.

இவ்விதம் திருப்புகழ் பாடற்றிரட்டில் கடைசிப்பாடலில் (536) அருணகிரி, தாம் எவ்வாறு தெய்வீக ஸ்பரிசம் கொண்ட வள்ளி நாயகியால் ஆசீர்வதிக்கப்பட்டார் என்றும், இந்த 'ஸ்பர்ச தீக்ஷா' எவ்வாறு தம் கர்மத்தின் அழுக்கையும் நோயையும் (வினைநோய் மலம்) தீர்த்தது என்றும் பாடுகிருர். திருப்புகழ்ப்பாடல் 796இல் வள்ளி வழிபாடு, தலைசிறந்த ரகசியச் சொல்லான 'ஓம்' என்பதின் உபதேசத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. திருப்புகழ்ப் பாடல் 1112 குங்கும—நிற மார்பகங்கள் கொண்ட குறத்தி (குறக்குலத் துதித்த வள்ளி)யின்மீது முருகப்பெருமான் காதலால் கட்டுண்டதை

வர்ணிக்கிறது. அவ்விதமே தி. பு. பாடல்கள் 397, 1237, சுப்ர மண்யருக்கு வள்ளியின்மீதுள்ள காதலையும், அவர் அவளை வழி படுவதையும் கூட வர்ணிக்கிறது. தி. பு. பாடல் 15, "பெருமானே, குறக்குலத்தின் பொற்கொடியைக் கைகள் குவித்து வணங்குபவரே (கைகுவித்துக் கும்பிடும்)" என்கிறது. அப்படியே, பாடல் 1260 : "ஓ, குமரேசா ! எண்ணரிய காடு, மலைகள் திரிந்து சோர்வடைந்த நீர் தாழ்மையுடன் அந்தச் சிறுமியின் பாதங்களை வணங்கி, தினைப் புனம் காத்தீர்". ஆனால், திருப்புகழ்ப் பாடல்கள் எல்லாவற்றிலும் அதிக விளக்கமாக முருகன் வள்ளியைத் தொழுது நிற்பதைக் கூறும் பாடல் எண் 1195 தான். "பெருமானே, நீர் வள்ளியின் தெளி வான, தெய்வீகப் பாதமிரண்டையும் பற்றி, 'என் சரியான வழி பாட்டுக்கும், விசுவாசத்திற்கும், உரியவள் இந்தச் சின்னக் குறமகளே' என்கிறீர்" எனக் கூறுகிறது.

நம்முடைய வாதத்தைப் பொறுத்தவரை, இதைவிட உறுதி யான சான்று கந்தரனுபூதியில் வள்ளியைப் பற்றிக்கூறும் 11 பாடல்களே. இவற்றில் படிப்படியாக இந்தக் கூற்றின் வளர்ச் சியும், ஏற்றமும் காணப்படுகின்றன.

கந்தரனுபூதிப் பாடல் 6இல்தான் வள்ளியைப்பற்றிய குறிப்பு முதல் முதல் வருகிறது. முருகக்கடவுளுக்குத் தம் சக்தியிடம் உள்ள வழிபாடும் விசுவாசமும் நமக்கு அதில் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றன. "பணியா எனவள் ளிபதம் பணியும், தணியா அதிமோ கதயா பரனே" ஓ, கருணையின் வடிவே, வள்ளியிடம் தணியாத ஆசை கொண்டவரே, அவள் பாதங்களில் பணிந்து சேவை புரியக் காத்திருப்பவரே.

கந்தர் அனுபூதியின் இனிய பாடல் 12 :

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள்ஒன் றுமறிந் திலனே."

'செம்மான் மகளைத் திருடும்' என்றது, வேடுவனாகிய முருகன் நள்ளிரவிலே மலைக்குறவர் கிராமம் புகுந்து தன் காதலி வள்ளி யுடன் ஓடிவிட்ட செய்தியைக் குறிப்பதே. ஆனால் மௌன உபதேசம் (வாய் பேசா அறிவுரை) பற்றிய குறிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

வள்ளியை நள்ளிரவிலே கவர்ந்ததில் ஓர் ஆன்மீக முக்கியத் துவம் இருக்கிறது. எல்லோரும் நித்திரையில் ஆழ்ந்து, எங்கும்

மௌனம் நிலவுகையில், இறைவன் வந்து, தன்னை முழுமையான மௌனத்தால் தயார் செய்து கொண்டுள்ள ஆன்மாவைப் பறித்துச் செல்லுகிறார்.

கந்தர் அனுபூதிப் பாடல் 22இல் முருகன் வள்ளியின் பாதம் பணிவதைப் பற்றிய குறிப்பு திரும்பவும் வருகிறது. பாடல் 23இல் முருகன் குறமின்கொடி (வள்ளி)யை அணைக்கிறார். பாடல் 32 இல் (பெரிய மலையைப் போன்ற) முருகன் குறக்குலப் பெண் யானை (பிடி)யை அணைக்கிறார்.

ஆனால், அதைவிட முக்கியமாக, பாடல் 35இல் ''ஓ, வானவர் கோனே, உம்முடைய சபதம் (விரதம்) நிலவென ஒளிர் முகமுடையாள் வள்ளியைத் தவிர யாரையும் துதிக்கக்கூடாது என்பதே'' என்கிறார். இந்த இடத்தில் வள்ளி ஓர் உண்மையான தேவியாகிறாள்; அவள் ஒளிரும் நெற்றியையுடைய சக்தி; அந்த வள்ளி தேவியைத் தவிர யாரையும் தொழுவதும், ஜெபிப்பதும் (துதிப்பதும்) இல்லை என்ற ஒரு தீவிர சபதத்தை (விரதம்) இறைவனே மேற்கொள்கிறார். அவர் முழுவதுமாக அவளுக்கு விசுவாசமாக இருக்கிறார். அதைவிட ஒருபடி மேலே போய், எந்தத் தேவ தேவனின் தாமரைப் பாதங்களைப்பிரம்மாவும், மற்றக் கடவுள்களும் தங்கள் சிரங்களின்மேல் தாங்குகிறார்களோ, அந்தப் பெருமானே ஓர் உண்மையான **சாக்தனை** (சக்தி உபாசகனை)ப் போல, மின்னல் கொடி போன்ற குறமகள் வள்ளியின் தெய்வீகப் பாதங்களைத் தம் தலையின்மீது தாங்குகிறார். ''குறமின்பத சேகரனே'' என்று மிக முக்கியமான கந்தர் அனுபூதிப் பாடல் 36 கூறுகிறது. இப் பாடலில்தான் **ஓங்கார** ஸ்வரூபமாகிய முருகப்பெருமான் **பிரணவ** ரகசியத்தைச் சிவபெருமானுக்கு அருளிச் செய்த குறிப்பு வருகிறது. ஆனால், இந்தத் தேவதேவனே (முருகனே), தேவியும், சக்தியும், வள்ளியும் ஆகியவளுக்குத் தம்மை முழுமையுமே அடிமையாக அர்ப்பணிக்கிறார். பாடல் 38இல் முருகக் கடவுள், குறக்குலப் பெண்ணின் கணவன் என்று மாத்திரம் குறிப்பிடப்படுகிறார். பாடல் 39இல் திரும்பவும் அவர் மின்னலையொக்கும் குறமகள் வள்ளியின் தோள்களை அணைக்கிறார். பாடல் 40இல் வள்ளியைத் தேடிக்கொண்டு மலைச்சுனைகள், அருவிகள், தினைப்புனங்கள், பரண்கள் ஆகியவற்றின் ஊடே முருகன் அலைந்து திரிந்தார் என்பதைக் கூறுகிறது.

கடைசியாக, அருணகிரியின் சக்தி உபாசனைப் பாடல்களிலேயே மிகவும் முக்கியமானதாக இருக்கலாமெனக் கருதக்கூடிய கந்தர் அனுபூதிப் பாடல் 43-க்கு வருகிறோம். அதில் இந்த ஆன்

மீகக் கவி முயற்சி (சாதனை)யின் முழுவடிவத்தையும், குறிக்கோளை அடைவதையும் (சித்தி) சுருங்கச் சொல்கிறார். இந்தப் பாடலிலே முருகப் பெருமானைக் குறிக்கையில், உயர்ந்த அணிகளையும் ஆடைகளையும் அணிந்துள்ள வள்ளி மணாளன் என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. திரு. N. V. கார்த்திகேயன் அவர்கள் சரியாகக் குறிப்பிட்டதைப்போல, வள்ளியைப் பற்றிய இந்த வர்ணனை எவ்வளவு புதுமையாகவும், இதுவரை தீட்டியதைவிட மாறுபட்டதாகவும் இருக்கிறதென்றால், அதில் ஏதோ தனிச் சிறப்பு இருக்கத்தான் வேண்டும்; இருக்கிறது. தெய்வீக சக்தியும், தேவியுமாகிய வள்ளி, முயற்சியின் (சாதனை) கடைசிக் குறிக்கோளை (சித்தி) அடைவதற்கு இன்றியமையாதவள் என இப் பாடலில் கூறப்பட்டிருக்கிறது. "ஓ, முருகப் பெருமானே, பரிசுத்தமான அணிகளும், ஆடைகளும் புனைந்த வள்ளி மணாளரே, உம்முடைய அன்பருளால் என் ஆசை என்னும் சங்கிலி அறுந்தது; பேசா அனுபூதி பிறந்தது" என்று இப் பாடல் - 43-இல் சொல்கிறார். இதில் முக்கியத்துவம் வாய்ந்த சொற்றொடர் 'அன்பருள்' தான்—அதாவது 'அன்பு, காதல், விசுவாசம், பக்தி'யைக் குறிக்கும் **அன்பு** தெய்வீகப்பரிவைக் குறிக்கும் **அருள்** - இந்த இரண்டு சொற்களின் இணைப்பு. இறைவனின் பரிவு, வள்ளியின் அன்பு - இரண்டும் சேர்ந்ததுதான் **அன்பருள்.** நூல்முகமாகப் 'பரிபாட'லில் முதல்-முறையாகக் காணப்படும் குமாரபக்தியின் மரபுக்கு ஒத்தபடி, வள்ளியானவள் காதல், அன்பு, ஆசை, பக்தி ஆகியவற்றைக் குறிக்கிறாள். வெறும் தெய்வீகப் பரிவோ அருளோ மட்டும் அருணகிரிக்கு, மேலான இறையனுபவத்திற்கு (கந்தர் அனுபூதிக்கு)க் கொண்டு செல்லப் போதுமானதாயில்லை. கந்தர் அனுபூதிப் பாடல் 43, 12-இல் "ஓ, முருகா, உமது பரிசுத்தமான **சக்தி** தேவி, வள்ளியின் மணாளா, உமது அருளாலும், சத்தியை நீரும் நாமும் வழிபடுவதால் பிறக்கும் அன்பினாலும், பக்தனின் ஆசைச் சங்கிலி அறுந்தது; பேச்சற்ற விவரிக்க முடியாத தெய்வானுபூதி பிறந்தது" என்கிறார்.

சுருங்கச் சொல்லின் வள்ளியைச் **சக்தி** என்றும், **தேவி** என்றும், முருகனைவிட 'உயர்ந்தவள்' என்றும் வர்ணிக்கும் பல இடங்கள் அருணகிரியின் பாடல்களில் உண்டு. முருகப் பெருமான் அந்தப் பொற்குறத்தியைத் தேடிக்கொண்டு வள்ளிமலைச் சாரலிலே கல்லிலும் முள்ளிலும் அலைகிறார். தழைகளைக் கட்டு கட்டாக, அந்த இளங்குறத்திக்கு ஆடை ஒன்று புனைவதற்காகக் கொண்டு வருகிறார். எப்பொழுதும் அவள் நினைவாக, அவளுடனேயே இருக்கிறார். அவளுக்கு ஒரு எடுபிடி ஆளாகவே ஆகிறார். அவளுடைய தெய்வீகக் காதலன், மணாளன், ரட்சகன் அவரே.

காலமெல்லாம் தாம் அவள் அடிமை என்று அறிவிப்பதோடு, இச் செய்தியைத் தேவர்கள் காண மேரு பர்வதத்தில் பொறிக்கச் செய்கிருர். அவளுடைய கால்களை வருடுவதோடு, அவற்றையே பிரணவ மந்திரத்தின் வித்தாகப் பாவிக்கிருர். சுருங்கச் சொல்லின், அருணகிரி, தாமே வள்ளி தேவியைச் சக்தியாக வழிபட்டிருப்ப தாகவும், காதலியைக் காதலன் பராசக்தியின் ரூபத்தில் வழிபடும் சாக்த வழிபாட்டு முறையைக் குறிப்பிட்டிருப்பதாகவும்தான் எனக்குத் தோன்றுகிறது. கந்தர் அனுபூதியிலும், சற்றுக் குறைந்த அளவில் திருப்புகழிலும், தேவி அல்லது பராசக்தியே ஊக்கமூட்டும், உயிரூட்டும் தத்துவம் என்ற முறையில் கடவுளே அவளைச் சார்ந்திருப்பதை அருணகிரி சித்திரிக்கிருர்.

அன்பு, அதாவது சக்தியைக் குறிக்கும் வள்ளியின் அழுத்த மான, உயிரூட்டும் ஒத்துழைப்பு இன்றி, மீட்பும் இறை அனுபூதி யும் சாத்தியம் அல்ல என்பதை, அருணகிரி தாம் கௌமாரன் என்ற முறையில் சித்திரிக்கிருர். அருணகிரியைப் பொறுத்தவரை முருகக் கடவுள் வள்ளியின் 'அடிமை', அல்லது அவள் பராசக்தி என்ற முறையில் இயக்கும் நாடகம் அல்லது லீலையில் பங்கேற்கும் ஒரு 'நடிகன்'.

———

## தாய்லாந்து

இங்குள்ள மாரியம்மன் கோயில் ஒரு சர்வ சமயக் கோயில். இந்தக் கோயிலில் பிற தெய்வங்களும் உண்டு. பிற சமயத்தினரும் இங்குவந்து மாரியம்மனை வணங்கிச் செல் வார்கள். கோவிலில் நடக்கும் வழிபாட்டு மந்திரங்களெல் லாம் தமிழ்மொழியிலேயே ஓதப்படுகின்றன.

இங்கு நடைபெறும் 'ஸோங்க்ரான்' என்னும் அறுவடைத் திருவிழா தமிழ் நாட்டின் பொங்கல் விழாவை ஒத்துள்ளது.

(புன்னகை பூத்த நாடு
—எம். ஆர். பாலகிருஷ்ணன்)

With best compliments from:

# USHA SPINNING & WEAVING MILLS LTD.

**Jeevan Tara Building**
**5, Parliament Street**
**NEW DELHI-110 001**

Manufacturers & Exporters of best quality Cotton, Viscose, Synthetic blend yarns, Mercerised and Bleached thread.

**Remember 'USHA' for quality yarns.**

**Sales Office:**
54/55, Gali Doman,
Bagh Diwar,
DELHI-110 006.

**Mills at:**
12/1, Milestone,
Mathura Road,
Faridabad (Hariyana)

WITH BEST COMPLIMENTS

FROM

# HEATING ENGINEERS

Manufacturers of Electric Tubular
Heating Elements

12th Floor, Vandana, 11, Tolstoy Marg,

NEW DELHI-110001.

**Factory:**

Plot No. 88
DLF Industrial Estate,
Phase I,
Faridabad.

Phone: 5788

**Phones:**

42377
45711
40511

# சாதனை புரியும் சமுதாயம்

[டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி, அமெரிக்கா]

ஒரு சமுதாயம், சாதனைகள் நிறைந்த சிறந்த சமுதாயமாக அமைய வேண்டுமெனில், அந்தக் குறிக்கோளைப் பல நிலைகளி லிருந்து நாம் அணுக வேண்டும்.

நாட்டு மக்களிடம் ஒரு பிடிப்பு, ஓர் உறுதி ஒரு குறிக்கோள் வெறி இருக்க வேண்டும். "இது என் நாடு; இந் நாட்டை வெள்ளைக்காரன் பிடியிலிருந்து விடுவிப்பேன்" என்று பொங்கி எழுந்தார்கள் மக்கள், ஆங்கில அரசுக்கு எதிராக. "சீனா, வடக்கில் நம் நாட்டில் படையெடுத்துப் பதினான்காயிரம் சதுர மைல்களை எடுத்துக் கொண்டுவிட்டது" என்று அறிந்ததும் மக்கள் கொதித்தெழுந்தார்கள். சென்னையில் ராணுவத்திற்கு ஆள் எடுக்கும் முகாம்களில் பதினாறு வயது சிறுவர் முதல் அறுபது வயது வயோதிகர் ஈறாக மக்கள் கூட்டமாக வரிசையில் நின்றனர். அதே போல 'நாட்டில் வெள்ளம் வந்துவிட்டது. கிராமங்கள் அழிந்து விட்டன' என்றதும் மக்கள் உதவி தர, உதவியைச் சேகரிக்க உடனடியாக ஈடுபட்டனர்.

இவை எல்லாம் ஒரு பொதுக் குறிக்கோள். மக்கள் அனைவ ரையும் ஒன்றுபடுத்தும் சிறந்த குறிக்கோள். இவை மனிதனது அடிப்படைத் தேவையிலிருந்து பிறந்தவை. ஒரு வெளி எதிரி உருவாக்கும் ஒற்றுமையையும் ஒரு நாட்டுப் பற்றையும், "நம் நாடு முன்னேற வேண்டும். நாம் எல்லோரும் உழைப்போம்" என்ற மொழிகள் தட்டி எழுப்பிவிடும் ஒரு வலிமையைத் தருவதில்லை. ஏனெனில் 'ஒரு செழிப்பான சமுதாயம் நாளை மலர வேண்டும்' என்பது நல்ல நோக்கம்தான். எனினும் அதில் அத்தனை பிடிப்பு இல்லை. ஒரு மனிதன் தன்னைத் தன்னலமற்றவனாகச் செய்யு மளவுக்குத் தூண்டிவிடும் ஓர் ஊக்கம் அதில் இல்லை.

அந்த நேரத்திலெல்லாம், அந்த இடர்ப்பாட்டை ஒரு தலைவன் போக்க முடியும். நாட்டு மக்கள் தாமாக எதையும் முன்

வந்து செய்து விடுவதில்லை. ஒரு நெருக்கடி, ஒரு திட்டம் மேலிருந்து வரும்போது அந்த அழுத்தம் மக்களை—சமுதாயத்தைச் செயல்பட வைக்கிறது. உதாரணம் சிங்கப்பூர் நாடு. தலைவர் லீ. சில சர்வாதிகார நாடுகள் வேகமாக வளர்ந்திருக்கின்றன வென்றால் அதற்குக் காரணம், குடியரசு முறையிலும் தலைவர்கள் இந்த வேகத்தை நாட்டில் தோற்றுவிக்க முடியும். ஒரு தலைவனுக்கிருக்கும் கற்பனை, துணிவு, தொலை நோக்கு, தன்னலமின்மை, உற்சாகம் எல்லாம் ஒரு நாட்டைப் பற்றிக்கொள்ளக் கூடும். காந்தி என்ற பெயரில் அப்படி ஒரு தலைவர் இருந்தார். இந்திய நாடு விடுதலை பெற்றது.

அத்தகைய தலைவர்கள் தன்னலத்தை மறந்து, பொது நலத்தை முன்னுக்கு வைத்து, அன்றாடக் கட்சி அரசியலைப் பின்னுக்குத் தள்ளி, நாளை உருவாகப் போகும் நாட்டை மனக்கண் முன் நிறுத்தி உறுதியோடு செயல்படுகிறார்கள். நாட்டின் எல்லாத் துறையிலும் ஓர் இயக்கம், ஒரு மறுமலர்ச்சி தென்படுகிறது. அவர்களைத்தான் காந்த சக்தி படைத்த தலைவர்கள் என்று போற்றுகிறோம்.

இதுவல்லாமல் சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் திறமை மிகுந்தவர்கள் பெரும்பான்மையாக இருக்கும்போது ஒரு நாடு சிறப்புப் பெறுகிறது; வளம் பெறுகிறது. மக்கள் வாழ்க்கை மேன்மை பெறுகிறது.

சமுதாயம் என்பது தனி மனிதர்களாலான ஒரு கூட்டம். தனி மனிதர்களது மொத்தப் பண்பே சமுதாயப் பண்பாக மலர்கிறது. பெரும்பான்மையான மக்கள் ஊமையாக, 'என்னால் என்ன செய்ய முடியும்? எல்லாம் அவர்கள் செய்கிறார்கள்' என்று இருந்தால் அந்தச் சமுதாயம் ஒரு திறமை குறைந்த உபயோகமற்ற கூட்டத்தினரால்தான் ஆளப்படும்.

சமுதாயத்தில் உயர் நோக்கங்களும் செயலும் மலர, சமுதாயம் யாரை மதிக்கிறது யாரை கௌரவிக்கிறது, யாரைப் பாராட்டுகிறது என்பதை அறிந்துகொள்வது முக்கியம். சமுதாயம் யாரைப் பாராட்டி கௌரவிக்கிறதோ அவர்களைத்தான் நாட்டின் இளைஞர் உலகம் தங்களது முன்னோடியாகக் கொள்ளும்.

ஒரு சினிமா நடிகையையும், ஒரு சினிமாப் படம் பிடிப்பவர்களையும் நாடு மதித்து விழாக் கொண்டாடுகிறது என்றால்—வாராந்திர பத்திரிகைகள்—வாராவாரம் அவர்கள் படங்களையும் அவர்களைப் பற்றிய செய்திகளையும் போட்டு நிரப்புகிறார்கள் என்றால்

அதைக் காணும் ஓர் இளைஞர் சினிமா உலகில்தான் நாட்டம் கொள்வார்.

கல்வியறிவோ, நாட்டு நிலவரமோ சரியாகத் தெரியாத ஓர் அரசியல்வாதியைத்தான் ஊருக்கு ஊர் மாலை போட்டு வரவேற்று மரியாதை செய்கிறார்கள் என்றால்—மூன்று மாதத்திற்கொரு முறை அரசியல் மாநாடு கூட்டித் திருவிழா நடத்துகிறார்களென்றால்—இளைஞர் உலகம் ஒன்று திகைத்து நிற்கும், அல்லது அவர்களைத்தான் முன்னோடியாகக் கொள்ளும்.

மனிதர்கள் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குகிறார்கள். நாட்டுக்குப் பணிபுரிகிறார்கள். கலை, சினிமா, நாட்டியத்துடன் தொழிலுக்கும், தொழில் முயற்சிக்கும், தொழிலதிபர்களுக்கும், தொழில் அறிவுக்கும் நாம் முக்கியம் கொடுத்தோமேயானால் அடுத்த தலைமுறையினரின் வாழ்வு வளமாக—வருமானம் பெருகி, வசதியான வாழ்க்கை அமைய வாய்ப்புண்டு.

சினிமாவில் நடிப்பதுதான் கைவந்த கலை என்றோ, அரசியல் மேடையில் மாலை போட்டுக்கொள்வதுதான் மனித வாழ்வின் கடைசிக் குறிக்கோள் என்றோ கருதும் எண்ணம் ஒரு தலைப்பட்ட வளர்ச்சி கொண்டதாகும். சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களும், பல துறையிலுள்ள அறிஞர்களும் மதிக்கப்படும்போது, கௌரவிக்கப் படும்போது ஒரு சாதனை புரியும் குறிக்கோள் சமுதாயம் உருவாக வழியுண்டு. நாட்டியம் பயிலும் கால்களுக்கீடாக உளிபிடித்து வீட்டிற்கு சரம் அமைக்கும் தச்சரும் முக்கியமானவர், தன் தொழிலில் சிறப்புக் கொண்டவர் என்ற நிலை வரவேண்டும்.

"எது சிறப்பு வாய்ந்தது எது உயர்வு மிக்கது?" என்பது பற்றி எழுதும் ஜான் கார்டினர் என்ற அமெரிக்க சிந்தனையாளர் கூறுகிறார் :

"சமுதாயத்தின் பல்வேறு நிலைகளிலும் உள்ள திறமை மிக்கவர்கள் தங்களது முழுத் திறமையையும் உபயோகித்து உழைக்கும்போதுதான் ஒரு சிறந்த சமுதாயம் மலர்கிறது. ஒரு சமுதாயத்திற்கு பௌதிகப் பேராசிரியர்கள் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் யந்திரங்களைப் பழுதுபார்க்கும் திறமை கொண்டவர்கள் கூட. உயர்ந்த தன்மை நாட்டின் எல்லா நிலைகளிலும் வளர்க்கப்படவேண்டும்" என்கிறார்.

எல்லாக் காரியங்களையும் நாட்டு அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எல்லாவற்றிற்கும் அரசியல்வாதியை

அண்ணுந்து பார்க்கப் பழக்கப்பட்டோர் தனி மனித முயற்சிக்கும், அரசாங்கம் செயல்படும் விதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நோக்கவேண்டும்.

சினிமா எடுப்பதும், மளிகைக்கடை, காப்பிக்கடை நடத்துவதும், விவசாயம் செய்வதும் இன்று பெரும்பான்மையான அளவுக்குத் தனி மனித முயற்சியில் இருக்கிறது. இவை எல்லாம் நாளையே அரசாங்கத்தால் எடுத்து நடத்தப்படுகிறது என்று சிறிது கற்பனை செய்து பாருங்கள். ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி கதை எழுதுவதாக—சினிமாவை டைரக்ட் செய்வதாக எண்ணிப் பாருங்கள். ஒரு துணை தாசில்தார் ஒரு காப்பிக்கடையை நிர்வாகம் செய்வதையும், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒரு பண்ணை நடத்துவதையும் கொஞ்சம் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். தனி மனித ஆர்வம், தனி மனித முயற்சி இரண்டும் இல்லாதபோது நாடு முன்னேறுவதில்லை. ஒரு சிலரின் உழைப்பைச் சமுதாயம் பங்கிட்டு நிரவுகிறது ; சொல்லப்போனுல் வறுமையையும் இல்லாமையையும் நாடு பங்கீடு செய்கிறது.

ஆகவே, ஒரு சமுதாயம் வளர, தனி மனிதர்கள் வளர வேண்டும். அவர்களுக்கு உற்பத்தியில், சாதனையில் ஊக்கம் ஏற்பட வேண்டும். சமுதாயம் அதற்கேற்ற சூழ்நிலையை அமைத்திருக்க வேண்டும்.

சாதனை என்பது இடர்ப்பாடுகளைச் சமாளிப்பது ; தொல்லைகளை நீக்குவது ; எல்லாவற்றையும் மீறி எடுத்த காரியத்தை முடிக்கும் திறன்தான் சாதனை. இன்றைய உலகில் முன்னுக்கு வரும் துடிப்பு எந்தச் சமுதாயத்திற்கு அதிகம் இருக்கிறதென்ருல் அது அமெரிக்காவில்தான் என்று அரசியல் பேராசிரியர்களும், சமுதாய இயல் பேராசிரியர்களும் ஒன்று சேர்ந்து கூறுகிருர்கள்.

முன்னுக்கு வருவது வாழ்க்கையின் கொள்கையாக அமெரிக்காவில் அமைந்துவிட்டது என்ற கருத்து நிலவுகிறது. ஹேரால்டு லஸ்கி என்ற அரசியல் பேராசிரியர் எழுதுகிருர் : ''நிறைய சம்பாதிக்க வேண்டும், செல்வம் சேர்க்க வேண்டும், பிறர் பாராட்டும்படி வாழ வேண்டும்' என்ற குறிக்கோள்தான் அமெரிக்கத் தனிநபர் வாழ்க்கையை இயக்குகிறது. அந்தக் கொள்கையின் பிரதிநிதியாக பெஞ்சமின் பிராங்க்ளின் விளங்குகிருர். பெஞ்சமின் பிராங்க்ளின் பெரிய தலைவர், ராஜ தந்திரி, புத்தகாசிரியர், தத்துவஞானி, கண்டுபிடிப்பாளர், விஞ்ஞானி, தொழிலதிபர், ஒரு கல்லூரியைத் துவக்கியவர்.''

நமது ஊரில் நாம் முன்னுக்கு வரவேண்டும் என்று ஆசைப் படவில்லையா? வசதியாக நல்ல செல்வத்துடன் வாழ வேண்டு மென்று ஆசைப்படாமலா இருக்கிறோம்? பின் ஏன் முடியவில்லை? ஏன் நாம் இல்லாத நாடாக, இரந்து வாழும் நாடாக, ஏழ்மை நாடாக வாழ்ந்து வருகிறோம்?

நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் எண்ண ஓட்டம் எங்குத் திருப்பப்பட்டிருக் கிறது, நம் தலைவர்களின் தன்மை என்ன, திறமை என்ன, தனி மனித ஆர்வத்திற்கும் முயற்சிக்கும் எது முட்டுக்கட்டையாய் இருக் கிறது என்பதை நாம் தீவிரமாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

முன்னுக்கு வருவதைப் பற்றி எழுதும்போது குடும்பச்சூழ்நிலை முக்கியம் என்று கூறுகிறார்கள் சமுதாய இயல் ஆராய்ச்சியாளர்கள். இளவயதிலேயே ஊக்கம் தந்து பாராட்டுடன், நல்ல எதிர் காலத்தைப் பற்றிய பசுமையான எண்ணங்களுடன் வளர்க்கப்படும் குழந்தைக்கு முன்னுக்கு வரும் வாய்ப்பு அதிகம். உயர்ந்த குறிக்கோளையும் குழந்தை அடையக்கூடிய குறிக்கோளையும் அரு கில் வைத்து வளர்ப்பது நல்லது.

பொருளாதார வசதியில் நடுத்தர வகுப்பில் உள்ளோர் குழந்தைகளுக்கு இந்த வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன; கீழ்மட்டப் பொருளாதார வசதி கொண்டோருக்கு இந்த வாய்ப்பில்லை. பொரு ளாதாரத்தின் கீழ்மட்டத்திலுள்ளோர் தாங்களே முன்னுக்கு வரும் முயற்சியில் ஈடுபடும்போது இது குடும்பத்திலுள்ள குழந்தை களுக்கு நல்ல முன்மாதிரியாய் அமைகிறது.

இதை நம் நாட்டுச் சாதி வகுப்புக்களோடும், ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டோடும் பொருத்திப் பார்க்கும்போது, சாதிப் பிரிவில் மேல்வகுப்பு எனப்படுவோருக்கும், பொருளாதார வசதி படைத்த பணக்காரர்களுக்கும் அதிக வாய்ப்பு இருப்பதில் வியப்பு இல்லை. செய்தித்தாள்களும் புத்தகங்களும் எளிதாக வாங்கும் வாய்ப்பு இருக்கும் வசதி உள்ளவர்களின் குழந்தைகள் வசதி இல்லாதவர்களைவிட நன்கு வளர்கின்றன. முன்னுக்கு வர வேண்டுமென்ற ஆர்வம் அவர்களிடையே அதிகமிருக்கிறது.

அதேபோல் பெண்களைவிட ஆண்களுக்கு வாய்ப்பு அதிகம். ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் மிக நன்றாகப்

படித்துத் திறமையோடு விளங்கும் பெண், வளர, வளர அவள் தாய்மை பெறவே வளர்க்கப்படுவதாகச் சமுதாயம் அவளை ஒதுக்கு கிறது. நமது சமுதாய அமைப்பு முறைகள் பெண்களுக்கு இரண் டாம் இடத்தை மட்டுமே அளிக்கிறது. தாய்மை பெறுவதுடன் அவர்கள் அறிவும் திறமையும் வளரவும், அது சமூகத்திற்குப் பயன் படவும் சமுதாயம் வழி வகுக்க வேண்டும்.

முன்னுக்கு வரவேண்டும் என்ற துடிப்புள்ள சமுதாயத்தில் வளரும் மக்கள் மற்றுஞ் சில இடர்ப்பாடுகளுக்கு ஆளாகின்றனர். வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடி காரணமாக வயிற்றுப்புண், குருதி அழுத்தம், நெருக்கடியான மனநிலை போன்றவை பலருக்கு ஏற்படுகிறது. இது முன்னுக்கு வரும் துடிப்பின் மறுபகுதி விளைவு.

மார்க்கண்டேயன் பதினறு வயது வரம்பெற்றது போல, வசதியான நல்ல வாழ்க்கை வேண்டுமா அல்லது இயலாமை இல்லாமை என்ற அவலத்தில் அவதிப்படும் நீண்டவாழ்வு வேண்டுமா என்றால் முன்னுக்குவரும் பதினறு வயது வரமே மேலென்பேன். மனிதன் தனக்கிருக்கும் அறிவை வைத்துக் கொண்டு இதனுல் உண்டாகும் சில இடையூறுகளுக்கும் வழிகாண முடியும் என்பதுதான் என் நம்பிக்கை.

சமுதாயம் தனி மனிதர்களால் ஆனது. உங்களாலும் என் ஞலும் ஆனது. சமுதாயத்தின் பிரதிநிதிகளாகிய நாம் நம்மால் ஆனதைச் செய்யவேண்டும். தனி மனிதர் முயற்சி மூலமாகவும், அரசியல் மூலமாகவும் எப்படிச் சமுதாயத்தில் ஒரு விழிப்பை ஏற் படுத்த முடியும் என்று சிந்திக்க வேண்டும்; திட்டமிட வேண்டும்; செயல்படுத்த வேண்டும்.

———

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா"*
—புறநானூறு

# 'தன்னிலை கடத்தல்'

[இந்திரா பார்த்தசாரதி
தில்லிப் பல்கலைக் கழகம்]

உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் 'காதல்' என்ற கருத்தைத்தான் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். 'தன்னிலை கடத்தல்' என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கைத் தத்துவம். மனிதன் தன்னுடைய 'ஈகோ'வை உலகில் பல முறைகளில் வெளிக்கொணர முயல்வதுதான் அவனுடைய, வாழ்க்கை அநுபவமாக முடிகிறது. மனிதனின் குறிக்கோள் கடவுள் என்று சாத்ரே சொன்னதை நினைவில் கொள்ளவேண்டும். இறைநிலையைக் காட்டுவதற்குத் தமிழில் 'கடவுள்' என்ற சொல் இருப்பது போல், வேறு எந்த மொழியிலும் இவ்வளவு சுருக்கமும் குறிப்பும் நிறைந்த சொல் இல்லையென்று உறுதியாகக் கூறலாம். சாத்ரேயின் கூற்று மனிதனின் சிந்தனையை வரையறுக்கின்றது என்பதோடு மட்டுமல்லாமல் மனிதனை உண்டாக்கிக்கொள்ளும் அவன் மதிப்புக்களுக்கு வேலியிடுகின்றது, என்பதும் முக்கியமாகும். தன்னிலை கடந்து, நீட்சே கூறுவதுபோல், உலகத்தை வெற்றி கொள்ளவேண்டும் என்பதுதான் 'ஈகோ'வின் விழைவு.

'தன்னிலை கடத்தல்' என்பதை நான் வெறும் வரட்டுத் தத்துவ நிலையாகக் கூறவில்லை. 'தன்னிலை கடத்தல்' என்பது ஒவ்வொருவருக்கும் அவரவருடைய அநுபவத்துக்குத் தகுதியான உணர்வாக அமைந்துவிடுவதுதான் இதனுடைய சிறப்பு. இந்த உணர்வை நோக்கித்தான் மனிதன் தன் பயணத்தைத் தொடங்குகிறான். ஒரு கவிஞன் பாடித்தான் ஆகவேண்டுமென்ற உள் உணர்வின் காரணமாகப் பாடுகின்றான் என்றாலும், அப் பாட்டைப் பலர் பாராட்டும்போது, அவன் மனத்தில், தன்னைப் பற்றி அவன் கொண்டிருக்கும் நினைவைக் கடந்த ஒரு நிலையில் ஏற்படுகின்ற மிகப்பரந்த தன்னுணர்வு, அவனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. தொழில் துறையில் ஈடுபட்டிருக்கும் ஒருவனுடைய குறிக்கோள் பணம் பண்ணுவதுதான் என்றாலும், அவன் குறிப்பிடத் தக்க தொழிலதிபராக மாறும்போது, சமூகத்தில் அவனுக்கு ஏற்

படும் செல்வாக்கு, அவன் தன்முனைப்பை விரிவாக்குவதின் காரணமாக அவன் இந்தப் உணர்வைப் பெறுவதற்காகத்தான் இடையருத முயற்சியை மேற்கொள்கின்றான் என்பதில் தவறில்லை. அவன் தொழிலதிபராகக் காட்சி அளிப்பது, உலகத்துக்காக அவன் மேற்கொண்ட பிறப்பு; ஆனால், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், தன்முனைப்பைப் பெரிதாக்கி அதைச் சீராட்ட வேண்டுமென்பது தான். நாம் நம்மைக் காண்பதைக் காட்டிலும், நம்மைப் பிறர் எப்படிக் காண்கின்றார்கள் என்று அறிவதில்தான் நமக்கு ஆர்வம் அதிகம். சொல்லப்போனால், இது மார்டில் லூதர் கூறுவதுபோல், 'நான் - நீ' இயக்கம்.

ஆகவே, தன்னிலை கடத்தல் என்பதற்குத் தன்னைக் கடந்து தன்னை உணர்வது என்பதோடு மட்டுமல்லாமல், தன்னை உணர்வதற்குச் சாத்தியமாக இருக்கும் தன்னிலும் வேறுபட்ட நீயும் அதாவது 'இன்னொன்றும்' என்பது தெளிவாகிறது. இது நம்மை இவ் வுலகின் தன்மையினின்றும் காப்பாற்ற உதவுகிறது. காற்று எதிர்த்தால்தான் விமானம் பறக்கும், இந்த 'இன்னொன்று' ஓரளவு எதிர்ப்பு அணியாக இருந்தால்தான் மனிதனால் இதை எதிர்த்துப் போராடும் முறையில் தன்னுடைய தனித்தன்மையை வளர்க்க முடியும். சரித்திரத்தில் நாம் காணும் சிந்தனையாளர்களையும், தத்துவ ஞானிகளையும், இந்த மனோதத்துவப் பின்னணியில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். தன்னிலை கடத்தலுக்கு 'நீ' என்பது முரணாக இருக்கும்போது, இந்தத் தடையை இந்தக் குறுக்கீட்டைச் சமாளிக்கும் முயற்சியில் மனிதனின் தன்னுணர்வு, ஆற்றல் முழுமையாக மலருகின்றது.

ஆகவே 'இன்னொன்று' என்பது தன்னிலை கடத்தலுக்கு மிக அவசியம் என்பதை அறியலாம். 'நான் - நீ' என்ற தொடர்பும் இதைத்தான் வலியுறுத்தும். நம் இலக்கியங்களில் 'அகம் - புறம்' என்று பயின்று வரும் பாகுபாட்டை இதன் அடிப்படையில்தான் பார்க்கவேண்டும். அக இலக்கியங்களில் இந்த 'நான் - நீ' உலகம் இன்னும் தெளிவாக இருக்கிறது.

அக இலக்கியங்களில் கூறப்படும் தத்துவம் காதல். காதல் என்ற குறிக்கோளை அடையும் வழியும் காதலேயாகும். உபாயம், உபேயம் ஆகிய இரண்டுமே ஒன்றுதான் என்பது இதன் பொருள். பக்தி நூல்களில் இறைவனை வணங்குதற்குரிய மிகச் சிறந்த சாதனமாக 'நாயக - நாயகி' பாவம் என்பது ஏன் கருதப்படுகின்றது என்பதை இதனால் அறியலாம்.

'நாயகி - ஆத்மா - நான்'
'நாயகன் - பரமாத்மா - நீ—'

தன்னிலை கடத்தலுக்கு 'நீ' எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை, கடவுளைத் தெளிவுறுவதற்கான 'நாயக - நாயகி' வேறு பாட்டு நிலை. இவ் வேறுபாடு மிகவும் முக்கியம். காற்றாடியைப் பறக்கவிட காற்றுத் தேவை. ஆனால், காற்று ஒரேயடியாக வீசத் தொடங்கினால் காற்றாடி பறக்காது; பூமிக்கு வந்துவிடும். அது போல் 'நாயக - நாயகி' பாவ நிலையில் 'ஐக்கியம்' (Identification) என்பது அவ்வளவு முக்கியமன்று. 'மனத்தொலைவு' (Physical distance) இருந்தால்தான் 'நான்—நீ' முரண்பாட்டில் சுவையுண்டு.

நம் பக்திப் பாடல்களில் இத்தகைய 'மனத் தொலை'வின் காரணமாக ஏற்படும் அற்புதத்தை நாம் பார்க்கின்றோம்.

பீட்டர் கோஸ்டன் பாம் என்பவர் காதலை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். ஈராஸ் (Eros) ஃபிலியா (Philia), அகேப் (Agape) என்பன அவை. 'ஈராஸ் என்பது' தலைவன்.—தலைவி தொடர்பு. 'ஃபிலியா' என்பது நட்பு சமூக நலன்களுக்கான மன விழைவு ஆகியவற்றைக் குறிக்கும். 'அகேப்', உலகம் முழுவதற்கும் நல்லதையே நாடும் காதல்.

'ஈராஸ்', என்பதுதான் காமத்துப்பால். 'ஃபிலியா' என்பது தான் அறத்துப்பால். 'அகேப்' என்பது பொருட்பால். நம்முடைய உறுதிப் பொருள்களின் பாகுபாட்டை இதன் அடிப்படையில் நாம் புரிந்து கொள்ளலாம்.

'அகேப்'பின் தீவிர முனைப்பில், அது பொருட்பாலையும் கடந்து விடுகிறது. எல்லா உயிர்களுக்கும் நல்லதை நாடும் மன நிலையாக இது அமைகிறது. இதைத்தான் வள்ளலார், 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்றார்.

———

WITH BEST COMPLIMENTS

FROM

HINDUSTAN LEVER LIMITED

Express Building

9-Bahadur Shah Zafar Marg

NEW DELHI - 110002

With the best compliments from

# TUFFLON INDUSTRIES

Manufacturers of
Transmission Rubber Belting,
Rubber sheets, Rubber Hoses
and
Rubber Pipes-PVC suctiion
and
Delivery Hoses.

**Office :**
7, Raghushri Market,
Ajmeri Gate,
DELHI-110 006.

**Works :**
468, Village & P.O.
BURARI - DELHI-110 009.

With best compliments from

STANDARD METAL & ALLOYS COMPANY

4710/14, Deputy Ganj, DELHI-110 006.

Telephone : 514563

Agents for

**M/s Prakash Products**

JAGADHRI

Mfrs. of Brass Sheets Industrial Quality.

# INDEX TO ADVERTISERS


| | |
|---|---|
| ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ், கோயம்புத்தூர்-641 018 | 29 |
| Anil International, New Delhi | (Second Page) |
| A Well Wisher | 48 |
| A Well Wisher | 58 |
| A Well Wisher | 91 |
| Chowgule and Company, Private Limited, New Delhi-110 001 | 38 |
| Elofic Industries India, Delhi | 88 |
| G. R. Motors, Wazirpur, New Delhi | 77 |
| Heating Engineers, New Delhi-110 001 | 134 |
| Hindustan Lever Limited, New Delhi-2 | 144 |
| Indian Explosives Limited | 57 |
| Indian Overseas Bank | (wrapper 4th Page) |
| Indo Nippon Chemical Company Limited, Bombay-400 020 | 87 |
| Kantilal and Company, New Delhi | 149 |
| Madras Refineries Limited, Manali, Madras-600 068 | 32 |
| Mangalore Chemicals & Fertilisers Limited, Bangalore-560 001 | 103 |
| Nirlon Synthetic Fibres & Chemicals Limited, Bombay-400 025 | 37 |
| Navin Fluorine Industries, Bombay-400 021 | 14 |
| Om Prakash Bansal & Sons, Solam (H. P.) | (Last Page) |
| Pandit Brothers, Wazirpur, Delhi | 78 |
| Perfect Pac Limited, New Delhi-110 001 | 92 |
| Pushpam International Private Limited, New Delhi-110 016 | 102 |
| Racold Appliances Private Limited, New Delhi-110 001 | 60 |
| Rural Electrification Corporation Limited, New Delhi-110 019 | 49 |
| Saraswsthi Stores, Madras-600 002 | 16 |
| Shree Yantra Private Limited, Delhi-110 054 | 15 |
| Sri Sakthi Textiles Limited, Pollachi-642 001 | 36 |
| Standard Metal and Alloys Company, Delhi-110 006 | 146 |
| Suhrid Geigy Limided, Baroda | 59 |
| Syndicate Bank, Manipal | (First Page) |
| Tata Enterprises | 35 |
| The Fertilizer Corporation of India Limited, New Delhi | 50 |
| The Indo Swiss Synthetic Gem Manufacturing Co., Ltd., | 17 |
| The Karur Vysya Bank Limited. Karur-639 001 | 30 |
| Tufflon Industries, Delhi-110 006 | 145 |
| T. V. Sundaram Iyengar & Sons Limited. New Delhi-110 001 | 31 |
| United Towers India Private Limited, New Delhi-110 001 | 104 |
| Usha Spinning of Weaving Mills Limited, New Delhi-110 001 | 133 |

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளி விழா மலர் | ரூ. | 15 00 |
| 2. | இந்திய இலக்கிய மலர் | ரூ. | 10 00 |
| 3. | கடல் கடந்த தமிழ் மலர் | ரூ. | 2 00 |
| 4. | Pathway to God through Tamil Literature by Shri G. Vanmikanathan | | 7 00 |
| 5. | திருக்குறள் (ஆங்கில உரை) | ரூ. | 1 00 |

மேற்கண்ட புத்தகங்கள் விற்பனைக்குத்
தில்லித் தமிழ்ச் சங்கத்தில் கிடைக்கும்.

**தில்லித் தமிழ்ச் சங்கம்**
தமிழ்ச் சங்கம் மார்க்
இராமகிருஷ்ணபுரம்
புது தில்லி-110 022.

WITH BEST COMPLIMENTS
FROM

# M/s. KANTILAL & CO

D-33, SOUTH EXTENSION PART II
NEW DELHI - 110 049

Manufacturing Exportors of
Hand Printed Textiles,
Handoven Fabrics
and
Garments.

★

Phone
66 8183
66 8037
66 7207

Telex :
KLCO ND. 3230
Cable :
''SADHBROS''

With best compliments from :

**OM PRAKASH BANSAL & SONS**

BANSAL ESTATE

MALL ROAD

**SOLAN**

(HP)